தொகுதி 18] பங்குனிமீ : : March, 1926 [பகுதி 3

815

பொருளடக்கம்

	பக்கம்
முருகன் வழிபாடு	81
கௌடல்ய அர்த்த சாஸ்திரம	82
காளிதாஸ மஹா கவி	8[illegible]
உத்தம ஸ்திரீ லக்ஷணம் ...	86
தேசிங்கு ராஜன் ... —	88
சத்த வீரன்	93
ஸ்ரீகிருஷ்ண கர்ணாம்ருதம் ...	97
நமது சிறு கதை — அகம்படைத்த அரசன் ...	99
இரஞ்சிதம்—(நாவல்)	108
சிறுத்தொண்டர்—(நாடகம்)	113
சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்— (3) ஸ்ரீவராஹாவதாரம் ...	115
வர்த்தமானக் குறிப்புகள்	120

OFFICE OF THE REGISTRAR OF ... MADRAS
10 NOV 1926

சித்திரப் படங்கள்

காலஞ்சென்ற ஸ்ரீமான் ஏ. எஸ். பாலசுப்பிரமணிய ஐயர்.

JL
ஜ.m211, N08VB
N26.18.3
218375

வ[illegible] போதினி சந்தாதார்க்கு ரூ. 1-8-0 விலையுள்ள புத்தகங்கள் இனமாய்த் தரப்படும்.

நாங்கள் விளம்பரம் செய்துவந்த கஞ்சியை நீங்கள் உபயோகித்தீர்களா?

ஆயிரக்கணக்கான ஜனங்கள் அதை சமீபத்தில் உபயோகித்து பலத்தையும் சுகத்தையும் அடைந்திருக்கிறார்கள். இன்புளுயன்ஸா ஜுரத்தில் ஆயிரக்கணக்கான டின்கள் உபயோகமாகி, இப்பொழுது கிடைப்பதற்குள் முதல்தரமான கஞ்சி என்று எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது. அதை உபயோகித்த ஒருவரிடமிருந்து வந்த கடிதத்தைக் கீழே எழுதுகிறோம் :—

"நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) பலத்தைத் தரும் கஞ்சியென்று நீங்கள் வெளியிட்டிருக்கும் விளம்பரத்தைப் பார்த்தபோது, அது குழந்தைகளுக்குத்தான் ஏற்பட்ட ஆகாரம் என்று நான் கேள்விப்பட்டிருப்பதால், ஏளனம் செய்தேன். கொஞ்ச நாட்களுக்கு முன்பு எனக்கு இன்புளுயன்ஸா ஜுரம் வந்து நுரையீரல் வீங்கிவிட்டது. வைத்தியர் நொய்க்கஞ்சி, ரொட்டி, தேத்தண்ணீர், ஸோடா, பால் இவைகளை சாப்பிடச் சொன்னார். ஆனால் இவைகளில் ஒன்றாவது, அடிக்கடி உண்டான வாந்தியினால் வயிற்றில் தங்கவில்லை. அந்த சமயத்தில் உங்கள் விளம்பரத்தைப் பார்த்திருந்த என் மனைவி ஒரு டின் நெஸ்லேஸ் பால் ஆகாரம் வாங்கி வந்து எனக்கு ஒரு கோப்பை கொடுத்தாள். ஆ! ஆ! என்ன அற்புதமான குணம் தெரியுமா? நான் பிறகு வாந்தி எடுக்கவேயில்லை. அதுமுதல் இதுபரியந்தம் எனது உணவு நெஸ்லேஸ் பால் ஆகாரம் (Nestle's Milk Food) தான்.

பால் அல்லது கஞ்சியை உணவாகக்கொள்ளும் எல்லா சமயங்களிலும் நெஸ்லேஸ் பால் ஆகாரம் நல்ல பலனைத்தரும்.

பெரிய டின் 1-க்கு விலை ரூபா 1-6-0 (தான்.)

வலதுபுறத்திலிருக்கும் மேல் விலாசத்திற்கு எந்த பாஷையில் எழுதி விசாரித்தாலும் பதில் அனுப்பப்படும்.



கீழ்க்கண்ட விலாசத்தைக் கிழித்து கவர் அல்லது கார்ட் மேல் ஒட்டி அனுப்பவும்.

NESTLÉ & ANGLO SWISS CONDENSED MILK CO.,
POST BOX No. 396
CALCUTTA.

Some of the Popular Tamil Publications

worthy of introduction in Schools for non-detailed study in Elementary, Secondary & High School Classes.

	ரூ.	அ		ரூ.	அ
ஷண்முக விஜயம்	0	12	ஸ்ரீமத் பாகவத ஸாரம்	1	0
நால்வர் சரித்திரம்	0	8	வியாஸ விதானம்	0	12
ஸ்ரீ பால ராமாயணம்	0	8	ஆரியமத உபாக்கியானம் 1-ம் பாகம்	0	8
தசகுமார சரித்திரம்	0	8	ஷை 2-ம் பாகம்	0	10
தஞ்சாவூர் ஜில்லாவின் வரலாறு	0	8	ஜகஜ்ஜோதி	0	10
ஸ்ரீ பால பாரதம்	0	8	பிமலா அல்லது திவான் மகள்	0	8
டிரெயினிங் ஸ்கூல், ஆரம்ப கணிதம்	1	0	பீஷ்மர் சரித்திரம்	0	6
பஞ்ச ரத்தினம்	0	12	குஹன் சரித்திரம்	0	4
மரகதவல்லி	0	12	மனுநீதிச் சோழன்	0	8
ஸ்ரீமத் ராமாயண ஸாரம்	1	0	பாண்டவ சரித்திரம் அல்லது தருமமே ஜயம்	2	4
ஸ்ரீமத் பாரத ஸாரம்	1	2			

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

பெண்களுக்கு! ஆபரணமே அழகு!

ஜர்மனி தேசத்து "டைமன் எக்ஸ்ட்ரா" என்னும் கமலம்.

சீமைக் கமலம் போன்றது. "**Diamond-extra**" மிக்கப் பிரகாசமுடையது.

லூஸ் தனி கமலம் விலை :—சன்னம் காரட்டு ரூபா.	7	8	0
" " "	5	8	0
ஷை உருசைஸ் காரட் விலை ரூபா.	4	0	0
" " "	2	8	0

கம்மல் or தோடு சிறு ஜதை விலை	ரூ. 18	முதல்	ரூ. 22
ஷை நடுத்தரம் சைஸ்	ரூ. 25	...	ரூ. 30
ஷை பெரிய சைஸ்	ரூ. 32	...	ரூ. 40

3-கல்வைத்த பேசரி விலை ரூ.	6	0	0	கிளாவர் ஜதை கடுக்கன்	ரூ. 12
8-கல்வைத்த பேசரி விலை ரூ.	9	8	0	ஒத்தக்கல் கடுக்கன்	ரூ. 16
கிளாவர் மூக்குத்தி விலை ரூ.	5	0	0	புலாக்கு	ரூ. 12
மூக்கு முத்து விலை ரூ.	4	0	0	மூக்குத் திருகு	ரூ. 4, 5

நகைகள் பவுன் தங்கத்தில் கட்டியவை.

கேட்லாக் தமிழில் கிடைக்கும். இதர நகைகளும் ஆர்டர்மேல் செய்துகொடுக்கப்படும். மாட்டல், பில்லை, முகப்பு, அட்டிகை முதலியவைகள் இதே ஜர்மன் கமலத்தில் கட்டித் தரப்படும். அசல் சீமைக் கமலம்போலவே யிருக்கும்.

கிரந்தி. சுப்ரமண்யஞ் செட்டி & சன்,
69-நாராயண முதலி தெரு, சௌகார்பேட்டை, சென்னை.

A. (No. 963)

Aletris Cordial

அல்லெட்டரிஸ் கார்டியல்

ஸ்திரீகளின் பலஹீனத்தைத் தீர்க்கும் மருந்து

உலகெங்கும் வைத்தியர் யாவராலும் ஸ்திரீகளின் சகலவிதமான நோய்களுக்கு உபயோகிக்கப் படுவது. ருது அடையபிற்கும் சிறுமிகளுக்கும் இம்மருந்து மிகச் சிறந்தது.

அளவு:—தேயிலைக் கரண்டி மருந்தை, உண்ட பின்னும், நித்திரைக்குப் போவதற்கு முன்னும் உட்கொள்ளவேண்டும். உஷ்ணமான ஜலத்துடன் கலந்துகொண்டால் விசேஷ குணம் உண்டு.

Celerina

ஸிலரீனா

பலமற்றவர்க்குக் கைகண்ட மருந்து

உண்பதற்கும், உறங்குவதற்கும் ஒரு மணி முன்பு ஒரு தேயிலைக் கரண்டியளவு, நாளுக்கு மும்முறை சாப்பிட்டால், மனத்தளர்ச்சி, அலட்டல், புரட்டல், தூக்கமில்லாமை, மூர்ச்சை, மயக்கம், நரம்புக்கேடா லாகும் அஜீர்ணம், பலஹீனம், குடிக்கேடால் விளையும் நோய்கள் இவை யாவும் ஒழிந்து உடம்பு புஷ்களமடையும். லாகிரி வஸ்துக்கள் கலவாது, மூலி வஸ்து விருத்தியடைய, கவனத்துடன் செய்யப்பட்டது.

இப்பிரசித்திபெற்ற மருந்துபோல் போலியாக இருக்கும் மருந்துகளைப் பார்த்து ஏமாறாமல்

RIO CHEMICAL COMPANY, NEW YORK CITY, U. S. A.

என்ற லேபிளைப் பார்த்து வாங்கவும். இது மருந்துக்கடைகளில் எங்கும் கிடைக்கும்.

(A. No. 2278)

பாலாஜி அண்டு கம்பெனி, காசி.

புதிய சரக்குகள்! உடனே எழுதுங்கள்!! சகாய விலைகள்!!!

புதுமாதிரி பட்டுப் புடவைகள்

இந்தப் புடவைகள் மெல்லிய பட்டினால் பளபளப்பாகவும் அழுத்தமாகவும் நெசவு செய்யப்பட்டுள்ளது. சிவப்பு, பச்சை, ரோஜா, பூநீலம் முதலிய கலர்களில் விழிம்பு முந்திகளும் அழகான ஜரிகைவேலையும் செய்யப்பட்டுள்ளது. 8 கஜம் 2½ முழம் அகலம், புடவை 1-க்கு விலை ரூ. 25, 30, 35-முதல் 45-வரை.

பட்டு ரவிக்கைகள்

உடல் சாதா விழிம்புக்கு அழகான ஜரிகைவேலை செய்யப்பட்டு பலவித புதுமாதிரி கலர்களில், ரவிக்கை 1-க்கு விலை ரூ. 3-முதல் ரூ. 5-வரை.

விளையாட்டுப் பாத்திரங்கள்

பித்தளை வெங்கலத்தால் செய்த 32-வித சாமான்கள் அடங்கியதும், குழந்தைகளுக்கு சந்தோஷத்தை உண்டுபண்ணக் கூடியதுமானவை :

1 நெ. பெரிய செட் 1-க்கு	ரூ.	5 0 0
2 நெ. மத்திம செட் 1-க்கு	ரூ.	3 0 0
3 நெ. சிறிய செட் 1-க்கு	ரூ.	2 8 0

அன்னபூர்ணி அம்மன் ஸ்தோத்திரம் இனாம்.

Balajee & Co., Silk Merchants,

Benares City.

218376

உ. வேலுமயிலுந் துணை

ஷண்முக விஜயம்

திருப்புகழ் விருத்தியுரை

படங்களுடன்

விலை அணா 12

முதல் தொகுதி : : 6-படை வீடுகள்

டெமி அளவில், 64-பக்கங்கள்கொண்ட 12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது. கிளேஸ் காகிதத்தில் ஒரு பதிப்பும், பெதர்வெயிட் எனும் விலையுயர்ந்த காகிதத்தில் ஒரு பதிப்பும், ஆக இரண்டு பதிப்புகள் வெளிவருகின்றன.

வருஷ சந்தா (தபாற் செலவுடன்)

கிளேஸ் காகிதப் பதிப்புக்கு ரூ.	4	12	கிளேஸ் தனிச்சஞ்சிகை அணா		7
பெதர்வெயிட் காகிதப்பதிப்பு ,,	6	0	பெதர்வெயிட் ஷை	,,	9

பத்திரிகை அபிப்பிராயங்கள்

சுதேசமித்திரன்.— * * நமக்குக் கிடைத்துள்ள விருத்தி உரை, முதனூலின் அழகிற் கியைந்ததா யிருக்கிறது. முருகன் அழகன், திருப்புகழ் அழகியது. இந்தப் புத்தகமும் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது. * சில பாடல்களின் உரை, மிக்க விசேஷமானதென்று அறிவிக்கப்பட்டோம். ஆனால் ஒவ்வொரு பாட்டின் உரையும் அப்படியேதான் இருக்கிறது.

லோகோபகாரி.— * * இது கண்ணுக்கும் கருத்துக்கும் இன்பம் விளைக்கிறது. அருணகிரிநாதர் அருளிச்செய்த திருப்புகழின் பெருமையை நாம் சொல்லவல்லோ மல்லேம். அதனைத் தமிழ் மறை என்பார் அறிஞர். பண்டிதரும் பாமரரும் போற்றும் திருப்புகழுக்கு உரையில்லாத குறை நெடுநாளாக இருந்து வந்தது. அந்தக் குறை முருகன் அருளால் இப்பொழுது நீங்கிவிட்டது. * * இதனைப் படிப்போர் திருப்புகழின் உட்கருத்தைத் தெளிவாக அறிந்துகொள்ளலாம். * * முருகன் அடியார்களும் திருப்புகழ் விருப்புடையார்களுமான தமிழர்கள் இதனை ஆதரிக்கவேண்டு மென்பதை நாம் சொல்வது மிகையாம். * * இந்த நன்முயற்சியைத் தமிழர்கள் போற்றுவார்களாக.

ஸ்வராஜ்யா.— * * பெயர் மாத்திரையில் விருத்தியுரையாய் இராமல், உட்பொருளையும் பலரும் அறியக்கூறும் விருத்தியுரையாய் உளதென்பதைக் குறிப்பிடவேண்டும். பொருள் விளங்காது திருப்புகழைப் பாடவும் படிக்கவும் பேரவாக் கொண்டிருப்போர், இவ்விருத்தியுரை கண்டு இதயம் கனிவரெனக் கருதுகிறோம்.

குமரன்.— * * அருணகிரிநாதர் அருளிய திருப்புகழ் போன்ற நூல்களுக்கு நல்ல பதிப்புகள் வெளியிடப் பெறுவதும் ஓர் ஆனந்தமே யாகும். இத்தகைய ஆவல் அல்லயன்ஸ் கம்பெனியாருக்கு எற்பட்டதைப்பற்றி நாம் மகிழ் வெய்துகிறோம். * * தமிழைப் புதிதாகக் கற்கும் மாணவருக்கும் திருப்புகழ் படிப்பதில் துணை செய்வதாகும். பொதுவாகத் தமிழ் மக்களும், சிறப்பாக முருகக் கடவுளது அடியார்களும் திருப்புகழுக்கு விருத்தியுரை காணும் நன்முயற்சியினை ஆதரிப்பார்களென்று நம்புகிறோம்.

இந்து சாதனம்:—* * உரை மிக நுட்பமாகவும் விரிவாகவும் பல தக்க பிரமாண சகிதமாகவும் இனிது எழுதப்பட்டுள்ளது. பிரதி, கண்டோர் கண்கவரும் வனப்பினதாய் அழகுற அச்சிடப்பட்டிருக்கின்றது. சிவபெருமானுக்குக் குமாரக் கடவுள் பிரணவப் பொருளை ஓதிச் சிவகுருமூர்த்தமான திருவுருவப் படம் திருவருள் விலாஸத்தோடு கூடியனவாய் எவ்வகைக் கன்னெஞ்சினரையும் கண்ட மாத்திரத்தே உருகச்செய்யும் பான்மையனவாய் அமைக்கப்பட்டுள்ளது.

ஸமரஸ போதினி:—* * * திருப்புகழுக்கு இதுவரை, நமக்குத் தெரிந்தமட்டில், இத்தகை உரை இலது. இவ்வுரை மிகவும் அழகிய நடையில், பொருள் நுட்பங்களை மழுப்பிவிடாது நன்குவிளக்கி எழுதப்பட்டிருக்கின்றது. பொதுவாகவே இஃது புலவர் விருந்தாகத்தக்கதே என நாம் கூறுவோம்.

விலாஸம்:— அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

JL NO8VB 18.3

கந்தபுராணச் சுருக்கம்

மூலமும் பொழிப்புரையும் விருத்தியும்

இந்நூல் ஸ்ரீமத் - சம்பந்தசரணாலய சுவாமிகளால் சொற்சுவை, பொருட்சுவை, சந்தச்சுவை முதலியன ததும்ப 1000 பாடல்களாகப் பாடப்பட்டது. கடல்போல் பரந்து கிடக்கும் பெரிய கந்தபுராணக் கதையை இனிது விளக்குவது. மூலத்திற்கேற்ற பொழிப்புரையும், விருத்தியும் பலநூற் பிரமாணங்களுடன் எழுதப்பட்டுள்ளன. டிம்மி 8-பக்கம் அளவில் நல்ல காகிதத்தில் அச்சிடப்பட்டது. 496 பக்கங்கொண்டது.

காலிகோ பயிண்டு விலை ரூ. **3**

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் ...	0	12	0
குசலோபாக்கியானம் மூலமும் அரும்பதவிளக்கமும்...	0	12	0
உத்தியோகம் (நாடகம்)	0	6	0

முருகவேள் புத்தகசாலை, இராயப்பேட்டை, சென்னை.

பாதி விலை! **ஒரு மாதம் வரை** பாதி விலை!!



அசல் விலை ரூ. **14**.

பாதி விலை ரூ. 7.

22 காரட்ரோல்டு கோல்டு கைக் கெடியாரம் 5-வருஷம் உத்திரவாதம். பார்வைக்கு அழகாயிருக்கும். இக் கெடியாரங்களில் எம்மாதிரி ஷேப் ஆனபோதிலும் அனுப்பி வைக்கப் படும். பாதி விலை ரூ. 7.

ஒவ்வொரு கடியாரமும் ஒரு பட்டுப் பட்டையுடன் அனுப்பி வைக்கப்படும்.

☞ ஸ்வான் ஹவுஸ்,

தபால் பெட்டி 508,

பி. டி. மதராஸ்.

A. (No. 2700)

ஷண்முகம் மூக்குத்தூள்

70-வருஷ காலமாக குணத்தில் உயர்ந்ததாயும், மணத்தில் இதர பொடியைவிட மேன்மையாயு மிருந்து, இந்தியா, பர்மா, ஸிலோன் முதலிய இடங்களில் ஏராளமாய் விற்பனையாய் வருகிறது.

4 பலம் **13** அணா. **5** பலம் **15** அணா.

ஆர். கே. பரிமள மூக்குத்தூள் **1**புட்டி அணா **4.**

(போஸ்டேஜ் உள்பட)

மறந்துவிடுமுன் எழுதவும்

ஷண்முகம் ஸ்னப் கம்பெனி, லிமிடெட்.

தபாற்பெட்டி நெ. 140, சென்னை.

பெரிய கம்பெனி! பெரிய கம்பெனி!!

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி

நாணயமான சரக்குகள்.

சுத்தமான பட்டு! சகாய விலை!!

உயர்தரமான பட்டு பீதாம்பர சேலைகள் ரவிக்கைகள்

துப்பட்டாக்கள், வெண்பட்டு வேஷ்டிகள், அங்கவஸ்திரங்கள், உருமால்கள் முதலிய எல்லாத் தினுசுகளும், சிவப்பு, ரோஸ், ஊதா, பச்சை, மஞ்சள், மேகவர்ணம், வெள்ளை, சிலேட் கலர், ஆரஞ்சு, கத்தரிப்பூக் கலர், கிரிம்ஸன் முதலிய எல்லா இங்கிலீஷ் கலர்களிலும் மிகவும் சரச விலைக்குக் கிடைக்கும்.

பட்டு பீதாம்பர கேட்லாக் இனாம்.

உடனே எழுதுங்கள்.

Address.—Manager, (A. No. 2914)

Silk Pitamber Co., *Benares City.*

விலாஸம்:—மானேஜர்,

பட்டு பீதாம்பர கம்பெனி, ஸ்ரீகாசி.

குணப்படுத்துவதற்கு மாத்திரமல்ல

(இன்னும்)

வியாதிகள் அணுகாவண்ணம் தடுப்பதற்கும்

எங்கள்

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

பெரும் புகழும் பெற்றிருக்கின்றன!

அஜீரணம், பலஹீனம், மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, மூளைக்கொதிப்பு இன்னும் இவைபோன்ற மற்ற வியாதிகளை குணப்படுத்தி அவைகளை அணுகாதபடி செய்யும்.

32-மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூபாய் 1.

விவரம் வேண்டுவோர்

கீழ்க்கண்டவருக்கு எழுதவும்:—

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26-பிராட்வே, மதராஸ்.

இனாம் ! இனாம் !! முற்றிலும் இனாம் !!!

'C' ரிஜிஸ்டர் டைம்பீஸ் இனாம்



'C' Regd. டைம்பீஸ் இனாம்

எங்களின் "தாராலீவர் 18 காரட்டு ரோல்டு கோல்டு, பின்புறம் சித்திரவேலை செய்யப்பட்ட பாக்கட் கடியாரம் வாங்குகிறவர்களுக்கு "C" டைம்பீஸ் இனாமாக அனுப்பப்படும். விலை பாக்கட் கடியாரம் 1-க்கு இனாமுடன் ரூ. 5. இக்கடியாரத்தில் உள்ள டயலின்பேரில் ஐந்து வருஷம் உத்திரவாதம் என்று அச்சிடப்பட்டிருக்கிறது, முந்துங்கள்.

காப்டன் வாட்ச் கம்பெனி,
தபால் பெட்டி நெ. 265, மதராஸ்.

லோகோபகாரி

முப்பத்திரண்டு ஆண்டுகளாய் நிலவும்

வாரப் பத்திரிகை.

பத்திராதிபர்:—பரலி - சு. நெல்லியப்ப பிள்ளை.

தமிழர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் பெறுவதற்காகப் பாடுபட்டு வரும் வாரப் பத்திரிகை. உலகத்தில் அந்தந்த வாரத்தில் நடக்கும் செய்திக ளெல்லாம் லோகோபகாரியில் சுருக்கமும் விளக்கமுமாக வெளிவரும். சிறந்த பாடல்களும், சித்திரப் படங்களும் அவ்வப்போது வெளிவரும். பாரத தேசம் சகல துறைகளிலும் சுயராஜ்யம் பெற்று, லோக மெல்லாம் க்ஷேமம் அடைய வேண்டுமென்பதே லோகோபகாரியின் நோக்கம். உலகத்தில் அற நெறியும் அன்பு நெறியும் வளர்ந்து இன்பம் நிலவுமாறு லோகோபகாரி நெடுங்காலமாக உழைத்து வருகிறது. இதனைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும்.

வருஷ சந்தா ரூபாய். 4—0—0 வெளி நாட்டுக்கு ரூபாய். 6—0—0.

மாதிரிப் பிரதி இனாம்.

லோகோபகாரி பத்திரிகாலயம்,
கோமளேசுவரன் பேட்டை, சென்னை.

திருப்புகழ்
பாராயணத் திருமுறை

"திருப்புகழ்ப் பாராயணத் திருமுறை" என்னும் இந்நூல் இத்தமிழ் நாடெங்கும் திருப்புகழ் என்னும் தேனை, மாரியாகப் பொழிபவரும், திருப்புகழடியார் திருவடிச் சென்னியார் என்னுங் காரணப் பெயர் வாய்ந்தவருமாகிய பிரம்மஸ்ரீ **வள்ளிமலை ஸ்வாமி சச்சிதாநந்தா** அவர்களால் தொகுக்கப்பட்ட தொன்றாகும். திருப்புகழ்த் தொகுப்புக்கள் பலவுளவே, இத்தொகும்பு ஏனோ எனின் திருப்புகழ் என்னும் அருட் பிரபந்தமானது ஸகல ஜீவர்களுக்கும் இம்மை மறுமை வீடுகளைத் தரும் கற்பக விருக்ஷமாகும். அதில் ஒவ்வொரு சந்தப்பாவும் ஒவ்வொரு மஹா மந்திரமாகும். ஆதலாற்றான் திருப்புகழ் படிப்பதை "பாராயணம்" என்று பெரியோர் வழங்குகின்றார்கள். இப்பாராயணத்தினால் வீட்டின்ப மொன்றினையே நாடும் உத்தமாதிகாரிகளுக்கு இம்மைச் சுக முண்டாவதோடு, பல கோடி சமயப் பொதுக் கடவுளாகிய முருகப் பெருமானது அருளும், தரிசனமும், ஞானமும், அனுபவமும் உண்டாகும். இம்மை, மறுமைகளை நாடும் மத்திய அதிகாரிகளுக்கு இகத்தில் சகல செல்வ போக மிக்க பெரு வாழ்வும், பரத்தில் வானவர் போற்றும் துறக்கவின்பமும் உண்டாகுமென்பது திண்ணம். இம்மைப் பயனொன்றையே நாடும் அதம அதிகாரிகளுக்குக் கல்விப் பெருக்கும், நோயற்ற வாழ்வும், குறைவற்ற செல்வமும் இன்னவை பலவும் ஏற்படும். இதில் அணுவளவும் ஐயமின்று.

இந்நூல் திருப்புகழ் பாராயணம் செய்யும் திருப்புகழடியார்க்கும், திருப்புகழ் சங்கங்களுக்கும் மிகவும் இன்றியமையாததாகும். இந்நாலில் திருப்புகழேயன்றி ஸ்ரீ அருணகிரிநாதரின் பிரபந்தங்களாகிய கந்தரலங்காரம், கந்தரந்தாதி, கந்தரநுபூதி, திருவகுப்பு முதலியவற்றினின்றும் பொருந்திய கருத்துக்களுடைப் பல பாக்களும் தொகுத்துச் சேர்க்கப்பட்டுள்ளன. 10-படங்களுடன் ரூ. **1**

வியாஸ விதானம்

பசு, விகடப் பறவை, புலி, தென்னைமரம், கடிகாரங்கள், காவிரி, விடுமுறை யாத்திரை, வீடுநெருப்புப்பற்றி எரிதல், வித்தியாரணிய சுவாமிகள், மைகேல் பாரடே, தர்மாபிலேக் காவல், சிவாஜியும் அப்ஜூல் கானும், ஆறுகள், தபால் ஒழுங்கு, கம்பியில்லாத் தந்தி, பள்ளிக்கூடப் பூர்ண ஏற்பாடு, பழகப் பழகப் பாலும் புளிக்கும், குரங்கு கையில் பூமாலை அகப்பட்டாற் போல, ஜீவகாருணியம், பொய்புரைத்தல், மிதச்செலவு, போட்டி, மனோராஜ்யம், கம்பர், வெர்ட்ஸ்வொர்த், சீதோஷ்ண ஸ்திதியும், மனோநிலையும். இவை முதலாகிய விஷயங்களைப்பற்றிய அருமையான வியாஸங்கள் கொண்டது. சித்திரப்படமும் அடங்கியுள்ளது.

இதன் விலை அணு **12** : : விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம் அணு **9**.

ஸ்ரீமத் பாரத ஸாரம்

மஹாபாரதம் பூராவும், எளிய நடையில், இனிய தமிழில் எழுதப்பட்டது. இம்மாதிரிப் புத்தகம், இவ்வளவு குறைந்த விலையில் இதுவரை ஒருவரும் பிரசுரிக்கவில்லை. புத்தகத்தை படித்தபின்னர்தான் இதன், சிறப்புத் தெரியவரும். நமது காவியங்களுள் மிக்க உயர்ந்ததான மஹாபாரதக் கதை பூராவும், 256-பக்கங்களில் (ஆப்டோன் படங்களுடன்) அச்சிடப்பெற்றது.

இதன் விலை ரூ. **1-2-0** : : விவேக போதினி சந்தாதார்க்கு மாத்திரம் ரூ. **1—0—0**

விலாஸம்:—மானேஜர், விவேகபோதினி ஆபீஸ், மயிலாப்பூர், சென்னை.

(A. No 1819) THE MOST CHARMING PERFUME

OTTO DILBAHAR (Registered.)

எல்லோருடைய மனதையும் அதியுற்சாகப்படுத்தும் சுகந்தம்

ஆடோ தில்பஹார் (ரேஜிஸ்டர்ட்.)

நீடித்திருக்கக் கூடியதும், நிகரில்லாத உன்னத வாசனையுடையதும், மனதிற்கு சந்தோஷ முண்டாக்கக் கூடியது. ஆல்கஹால், சாராயம் முதலிய சம்பந்தமில்லாத பொறக்கான சில சுகந்த புஷ்பங்களிலிருந்து இறக்கிய சத்தினால் சேர்க்கப்பட்டது. உம்முடைய கைகுட்டையில் சில துளிகள்விட, புஷ்பத்தோட்டத்தின் மத்தியிலிருந்து அனுபவிக்கக்கூடும் வாசனையை தரக்கூடியது. விவாக காலங்களிலும், பூஜாகாலங்களிலும், இன்னும் மற்ற செண்டுகள் அத்தர்களைவிட இத்த ஆடோ டில்பஹார் அதிக இன்பத்தைக் கொடுக்கும்.

அடியில் வருமாறு அளவு புட்டிகளில் நிறப்பி விற்கப்படுகிறது.

பெரிய புட்டி	1-க்கு	(4-டிராம் அல்லது $\frac{1}{2}$-அவுன்ஸ்)	விலை ரூ.	2—0—0
வேறு	,,	(2-டிராம்)	,,	1—4—0
நடுத்தரம்	,,	(1-டிராம்)	,,	0-12—0
சிறிய புட்டி	,,	($\frac{1}{2}$-டிராம்)	,,	0—8—0
மாதிரி	,,		,,	0—2—0
வாசனைக் கார்ட் 1-க்கு			,,	0—1—0

பிரசித்தமான எல்லா வியாபாரிகளாலும் விற்கப்படுகிறது. இதே மாதிரி அநேக பெயர்கள் மார்க்கட்டில் இருப்பதால், வாங்கும்போது புட்டிகள் பேரில் ஆடோ டில்பஹார் என்னும் பெயர் இருக்கிறதா என்று கவனித்துப் பார்த்து ஜாக்கிரதையுடன் வாங்கிக்கொள்ளவும்.

சோல் ஏஜண்டுகள் :—

ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸித், மார்க்கட், பம்பாய்.



காலஞ்சென்ற ஸ்ரீமான் ஏ. எஸ்.
பாலசுப்பிரமணிய ஐயர், பி.ஏ., பி.எல்.

விவேக போதினி

" எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி **18** { குரோதனஹூ பங்குனிமீ :: **1926**-ம் ஹூ மார்ச்மீ } பகுதி **3**

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

தெருவினில் நடவா மடவார்
திரண் டொறுக்கும் வசையாலே
தினகா னெனவே லையிலே
சிவந் துதிக்கும் மதியாலே
பொருசிலை வளையா இளையா
மதன் றொடுக்குங் கணையாலே
புளகித முலையா ளலையா
மனஞ் சலித்தும் விடலாமோ?
ஒருமலை யிருகூ றெழவே
யுரம் புகுத்தும் வடிவேலா!
ஒளிவளர் திருவே ரகமே
யுகந்து நிற்கும் முருகோனே!
அருமறை தமிழ்நூ லடைவே
தெரிந் துரைக்கும் புலவோனே!
அரியரி பிரமா தியர்கால்
விலங் கவிழ்க்கும் பெருமாளே!

(ப-ரை.) ஒருமலை-கிரௌஞ்சமென்னும் மலை யானது, இருகூறு எழவே-இரண்டு கூறுகளாகப் பிளவுபடுமாறு, உரம் புகுத்தும் வடிவேலா-அதற் குள்ளே செல்லும்படி வடித்துக் கூர்மையாகவுள்ள வேலாயுதத்தைச் செலுத்தியவனே!, ஒளிவளர் திரு வேரகம் உகந்து நிற்கும்-மிகுந்த ஒளிபெற்று விளங் கும் திருவேரகத்தின் மீது ஆசையுள்ளவனாய் அத்த லத்தில் எழுந்தருளி யிருப்பவனே!, அருமறை தமிழ் நூல் அடைவே தெரிந்து உரைக்கும் பலவோனே-வடமொழியிலுள்ள அரிய வேதங்கள் தமிழ் நூல்கள் எல்லாவற்றையும் அறிந்து போதிக்கும் புலவனே!, அரி அரி பிரமாதியர் கால் விலங்கு-தேவேந்திரன் திருமால் பிரமதேவர் முதலிய தேவர்களுடைய கால்களில் பூட்டப்பெற்ற விலங்குகளை, அவிழ்க்கும்-கழற் றின, பெருமாளே-பெரியோனே!, தெருவினில் நடவா மடவார் திரண்டு ஒறுக்கும் வசையாலே-தெரு வினில் உல்லாசமாக நடமாடும் பெண்கள் கூடித் திரண்டு கடிந்துபேசும் வசைச்சொற்களினாலும், தினகரன் என வேலையிலே சிவந்து உதிக்கும் மதி யாலே-சூரியன் என்று சொல்லும்படி வெப்பமான கிரணங்களுடன் சமுத்திரத்திலிருந்து சிவந்த நிறத் துடன் உதிக்கும் சந்திரனாலும், பொரு சிலை வளையா இளையா மதன் தொடுக்கும் கணையாலே-போருக் குரிய வில்லை வளைப்பவனும் எவராலும் தோல்வி யடையாதவனுமான மன்மதன் விடும் அம்புகளி னாலே, புளகித முலையாள் அலையா மனஞ்சலித்தும் விடலாமோ-விரகதாபத்தினால் புடைத்தெழும் தனபாரங்களையுடைய (நினது நாயகியான) அடி யேன், கலக்கமுற்று மனச்சோர்வடைதல் தகுதியோ?

(வி-ரை.) தேவேந்திரன், திருமால், பிரமதே வர் முதலிய தேவர்களது காலிலிட்டிருந்த விலங்கு களைக் கழற்றி, அவர்களைச் சிறையினின்றும் மீட்ட பெரியோனே! வடமொழியிலுள்ள வேதங்கள் தென்மொழியிலுள்ள ஞானநூல்கள் இவைகளை யெல்லாம் உணர்ந்து போதிக்கும் ஞானகுருவே! மாயையின் சொரூபமான கிரௌஞ்ச மலையை இரு கூறுகளாகப் பிளந்தெறிந்தவனே! அஞ்ஞானவிருள் நீங்கப்பெற்று ஞானவொளி வீசும் இதயத்தையே உறைவிடமாகக் கொண்டவனே! உன்மீது காதல் கொண்டுள்ள அடியேன் விரகதாபத்தினால் அயர்ந்து வாடுகிறேன். என் கால்களில் மும்மலங்களாகிய விலங்குகள் பூட்டப்பட்டிருக்கின்றன. ஆசையினால் நான் வந்து உன்னைச் சேர முடியவில்லை. அதை யறிந்திருந்தும் நீ அடியேனைக் கலங்கும்படி விட்டுச் சும்மாவிருத்தல் நீதியோ? அடியேன் இஷ்டப் பட்டா வந்து சேர்ந்தேன் மாயை நிறைந்த இவ்வுலக வாழ்க்கையில்? அதில் விழும்படி எனக்கு விதித்தது நீ யல்லவா? விலக்கவொணாத தளைகளை அடியேன் கால்களிற் பூட்டி, பிறகு அத்தளைகளை நீக்கிக் கொள்ள முடியாமல் அடியேன் தியங்குவதைக்கண்டு அடியேனை வெறுத்தல் தகுதியோ?

சுழலு மிசைவேண்டி வேண்டா வுயிரார் கழல்யாப்புக் காரிகை நீர்த்து.

விவேக போதினி

தொ. 18] குரோதனஹு பங்குனிமீ [ப. 3

கௌடல்ய அர்த்த சாஸ்திரம்

KAUTALYA'S ARTHA SASTRA

முன் ஸஞ்சிகையில் கௌடல்ய அர்த்த சாஸ்திரத்தின் முதல் அதிகாரணத்தில் 1-வது அத்தியாயத்தில் அடங்கியுள்ள முக்கிய விஷயங்களின் அட்டவணை குறிப்பிடப்பட்டது. இனி அவ் விஷயங்களைப்பற்றிக் கூறியுள்ளதில் ஸாராம்சங் களை எடுத்துரைப்போம்:—

(1) வித்தியா ஸமுத்தேசம் :— விநயாதிகாரம் என்னும் பாகத்தின் முதல் பிரகரணமாகிய இவ்விஷயமானது, 2, 3, 4 அத்தியாயங்களில் விவரிக்கப்பட்டுள்ளது.

"வித்தியைகள், ஆன்வீக்ஷிகீ, த்ரயீ, வார்த்தா தண்டநீதி என்று நான்கு வகைப்படும்" என்பது கௌடல்யனது அபிப்பிராயம். இது சம்பந்தமாக இவருக்கு முன்னருள்ள அர்த்த சாஸ்திர நூலாசிரியர்களின் அபிப்பிராய வித்தியாசங்களை எடுத்துக்கூறி, இறுதியில் தமது ஸித்தாந்தத்தை வெளியிடுகிறார்.

(a) வித்தியைகள், த்ரயீ, வார்த்தா, தண்டநீதி என்று மூன்று வகுப்புள்ளவைகளென்பதும், ஆன்வீக்ஷிகீ என்பது த்ரயீ என்பதிலுள்ள அர்த்தங்களையே விசாரித்துக் கூறுவதால் அது தனிமையான வித்யையில்லையென்பதும், த்ரயீயில் அடங்கியுள்ளது என்பதும் மனுசிஷ்யர்களின் மதம்.

(b) பிருஹஸ்பதி சிஷ்யர்களோ, வித்தியையானது வார்த்தா, தண்டநீதி என இருவகைப் பட்டதெனவே அபிப்பிராயப் படுகின்றனர். த்ரயீ அல்ப பயனை யளிக்கக் கூடியதென்றும், இதை அப்பியஸிக்காம லிருந்தால் உலக தந்திர ஞானத்தில் தேர்ந்தவனையும் நாஸ்திகர்கள் என்று பெரியோர் நிந்திப்பார்களாகையால், அவ்வித நிந்தையை நீக்கும்பொருட்டு மாத்திரம், த்ரயீ என்பதைக் கற்கவேண்டுமேயல்லாது, இதைத் தனிமையான ஒரு வித்யை எனத் தகாது என்பது இவர்களது கொள்கை.

(c) "தண்டநீதி ஒன்றுதான் வித்யை யாகும். மற்றைய வித்யைகளின் பலன்கள் இதைப் பொருத்திருக்கின்றன." இது சுக்கிராசாரியரின் சிஷ்யர்களின் மதம்.

மேற்கூறியுள்ள மனு முதலானோரின் வித்யை விஷயமான அபிப்பிராயங்களைக் கௌடல்யன் ஏற்றுக்கொள்ளாமல், தமது மதத்தைக் கூறுகிறார்.

"வித்யைகள் நான்கே. தர்மம், அர்த்தம் இவ்விரண்டையும் எவற்றைக்கொண்டு நன்கு அறியக் கூடுமோ அவைகளே வித்யைகளாகும். ஆன்வீக்ஷிகீ, த்ரயீ, வார்த்தா, தண்டநீதி, இந் நான்கும் தர்மார்த்தங்களை உணர்த்துவதில் தக்க சாதனங்களாகின்றன. இவற்றில் அடங்கியுள்ள ஞான பாகங்களும், இவற்றின் நோக்கங்களும் பெரும்பாலும் வேறுபடுவதால், இவற்றைத் தனிமைப் படுத்தி, வித்யைகள் நான்கு எனக் கூறுவதே தகும்."

(1) "ஆன்வீக்ஷிகீ.—இதில் ஸாங்கியம், யோகம், லோகாயதம் இம் மூன்றும் அடங்கியுள்ளன. ஸாங்கியமானது, ப்ரகிருதி, புருஷன் இவற்றின் விவேசனம் நிரம்பியுள்ள சாஸ்திரம். இது கபிலரால் கூறப்பட்டுள்ளது. மஹேச்வரரால் சொல்லப்பட்ட யோக சாஸ்திரத்தில் த்யானம், ஸமாதி, மோக்ஷம் இவற்றின் லக்ஷணங்களை விவரிக்கப்படுகின்றன. பிரம்மா, கார்க்கியர் இவர்களால் கூறப்பட்டுள்ள லோகாயத மதத்தில் ப்ரத்தியக்ஷம் பிரமாணங்கள், நியாய சாஸ்திரக் கொள்கைகள் முதலியன எடுத்துரைக்கப்பட்டுள. இம் மூன்று சாஸ்திரங்களுக்கும் பொதுவாய் ஆன்வீக்ஷிகீ எனப் பெயர்.

(2) த்ரயீ:—ருக், யஜுஸ், ஸாமம் என்ற மூன்று வேதங்களுக்கும் த்ரயீ என்பது பொதுவான பெயர். இதில் முக்கியமாய் தர்மம், அதர்மம் இவற்றின் லக்ஷணங்கள் நன்கு வகுத்துக் கூறப்படுகின்றன. இவற்றைக் கற்பதின் முக்கிய பலன், தர்மாதர்ம ஞானம் பெற்று சரிவர நடப்ப

தாகும். அத்தியயனம், வேள்வி செய்தல் முதலியன தர்மங்கள். தகாத காரியங்களைச் செய்தல் அதர்மம்.

(3) வார்த்தா:—கிருஷி, வியாபாரம் முதலியவற்றைக் கூறும் சாஸ்திரம். காலத்தில் விதை விதைத்துப் பாடுபடுவதால் உண்டாகும் பலன்களும், தக்க சமயத்தில் கிருஷி செய்யாமல் விடுவதால் நேரக்கூடிய நஷ்டங்களும் இங்குக் கூறப்படுகின்றன.

(4) தண்டநீதி:—பெரியோர்களோடு கலகம் செய்யாது, சந்தி பண்ணிக்கொண்டு சுகமாய் யோகக்ஷேமம் செய்வதும், அவர்களோடு வீண் சண்டை போட்டு, கஷ்ட நஷ்டங்களை யடைவதும் இங்கு விவரிக்கப்படுகின்றன.

மேற்கூறிய வித்யைகள் ஒவ்வொன்றிலும் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் மற்றையவைகளிலும் ஆங்காங்கே சிலசமயம் சந்தர்ப்பத்தை அனுசரித்துச் சிறிது கூறப்படுமெனினும், அவற்றிலடங்கியுள்ள ஞானபாகங்களின் முக்கிய நோக்கங்களும், ஸ்வரூபங்களும் வேறுபடுவதால், அவைகள் தனிமையான வித்யைகளென விவரிக்கப்படுகின்றன என்பது கவனிக்கத்தக்கது.

த்ரயீ முதலானவற்றிலுள்ள விஷயங்களின் பலாபலத்தை நியாய சாஸ்திரத்தைக் கொண்டு அறிந்து ஒழுகுவதற்கு ஆன்வீக்ஷிகீ பயன்படுகிறது. நமது புத்தியானது ஐசுவரியாதி ஸுகங்களில் ஆழ்ந்து மதங்கொண்டு கெடாமலிருப்பதற்கும், கஷ்டகாலங்களில் ஏக்கமடைந்து, தீராத் துயருக்குள்ளாகி நசிக்காம லிருப்பதற்கும், எந்தெந்தக் காலங்களில் எவ்வித காரியங்களை யனுஷ்டித்து ஒவ்வொருவரும் காரியசித்தி பெறலாமென்பதற்கும் ஆன்வீக்ஷிகீ வித்யை முக்கிய சாதனமாகும்.

"ஆன்வீக்ஷிகீ என்பது எல்லாக் கல்விகளுக்கும் ஒரு பெருஞ் சுடர் விளக்குப் போன்றது; எவ்வித கர்மங்களையும் அனுஷ்டிப்பதற்கு உதவக்கூடிய தக்கதோர் உபகரணமாகும்; வைதிக, லௌகிக தர்மங்களனைவற்றிற்கும் சாச்வதமான ஆதாரமாயுளது" ஆகையால் இதைத் தனிமையான வித்யையெனக் கூறுவதே சரி என்பது கௌடல்யனது கொள்கை.

த்ரயீ விவரணம்

பிரகரணம் 2:—

ருக், யஜுஸ், ஸாமம் இம்மூன்று வேதங்களும் த்ரயீ எனப்படும். அதர்வம், மஹாபாரதாதி இதிஹாஸங்கள் இவையும் வேதங்களைச் சார்ந்தவை. சீக்ஷா, வியாகரணம், கல்பம், நிருக்தம், சந்தஸ், ஜ்யோதிஷம் இவ்வாறும் வேதாங்கங்களாகும். த்ரயீயில் கூறப்பட்டுள்ளவிஷயங்கள் நான்கு வர்ணத்தார்களுடையவும், நான்கு ஆசிரமத்திலிருப்பவர்களுடையவும் தர்மங்களை விவரித்து, அவர்கள் அவற்றைத் தழுவி நடக்குமாறு செய்ய உதவுகின்றன. பிராமணனுக்கு, வித்தைகற்றல், கற்பித்தல், வேள்விசெய்தல், செய்வித்தல், தானம் கொடுத்தல், வாங்குதல் இவ்வாறும் ஸ்வதர்மங்கள். அத்யயனம் செய்தல், யாகம் செய்தல், ஈகை, ஆயுதங்களைக் கொண்டு ஜீவித்தல், பிராணி ரக்ஷணம், இவை க்ஷத்திரியனது இயற்கையான தர்மங்கள். க்ஷத்திரியனுக்குக் கூறிய முதல் மூன்றும், விவசாயமும், பசுக்கள், குதிரைகள் இவை முதலிய வற்றின் ரக்ஷணமும், வியாபாரமும் வைசியனது ஸ்வதர்மங்கள். மற்றைய மூன்று வர்ணத்தாருக்கு உபகாரமான காரியங்களும், கிருஷி, பசுரக்ஷணம், வியாபாரம், சிற்பம், தூத காரியம் இவையும் நான்காவது வர்ணத்தாரின் தர்மங்கள்.

தத்தம் ஜாதிக்கு ஏற்ற தொழிலைக் கொண்டு ஜீவித்தல், தமக்குச் சமானமானதும், வேறு ரிஷி கோத்திரத்தோடு கூடியதுமான குலத்தில் விவாகம் செய்துகொண்டு, மனைவி ருதுமதியானதும் (12 நாளைக்குள்) அவளை யனுபவித்தல், தேவர்கள், பித்ருக்கள், அதிதிகள் வேலைக்காரர்கள் இவர்களுக்கு யதோசிதம் தானமளித்தல், தேவாதிகளுக்குப் பூஜை பண்ணிய அன்னாதிகளைப் புஜித்தல், இவை கிருஹஸ்தனது தர்மங்கள்.

வேதாத்யயனஞ் செய்தல், அக்கினி காரியங்களைக் கவனித்தல், தினம் முக்காலம் ஸ்நானமாடுதல், பிக்ஷை யெடுத்து உண்ணுதல், விவாகம் வரையிலுள்ள வ்ரதங்களனுஷ்டித்தல் இவை சாதாரண பிரம்மசாரியின் லக்ஷணங்கள். நித்யப் பிரமசாரியோ தன் ஜீவ காலமுழுவதும் குருகுலவாசஞ் செய்து, விரதமனுஷ்டிக்க வேண்டும்.

பிரம்மசரியம் அனுஷ்டித்தல், தரையில் படுக்கை, ஜடைதரித்தல் அக்கினி ஹோத்திரம் செய்தல், தேவர், பிதுர்க்கள் அதிதிகள் இவர்களைப் பூஜித்தல், காட்டிலுண்டாய கனி, கிழங்குகளைக்கொண்டு ஜீவித்தல், இவை வானப்பிரஸ்தாசிரமத்தி லிருப்போரின் தர்மங்களாகும்.

எல்லாவற்றையும் ஒழித்த பரிவ்ராஜகன் என்று சொல்லப்பட்ட துறவிக்கு, ஸர்வேந்திரியங்களையு

மடக்கி யாளுதல், யாதொரு சொத்து மில்லா திருத்தல், மற்றவர்களோடு கூடாமல் தனித்திருத்தல், பலவிடங்களில் பிக்ஷையெடுத்துத், தனக்கு வேண்டியளவு மட்டில் உணவு சேகரித்து உண்ணல், ஆரண்ய வாஸம் செய்தல், மனம், வாக்கு, சரீரம், இம் மூன்றிலும் வெகு சுத்தமாயிருத்தல் இவை ஸ்வதர்மங்கள்.

ஆனால், மேற்கூறிய எல்லா வர்ணத்தாருக்கும், ஆசிரமத்தாருக்கும் பொதுவான தர்மங்கள் உள. பிராணி ஹிம்ஸை ஒழித்தல், பொய்யாமை, உள்ளும் புறமும் சுத்தமாயிருத்தல், அஸூயையை யொழித்தல், கொடுமையில்லா திருத்தல் பொறுமை, இவைகள் எல்லோரும் எக்காலத்திலும் கைக்கொண்டு நடக்கவேண்டிய சாச்வத தருமங்கள்.

ஸ்வதர்மத்தை யனுஷ்டிப்பதால் இவ்வுலகில் ஐசுவரியாதி சுகமும், மறுமையில் மோக்ஷ ஸாம்ராஜ்யமும் கிடைக்கும். அதை மீறி நடந்தால், பலவித ஸாங்கரியங்களுண்டாகி நாசம் ஏற்படும்.

"ஆகையால், அரசனானவன் தன் பிரஜைகள் ஸ்வதர்மங்கள் மீறி நடக்குமாறு விடக்கூடாது; அவரவர்களது கடமைகளைச் செய்விப்பவன் இவ்வுலகிலும் மறு லோகத்திலும் சுகம் பெற்று வாழ்வான். ஸதாசார நியமங்களின் வரம்பு கடவாமல் அவரவர்கள் வர்ணாசிரம தர்மங்களைத் தழுவி நடந்து வரும் ஜன ஸமூகமானது, த்ரயீயில் கூறப்பட்டுள்ள ஞானத்தால் ரக்ஷிக்கப்பட்டதாய்க்கொண்டு, செழிப்புற்றுக் களிக்கும்; நாசமடையாது." கௌடல்யன் இவ்வாறு த்ரயீ ஞானம் நம் நாட்டாருக்கு அவசியமென்பதை வற்புறுத்திக் கூறியிருக்கிறார்.

அஹோபில பண்டிதர்:—கடப்பை ஜில்லாவிலுள்ள அஹோபிலமென்ற வைஷ்ணவ க்ஷேத்திரத்தில் வசித்தவர். இவருடைய உண்மையான பெயர் தெரியவில்லை. 17-வது நூற்றாண்டில் இருந்தவர். பாரஸீக பாஷையில் இது 1724-ல் மொழிபெயர்க்கப்பட்டது. பாரிஜாத கதையும் ஆஞ்ஜநேய மதத்தையும் அநுசரித்துத் தன் நூலை எழுதினார். ராக தரங்கிணியும் ராகவிபோதமும் இவருக்குத் தெரிந்திருக்கலாம். தரங்கிணியின் சுத்தஸ்வரங்களை இவர் ஒப்புக்கொள்ளுகிறார். ஒரு ஸ்தாயியில் சுருதிகள் 29 என்றும், ஆனால் ராகங்களை விவரிப்பதில் 12 உபயோகப்படுமென்றும் சொல்லுகிறார். சுமார் 122-ராகங்களை வர்ணிக்கிறார். வீணை தந்தியின் அளவை அநுசரித்து ஸ்வரங்களைக் குறிப்பிடும் நூல் இதே முதலானது.

காளிதாஸ மஹா கவி

KALIDASA THE GREAT POET

முன் ஸஞ்சிகையில், தசரத சக்கரவர்த்தியின் புதல்வர்களான ராமன், இலக்ஷ்மணன், பரதன், சத்துருக்கினன் என்ற நால்வரும், வெகு செல்வமாய் வளர்க்கப்பட்டு, காலத்தில் உபநயனம் செய்யப்பட்டு, எல்லா வித்யைகளையும் கற்றறிந்து விசேஷ தேஜஸுடன் விளங்கித் தசரதனை மிக்கத் மகிழ்வுறச் செய்தனர் என்று கூறப்பட்டது.

இவ்வாறிருக்கையில் ஒரு நாள் கௌசிக மகா முனிவர் அரசனிடம் வந்து, தாம் செய்துவரும் பெரும் வேள்விக்கு அரக்கர்களால் நேரிட்டுவரும் இடையூறுகளைத் தீர்த்து வைப்பதற்காக, ஸ்ரீராமனைத் தம்முடன் ஆசிரமத்துக்கு அனுப்ப வேண்டுமென்று கேட்டார். 'தேஜஸாம் ஹி ந வய: ஸமீக்ஷ்யதே' 'ஸ்வாபாவிகமான தேஜஸ் பொருந்தியவர்கள் விஷயத்தில், இளம் வயதானது இழிவாக மதிக்கப்படுவதில்லை யல்லவா?" இராமன் இளைஞனாக இருந்தாலும், அவனது நிஜபராக்கிரமத்தால் தமது காரியம் சித்திபெறும் என்று பூர்ண நம்பிக்கையுடன் விசுவாமித்திரர் அவரது ஸகாயத்தைப் பிரார்த்தித்தது அனுசிதமாகாது என்பது கருத்து. இவ்வாறு வேண்டப்பெற்ற தசரதனும், வெகுகாலம் கழித்துப் பிறந்து, மிகச் சீராட்டுடன் வளர்க்கப்பட்டு வந்துள்ள தமது அருமைப் புதல்வனான ஸ்ரீராமனை லக்ஷ்மணனுடன் விசுவாமித்திரரிடம் ஒப்புவித்தார். "தங்கள் பிராணனைக் கொடுத்தாவது யாசகர்களைத் திருப்தி செய்விக்கும் தன்மை வாய்ந்த ரகு குலத்தார் இவ்வித வேண்டுகோளைப் பூரணம் செய்வது ஆச்சரியமா?"

இராமலக்ஷ்மணர்கள், தங்கள் பிதாவுக்கு வணங்கி உத்திரவுபெற்று பட்டணத்து ஜனங்களால் அன்புடன் பார்க்கப் பெற்றவர்களாய், விசுவாமித்திரரைப் பின்பற்றிச் செல்ல ஆரம்பித்தனர். வழியில் அவரால் உபதேசிக்கப்பட்ட பலை, அதிபலை என்னும் மந்திர வித்யைகளின் பிரபாவத்தால், அவ்விருவரும் வழியில் உண்டாகக்கூடிய பசிமுதலிய களைப்பைச் சிறிதும் உணராமல், அந்தப்புரத்தில் தாயார் சமீபத்தில் எல்லாச் சுகங்களோடிருப்பது போல் நினைக்கலானார்கள். மேலும், விசுவாமித்திரர் சொல்லிக்கொண்டு வந்த முன்னோர்களின் திவ்விய சரித்திரங்களின் ஸ்வாரஸ்யத்தால், அவர்

கள் ஏதோ வாஹன மீதேறிச் செல்வது போல் உணர்ந்தார்களேயொழிய, கால் நடையாய்ப் போகும் கஷ்டத்தை அறியவேயில்லை. மேகங்கள் நிழலளித்தும், பக்ஷிகள் காதிற்கினிமையாய்ச் சப்தித்தும், காற்றுகள் மந்தமாய் வாசனையுடன் வீசியும் அவர்களுக்குத் தொண்டு செய்தனபோல் தோற்றின. அவர்கள் இவ்வாறு சென்று, பூர்வம் மன்மதன் எரிக்கப்பட்ட தபோவனம் அடைந்தனர். ஸ்ரீராமன்,மன்மதனே இவ்வுருவாய் மீண்டும் வந்துளனே என்று நினைக்கும்படி அவ்வளவு சரீர சோபையுடன் விளங்கினர். "ஆனல், ரூபத்தில் மட்டும் அவர் மன்மதனுக்குப் பிரதிநிதியாய்த்தோன்றினரே ஒழிய, செய்கையில் அவனை ஒத்தவராயில்லை."

பின்னர், அவர்கள் ஸுகேது புத்திரியான தாடகை வசிக்குமிட மணுகினர். அவளது கொடிய செயல்களையெல்லாம் விசுவாமித்திரர் அவர்களுக்கு எடுத்துக் கூறினர். உடனே அவர்கள் தங்கள் வில்களை வளைத்து நாணேற்றித் தயாராய் வைத்துக்கொண்டனர். கிருஷ்ணபக்ஷ இருளே உருவெடுத்து வந்ததோ எனக் கூறக் கூடியவாறு இருண்ட பயங்கரமான ரூபத்துடன், மண்டையோடுகளும் எலும்புகளு மணிந்து, தாடகை தோன்றலானாள்; அவள் தனது கைகளை உயரத்தூக்கிக்கொண்டு வெகுவேகமாய் அவர்களை நோக்கி ஓடிவந்தாள். "இதுகண்ட ராகவன் தமது கூர்மையான பாணத்தையும், 'ஸ்திரீ வதை செய்யக்கூடாது என்கிற தயையையும் ஒரே காலத்தில் விட்டார்." அந்தப் பாணமானது கற்பாறைபோல் கடினமான அவள் மார்பைத் துளைத்துச் சென்றது. 'அந்தத் துவாரமானது, இதுவரையில் பிரவேசிக்கப்படாத ராக்ஷஸர்களின் பிரதேசத்தில் நுழைவதற்கு யமனுக்கோர் விசாலமான வாயில் போலாயிற்று.' அரக்கர்களின் நாசத்துக்கு தாடகாவதம் ஆரம்பம் என்பது கருத்து.

பின்னர் இராமன் விசுவாமித்திரரிடமிருந்து, ஸூர்யனிடமிருந்து ஸூரியகாந்தக் கல்லானது காஷ்டாதிகளை எரிக்கும் ஜ்யோதியைப் பெறுவது போல், அரக்கர்களை யழிக்குந் திறமையுடைய அஸ்திரத்தை மந்திர பூர்வமாய் அடைந்தார். அப்பால், இராமன் வாமனுசிரம மடைந்து, அவ்வவதார சரித்திரக் கதைகளைக் கேட்டுக் களித்தார். மற்றைய புண்ணிய ஆசிரமங்களைக் கடந்து, எல்லோரும் விசுவாமித்திரரது ஸித்தாசிரமம் போய்ச் சேர்ந்தனர்.

கௌசிகர் தாம் உத்தேசித்துள்ள வேள்வியைச் செய்துமுடிக்க, தீக்ஷை பெற்றுக்கொண்டார், அவரை ராமலக்ஷ்மணர்கள், "சூரிய சந்திரர்கள், பகல், ராத்திரி காலங்களில் மாறிமாறி உதித்து, தங்கள் கிரணங்களால் உலகத்தை பேரிருளிலிருந்து காப்பதுபோல், தங்கள் பாணங்களால் இரக்ஷித்துவந்தனர். அப்போது அரக்கர்கள் மாம்ஸங்களையும், ரத்தத்தையும் அக்கினி மேடைமீது பொழிந்து யாகத்தைக் கெடுக்க ஆரம்பித்தனர். இதுகண்ட ரிஷிகள் திகைத்து, அக்கினி காரியங்களைச் செய்யாது விடுத்து,குழப்பத்திலாழ்ந்தனர்.

உடனே இராகவன் ஆகாயத்தில் ஸஞ்சரித்து வரும் ராக்ஷஸ சேனையை நோக்கி, தமது அம்பறுத்தூணியிலிருந்து ஒரு பாணத்தை எடுத்து, அதில் வாயவ்யாஸ்திரத்தை மந்திரோச்சாரணஞ் செய்து, ஸுபாகு, மாரீசன் என்ற தாடகையின் புத்திரருவரையும் உத்தேசித்து விடுத்தார். அதனல் அடிபட்டு மாரீசன், மரத்திலிருந்து உலர்ந்த இலை விழுவதுபோல், கீழேவிழுந்தான். ஸுபாகு தனது மாயையால் ஓடி ஒளியத் தலைப்பட்டான். அப்பாணமானது அவனை விடாது தாக்கியடித்துக் கொன்று, ஆசிரமத்திற்கு வெளிப்புறத்தில் பக்ஷிகளுக்கு இரையாகும்படி வீழ்த்தியது.

இவ்வாறு யாகத்தின் இடையூறை நீக்கி, அது முடிவு பெறும்படி செய்த ஸ்ரீராமனை மஹரிஷிகள் வெகுவாறு கொண்டாடிக் கௌரவித்தனர். விசுவாமித்திரரும் அவபிருத ஸ்நானம் முடித்து, இராமலக்ஷ்மணர்களைத் தமது பரிசுத்தமான கைகளால் தடவி ஆசீர்வாதம் செய்தார்.

இவ்வாறிருக்கையில், மிதிலாபதியான ஜனக மஹாராஜன் தாம் நடத்தி வந்த வேள்விக்கு எழுந்தருளும்படி விசுவாமித்திரருக்குச் சொல்லியனுப்பினர். ஜனகனிடமுள்ள சிவதனுசின் மகிமையையறிய ஆஸ்தையுள்ள இராமலக்ஷ்மணர்களையும் கௌசிகர் அழைத்துக்கொண்டு புறப்பட்டார். வழியில் அரண்யப் பிரதேசங்களில் ஆங்காங்கே தங்கிச் சென்று, கௌதம பத்தினியான அகல்யை என்பவள் சாபத்தால் கல்லாய்க் கிடக்குமிடம் சேர்ந்தனர். மிகப் பாவனமான ஸ்ரீராம பாத தூளி அக்கல்லின்மீது பட்டதும்,அகல்யை சாபம் நீங்கப் பெற்றவளாய் எழுந்து பூர்வ தேஜஸுடன் விளங்கினள்.

ஜனகமகாராஜனும் அவர்கள் வரவைக் கேள்வியுற்று, " அர்த்தம், காமம் இவற்றோடு கூடிய தர்மமே உருவெடுத்து வந்ததுபோல் விளங்கும்

மஹரிஷியைத் தக்க உபசரணையுடன் எதிர் கொண்டு சென்று வரவேற்றார்.'' ஜனகனது யஞ்ஞமானது கிரமேண பூர்த்தியடைந்தது. விசுவாமித்திரர், இராமன் சிவதனுஸைப் பார்க்க விரும்புகிறார் என்பதை ஜனகருக்குத் தெரிவித்தார். அரசனோ, இராகவனது இளம் வயதையும், ஸுகுமாரமான சரீரத்தையும் கவனித்து, "மகரிஷியே! மகாகஜங்களாலும் செய்ய முடியாத காரியத்தை ஒரு யானைக்குட்டியானது எவ்வாறு செய்யமுடியும்? வெகு பராக்கிரமம் வாய்ந்தும் வயது முதிர்ந்தவுமுள்ள பெரும் மன்னர்களும் இந்த வில்லை எடுக்கமுடியாது தத்தளித்து அபஜய மடைந்துள்ளார். இது விஷயத்தில் இப்பாலன் யாது செய்யக்கூடும்'' எனக் கூறினார்.

இது கேட்ட விசுவாமித்திரர், 'வேந்தே, இராமனது வீரியத்தைப் பற்றி வீணாய்ப் பேசுவதில் பிரயோஜன மென்ன? இடியின் பிரபாவம் மலைமீது ஏற்படுவதுபோல், தம்முடைய வில்லின் விஷயத்தில் இராமனது பலத்தை பிரத்தியக்ஷமாய்க் காணலாம்' என்று பதில் கூறினார்.

இதுகேட்ட ஜனகனும் மகிழ்ந்து, 'மினிமினிப் பூச்சி அளவுள்ள நெருப்பிலும் எரிக்கும் சக்தி இருப்பதுபோல், இளைஞனான ஸ்ரீராமனிடமும் பெரும் பௌருஷமும் இருக்கக்கூடும்' என்றும் பூர்ண நம்பிக்கைகொண்டு, சிவதனுசுப் பெட்டியை இழுத்து வரும்படி சேவகர்களுக்கு ஆஞ்ஞையிட்டார்.

பூர்வம் பரமசிவன் எந்த வில்லில் பாணத்தைத் தொடுத்து மான்வேடங்கொண்டு ஓடும் தக்ஷப் பிரஜாபதியைத் துரத்தி யடித்தாரோ, அந்தப் பயங்கரமான சாபமானது உறங்கும் ஒரு கொடிய ஸர்ப்பம்போல் பெரும் பொட்டியி லிருப்பதை ஸ்ரீராமன்கண்டு, அதைத் தமது கையால் வெளியில் எடுத்து நிறுத்தினார். ஸபையிலுள்ள அனைவரும் இதைக்கண்டு பயத்தாலும் ஆச்சரியத்தாலும் திகைத்திருக்கையில் இராகவன் அதை வளைத்து நாணேற்றினார். பெரும் மலைபோன்ற இந்த வில்லை ஏதோ புஷ்பத்தால் செய்யப்பட்டுள்ளதுபோல் அவ்வளவு எளிதில் வளைத்தார்; அவரது வேகம் தாங்கமாட்டாமல், அது இடிபோன்ற பேரொலியுடன் உடைந்து, தனது சப்தத்தால், 'பரசுராமனால் அடக்கப்பட்டுள்ள க்ஷத்திரிய பலமானது மீண்டும் ஓங்கிவளர ஆரம்பித்தது என்று சொல்வதுபோ லிருந்தது.'

உத்தம ஸ்திரீ லக்ஷணம்

THE IDEAL OF WOMANHOOD

அவாங்மனஸ கோசரமாய் அல்லது அறிவுக்கும் வாக்குக்கும் மனதிற்கும் எட்டாததாய், அகார உகார மகார வாச்சியனாய், அல்லது சிருஷ்டிஸ்திதி ஸம்ஹார கர்த்தாவாய், அணுவுக்குள் அணுவாய், மஹத்துக்கும் மஹத்தாய், எங்கும் நிறைந்த பரம்பொருளாகிய ஈசுவரனது மாயா விலாஸத்தினால், அவலீலையாய் சிருஷ்டிக்கப்பட்ட ஸ்தாவர ஜங்கம ரூபமான ஸகல சராசர சிருஷ்டிகளுக்குள் 'அரிது அரிது மானிடராதலரிது' என்று நமது மூதாட்டியாகிய ஔவையின் திருவாக்கின்படி மானிட ஜன்மம் மிகவும் மேலானது. ஏனென்றால் கருணாநிதியாகிய கடவுள், ஸகல சராசர வஸ்துக்களின் உள்ளும் புறமும் நிறைந்திருந்தாலும், மானிடராகிய நமக்கு ஊனக்கண்ணை* மாத்திரம் கொடுக்காமல் தம்மை அறிவதற்கு மேலான ஞானக் கண்ணையும் கொடுத்திருக்கிறார். ஆனால் நாம் மதமென்னும் சோம்பலினால், மாயையாகிற அந்தகாரத்தில் மூழ்கி, மோகமென்னும் நித்திரையில் ஆழ்ந்து போகாமல் ஸத்ஸங்கத்தால் மனஸை சுத்திசெய்து, சாஸ்திர விசாரணையால் மோகமென்னும் நித்திரை நீங்கி, ஞானக்கண்ணைத் திறந்து, அறிவாகிய ஜீவாத்மாவுடன் அபேதமாயிருக்கும் பரமாத்மாவைக் காணலாம். ஈசுவர சிருஷ்டியிலுள்ள அநேக ஜன்மங்களையும் எடுத்து, கர்மசேஷங்களெல்லாம் குறைந்த பிறகே, இந்த ஜீவாத்மா கடைத்தேறும் பொருட்டு மானிட ஜன்மத்தை கடவுள் நமக்குக் கருணையினால் அளித்து, பலவழிகளையும் காட்டியிருக்கிறார். சக்தி சிவமென்னும் ஸ்திரீ புருஷ ரூபத்தை, கேவலம் சிருஷ்டி நிமித்தம் சகல ஜீவராசிகளுக்கும் ஏற்படுத்தியிருந்தபோதிலும், மானிடராகிய நமக்கு சிருஷ்டி அதாவது பிரஜா சிருஷ்டி நிமித்தமும், ஸ்திதி அதாவது ஸத்கர்மங்களை ரக்ஷித்து அல்லது நடத்தி, ஸம்ஹாரம் அதாவது துஷ்கர்ம வாஸனைகளை ஸம்ஹரித்து, மோக்ஷமடைவதற்கு அறிவாகிய மேலான வழியைக் காட்டியிருக்கிறார். பிரம

* ஊனக்கண்ணை அதாவது வெளியாயிருக்கும் பதார்த்தங்களை மாத்திரம் பார்த்தறிய சக்தியுண்டேயல்லது, ஹிருதயத்திலிருக்கும் பரமாத்மாவைக் காணும் சக்தி அதற்கு இல்லாமையினால் ஊனக்கண்ணெனப்பட்டது.

நிறைநீர நீரவர் கேண்மை பிறைமதிப் பின்னீர பேதையார் நட்பு.

சர்ய, கிருஹஸ்த, வானப்ரஸ்த, சன்யாஸமென்னும் நான்கு ஆசிரமங்கள் புருஷர்களுக்கு. ஸ்திரீகளுக்கோ விவாஹமே உபநயந ஸம்ஸ்காரமாகவும், பர்த்தாவுடன் கிருகத்தில் வசிப்பதே குருகுல வாசமாகவும், கிருக கிருத்தியங்களைச் சரிவரச் செய்து பெரியோர்களையும், மாமியர் மாமனார்களையும் தனது பிரத்தியக்ஷ தெய்வமாகிய பர்த்தாவையும், சுசுரூஷை முதலிய பணிவிடைகளால் திருப்தி செய்வித்து, பந்துக்களையும், ஏழை அப்யாகதர்களையும், ஆதரித்து, கிருஹஸ்தாச்ரமத்தில் தனது பர்த்தாவுக்கு சத் கர்மங்களை நடத்த உற்ற துணையாயிருத்தலே, சமிதாதானம் முதலிய கிருஹ எக்ஞங்கள் செய்ததற்கு ஸமானமுமாகும். ஆகையினால் ஸ்திரீ ஜன்மமெடுப்பதே சிலாக்கியமாகும். குழந்தைகள் பிறந்தவுடன் புருஷப்பிரஜை என்றால் சந்தோஷமும், பெண் குழந்தை என்றால் பெண்ணா! என்று இழிவு படுத்திக் கூறுவதும் உலக வழக்கமாயிருக்கின்றதாயினும், ஸ்திரீகளுக்குரிய உத்தம குணங்கள் நிரம்பிய ஒரு உத்தம ஸ்திரீயை ஒரு உத்தம புருஷன் மணந்து, கிருஹஸ்தாசிரமத்தை நடத்தினால், பூலோகத்தில் சுவர்க்க சுகத்தையும், அந்தியத்தில் மோக்ஷத்தையும் சுலபமாய் அடையலாம். நான்கு ஆசிரமங்களுக்கும் கிருஹஸ்தாசிரமமே மேலானது. கிருஹஸ்தனில்லாவிட்டால் மற்ற மூன்று ஆசிரமங்களும் சரிவர நடவா. ஒரு கிருஹஸ்தன் தனது தரும பத்தினியுடன் கிருஹஸ்த தர்மத்தை ஸரிவர நடத்தி தேவ எக்ஞம், பித்ரு எக்ஞம், பூத எக்ஞங்களை வழுவற நடத்தி, மற்ற மூன்று ஆச்ரமங்களிலுள்ளோரையும் தன்னால் கூடியவரைக்கும் ஆதரித்து வருவானேயாகில், பகவான் அவனது கிருஹத்தில் சான்னித்யமாயிருந்து, அவனது ஸத்கர்மங்களுக்குத் தானே போக்தாவாயிருந்து நடத்திக்கொள்வார்.

ஆனால்,கிருஹஸ்த தர்மத்தை உத்தம தர்மபத்னியில்லாவிட்டால் நடத்த முடியாது; (பர்த்தாவுக்கேற்ற பதிவிருதை யுண்டானால் எத்தாலும் கூடியிருக்கலாம், சற்று ஏறுமாறாக விருப்பாளேயாயின் கூறாமல் சன்யாசங்கொள்.)—ஔவை, என்பது போல் தர்ம பத்னி உத்தம குணங்கள் பொருந்தியில்லாவிட்டால் கிரஹஸ்தனுக்கு ஸம்ஸாரம் கோர நரகமே யாகும். ஆகையால், பெண்கள் தங்கள் பர்த்தாவுக்கு எப்படியெல்லாம் நடந்து கொண்டால், திருப்தியாகவும், சந்தோஷமாகவு மிருக்குமோ, அப்படியே நடந்து கொள்ள சதா முயற்சியுடனிருக்கவேண்டும். "கார்யேஷு தாஸீ,கரு‌ணேஷு மந்த்ரீ,ரூபேஷு லக்ஷ்மீ, க்ஷமயா தரித்ரீ, ஸ்நேஹேஷு மாதா, சயனேஷு வேச்யா, ஷட்கர்ம நாரீ குல தர்ம பத்னீ" என்ற நீதி வாக்கியத்தின்படி சுசுரூஷை செய்வதில் வேலைக்காரியைப் போலும், ஸமயத்தில் யோஜனை சொல்லுவதில் மந்திரியைப் போலும், ரூபத்தில் லக்ஷ்மியைப்போலும், பொறுமையில் பூமாதேவியைப் போலும், அன்புடன் ஆதரிப்பதில் தாயைப் போலும் நடந்து, தனக்கும் தன் குலத்துக்கும் தான் பிறந்த வீட்டிற்கும் கீர்த்தியைத் தேடுவதில் கண்ணுங் கருத்துமாயிருந்து நடக்கவேணும். 'பதிவிருதா பதிப்ராணா' என்றால் பதிவிருதைகளுக்குத் தன் பதியே ஜீவனாகும். பதிவிருதை என்றால் எல்லா விஷயங்களிலும் தன் பதிக்கு அனுகூலமாயிருத்தலே.

ஸர்வஸ்ய காத்ரஸ்ய சிர ப்ரதானம் என்பது ஒரு சரீரத்திற்கு முக்கியமாய் சிரசே பிரதானம். ஆனால் கண், காது, கைகால் முதலிய அவயவங்களில் எது குறைவாயிருந்தாலும் உத்தமலக்ஷண சரீரமாய்ச் சொல்ல முடியாதோ, அதுபோல் ஸ்திரீகள் பதிவிருதைகளாகவும் அத்துடன் நாணம், அச்சம், பயிர்ப்பு என்னும் நான்கு குணங்களும் பொருந்தி, இன்சொல், இனிமை, சாந்தம், தயை, கருணை, பொறுமை, திடம் ஆகிய ஏழு குணங்களும் சப்த தாதுக்கள்போல சரீரத்தில் பொருந்தி யிருத்தலே, உத்தம பதிவிருதா ஸ்திரீ லக்ஷணமாகும். உத்தம ஸ்திரீகளுக்குத் தன் பர்த்தாவின் மனம்போல் நடந்து பணிவிடைசெய்தலே, மேலான தபஸாகும். விசுவாமித்திர மஹரிஷி, கோரமாகிய தபஸினால் பிரும்ம சிருஷ்டிக்குப் பிரதி சிருஷ்டி செய்தார். மஹா பதிவிருதையாகிய நளாயினியோ, தன் பர்த்தாவின் பணிவிடையாகிய தபஸினாலேயே, சந்திர சூர்யர்களைத் தபிக்கச் செய்து சிருஷ்டி நடக்கவொட்டாமல் செய்துவிட்டாள். ஆகையினால் ஸ்திரீகள் உத்தமமான பாதிவிருத்யத்தினாலேயே மேலான தபஸ்விகளாய் விடுகிறார்கள். 'நாரீரூபம் பதிவிருதா' பெண்களுக்கு கண்ணுக்கினிய ரூபம் மாத்திரம் இருந்தால் அழகாகாது. ரூபத்துடன் பதிவிருதா லக்ஷணமும் பொருந்தியிருத்தல் மிகவும் மேலானது. ரூபம் அழகா யில்லாவிட்டாலும் பதிவிருதா லக்ஷணங்கள் பொருந்தி யிருந்தால், குணத்தால் ரூபம் ஏற்பட்டுவிடும்.

தேசிங்கு ராஜன்
DESINGH RAJAN

தமிழுலகத்தில் அவ்வப்போது நடக்கும் விசேஷ சம்பவங்களைப் பற்றிச் சிந்துகளும், கும்மிகளும், தில்லானக்களும், வர்ணமெட்டுகளும் மற்றும் பலவித ஜனபிமதமான பாடல்களும் வெளிவருவதை எந்தப் பட்டணத்திலும் கிராமத்திலும் பத்து ஜனங்கள் கூடுமிடத்தில் இருந்து பார்ப்பவர் அறிந்திருக்கலாம். சூளை முனிசாமி முதலியார் புத்தகங்களைப் பாராதவர் யார்? பாடிக் கேளாதவர் யார்? காலணக் கொடுத்து வாங்கிப் படியாதவர் யார்?

இம்மாதிரி நூல்கள் ஏராளமாய் வெளிவருவதற்குக் காரணம் யாது? அவைகளில் எந்த விசேஷத்தைக்கொண்டு ஜனங்களுக்கு அவைகளில் அபிருசி ஏற்படுகிறது? எனக் கவனிக்குங்கால், அவைகளின் *திராக்ஷாபாகமான நடையும், பொதுஜன வாக்கும், அச்சமயத்தில் எல்லோருக்கும் அபிருசி (சுவை) ஏற்பட்டிருக்கும் சம்பவத்தின் விசேஷமுந்தான். அம்மாதிரியான நூல்களுக்கு ஆயுள் பிரமாணம் சுவல்பமே. மங்கப் பட்டணம் விபத்தும், பாலாற்று வெள்ளமும் ஒரு காலத்தில் இம் மாதிரிப் பாடல்களுக்கு இடங்கொடுத்தன வல்லவா? அப்பாட்டுகளை மனதில் வைத்து இப்போதும் பாடுபவர் எவரும் இருக்கிறாரா? இல்லையென்றே நிச்சயமாய்ச் சொல்லலாம்.

இதற்குக் காரணம் இம்மாதிரி கவனங்களில் சாசுவத வித்தமான குணங்கள் இல்லாமலிருப்பதுதான். அன்றே பிறந்து சிறிது நேரம் வாழ்ந்து அன்றே இறக்கும் சில ஜந்துக்களைப் போல்வன இச்சிறு நூல்கள்.

II

தேசிங்கு ராஜன் கதையும் அம்மாதிரி பாடப்பெற்ற ஒரு நூலே. பொது ஜனவாக்கில் கவனம் செய்யப்பட்டிருக்கிறது. நடை வெகு சுலபமானது. மேலே சொன்ன சிந்துக்களைப் போல் வெகு சாதாரணமான ஒரு சம்பவத்தைப் பற்றி பாடப்படவில்லைதான். ஆயினும், ஒரு பெரிய காரியமுமன்று. தேசிங்குராஜன் செஞ்சிக்கோட்டையை ஆண்டு வந்த ஒரு சிற்றரசன். ஆற்காட்டு நவாப்புக்கு உள்ளடங்கியவன். அவனைப் போல் 172 சிற்றரசர்களும், பாளயக்காரர்களும் நவாப்பு ராஜ்யத்தில் இருந்தனர். தனக்கு அச்சிற்றரசன் பணிந்து கப்பங் கட்டவில்லையெனக் கண்ட நவாபு அவன் கோட்டையை முற்றுகை போட்டான். அப்பொழுது நடந்த போரில் தேசிங்கு ராஜன் தைரியமாய் எதிர்த்துப் போர் முகத்தில் இறந்தனன்.

ஆயினும், இவ்விஷயத்தைப்பற்றி எழுதப்பட்ட ஒரு நூல், தம் இனத்தைச்சார்ந்த நூல்கள் போலல்லாமல், சுமார் 200 வருஷங்களுக்குப் பிறகும் பரதேசிகளால் பாடப்பட்டு வருவதுடன் அப்பாடலைப் பண்டிதர் பாமரராகிய நம்மவர் பலரும் கேட்டு மகிழும்படியான விசேஷ குணமுடையதாயிருக்கிறது அதிசயமே. இந்த மேன்மை இந்நூலுக்கு இருப்பதற்குக் காரணம் பெரிய நூல்களிலுள்ள குணங்கள் இதிலும் இருப்பதே. ஆதலால் இந்நூலைச் சற்று ஆராய்வோம்.

III. கதை

இக்கதை வெகு சித்திரமாய் எழுதப்பட்டிருக்கிறது. பெரிய நூல்களில் விஷயரசனை எப்படியிருக்குமோ அப்படியே இதிலும் விஷயங்கள் வெகு சாமர்த்தியமாகக் கொண்டு சேர்க்கப்பட்டிருக்கின்றன. மனிதருடைய மனதைக் கவரும் காவிய லக்ஷணங்களான பல ரசங்களும் இதில் பொருந்தி யிருக்கின்றனவென நிச்சயமாய்ச் சொல்லலாம். கதாநாயகன் தீரோதாத்த * குணமுடையவன். சரீர லக்ஷணமும், மனோதைரியமும், சத்துவ குணங்களும் விசேஷமாகப் பொருந்தியவன். இதைப் பாடிய புலவர் அவனை ஒரு அவதார புருஷனென்றே சொல்லியிருக்கிறார். இந்நாட்டையாண்ட ராஜபுத்திரவம்சத்தார் செஞ்சிக் கடுத்த சிங்கவரம் ரங்கநாத சுவாமியைப் பூஜை செய்பவர்கள். அப்பூஜையின் பலனாக அத்தேவன் அருளிச் செய்த அருமைப் புத்திரனென அந்நாட்டினரால் கருதப் பெற்றிருந்தான். தேசிங்கு ராஜனும் திருவரங்க நாதரிடம் பரமபக்தியுள்ளவன். பூஜா காலத்தில் யாரும் எந்தக் காரியத்திற்கும் தன்னைக் கூப்பிடக் கூடாது. அக்கடவுள் கடைசியாய் அவன் யுத்தத்துக்குப் போன காலத்

* இனிய திராக்ஷையைப்போல் ருசியும் மெதுவுமுடைய கவிவாக்கு.

*ஒரு கதாநாயகன். தீரமும், சற்குணமும் பொருந்தியவன். விநயம், பொறுமை, தைரியம் வாய்ந்து விசாலபுத்தியுடையோனாய், ஆசாரங்களை விடாது அநுசரிப்பவன்.

தில் அவனுக்குப் பிரத்யக்ஷமாகி அவனை யுத்தத்திற்குப் போகக்கூடாதென்று தடுத்தனரென்றே கவி சொல்லுகிறார்.

பாராசாரிக் குதிரை

தேசிங்குராஜனைப் போலவே அவன் குதிரையும் தெய்வலோகப் புரவியெனச் சொல்லப்பட்டிருக்கிறது. அரங்கர் கிருபையால் அது அவ்வுலகத்திலிருந்து திசைதப்பி மகமேரு மலைச்சாரலில் வந்ததெனவும் கோடி சூரியன் உதித்தாற் போலப் பளபளப்பாய் வரும் அக்குதிரையை ஒரு பக்கிரி அஞ்சனமிட்டு மடக்கிப் பிடித்து பார்த்தவளவில் அப்புரவி சாதாரண மனிதருக்கு உபயோகமாகக் கூடியதில்லையென்றும் டில்லியை யாசாளும் *பாட்சாவுக்கேதான் அது தகுமென்றும் தீர்மானித்து அநேகபாகர் சூழ்ந்துவர அதை வெகு பந்தோபஸ்துடன் இட்டுக்கொண்டு வந்தனன்.

தகத்தகாயமாய் நடுவிலிருந்து தாண்டுது முன்னாலே
பிறகு மந்திரவலையை யவிழ்க்க, மயக்கம் தெளிந்த குதிரை,

அண்டமிடிந்து விழுந்தாற்போல அலறிக்கனைத்
[தது பார்.

இச்சத்தம் அரண்மனையில் கேட்க, மகிபனும் தம் பக்கலிருந்த சூரனை ராஜலிங்க பாபுவை அழைத்து அப்பெரிய சத்தத்தின் காரணமென்னவென விசாரித்து வரும்படி யனுப்பினன். அவன் போய்க் குதிரையைப் பார்த்துவந்து சங்கதியை அரசனிடம் தெரிவித்தான். பக்கிரி கொண்டு வந்து சமர்ப்பித்த புரவிரத்தினத்தை மனக் குதூகலத்துடன் அங்கீகரித்த பாட்சா, அவனுக்கு விசேஷமான பொன்னும், நவரத்தினங்களும், ஒரு ஜமீனும் இனமாகத் தந்தான். மிகவுயர்ந்த ஒரு தலைப்பாகையும் அளித்து சந்தோஷத்துடன் அவனை ஊர்போக்கினன். பிறகு அக்குதிரையை ஏறுவார் உண்டோவென விசாரித்துத் தன்னிடமுள்ளவரில் ஒருவருக்கும் அவ்வளவு திறமையில்லை யென்று கண்டு, யாராவது அதை ஏறிச் சவாரி செய்தால் அக்குதிரையை அவர்களுக்கே தந்து விடுவதாகவும், அப்படி ஒப்புக்கொண்டு செய்ய இயலாதாரைப் பன்னிரண்டு வருஷம் சிறையிடுவோமென்றும் அறிக்கை செய்தனன்.

வந்து ஏமாந்த சிலர் சிறைச்சாலை யடைந்தனர். ஆயினும் பாட்சாவுக்கு அப்புரவியை நடத்துபவர் இருக்கின்றனரா என அறிய ஆவல் உண்டு. ஒருநாள் செஞ்சியாளும் தோணிராஜனும் அவர் சகோதரன் தரணிசிங்கு ராஜனும் நல்ல குதிரை வீரரெனக் கேட்டு அவர்களுக்கோர் தூதனுப்பினன். அரசனாணையைச் சிரமேல் தாங்கி அவ்விரு வீரரும் டில்லிமா நகரம் வர, அவ்விடத்துக்குத் தம்மை யழைப்பித்த காரணம் கேட்டு, தாம் பாராசாரியெனப் பெயர் பெற்ற அக்குதிரையை ஏறிச் சவாரி செய்வதாக ஒப்புக்கொண்டனர். டில்லி மகிபனும் அவர்கள் அப்படிச் செய்யாதவரையில் தாம் ஏற்படுத்திய தண்டனைக்கு உட்படவேண்டுமெனச் சொல்லினன். அதற்கு உடன்பட்டுக் குதிரையைப் போய்ப் பார்த்து அதை ஏறிச் சவாரி செய்வது முடியாதென மன வருத்தத்துடன் நிச்சயித்தனர் முன்னமே ஏற்பட்ட கட்டுப்பாட்டின்படி சிறையிலும் அடைக்கப்பட்டனர்.

தேசிங்குராஜன் பிறப்பு

தோணி ராஜன் டில்லிக்குப் புறப்படுங்கால் அவருடைய ராணி சகல நற்குணங்களும் பொருந்திய தர்ம பத்தினியான ராம்பாய் பூரணக் கர்ப்பமாயிருந்தனள். அரசன் செஞ்சியை விட்டுப் போன ஏழாவது நாளே குழந்தை பிறக்க, விசேஷமாகத் தான தர்மங்கள் செய்து குழந்தைக்கு தேசிங்கு மகிபனெனப் பெயரிட்டனர். சீக்கிரமே டில்லியிலிருந்து அரசர்கள் கைதியான சமாசாரம் எட்டியது. அதனால் வருத்த மடைந்தபோதிலும் வம்சம் விளங்கப் பிள்ளை பிறந்த சமாசாரத்தை உடனே அரசனுக்குத் தெரியப்படுத்தினர்கள்.

இப்படியிருக்க தேசிங்கு ராஜன் சிறு பிராயத்திலேயே விசேஷமான வீரமும், தீரமும் காட்டி அரசர்க்குரிய வித்தையை யெல்லாம் கற்றறிந்தான். ஒருநாள் தன் தாய் முகத்தை நோக்கி அவள் மிக்க விசனமுடையவளா யிருக்கக்கண்டு, காரணமென்னவெனக் கேட்க, அவள் தன் புத்திரன் வயதாகாம லிருந்தபோதிலும் ராஜவீர சிங்கமென வறிந்தவளாதலால் அவன் பிறந்த காலத்தில் தோணி ராஜனுக்கு நேர்ந்த கஷ்டத்தை எடுத்துச் சொன்னாள். ஒரு குதிரையை ஏறிச் சவாரி செய்ய முடியாததற்காக 12 வருஷம் சிறைவாசமாவென நினைத்த அவ்விளஞ் சிங்கம், "நானே நேரில் போய் அவர்களை விடுவித்து வருவேன்" என்பதாகச் சபதம் செய்ய, யாரென்ன சொல்லியும் கேட்காததினால், ரங்க

* இக்கதையின் கடைசியில் முதல் அனுபந்தம் பார்க்க.

நாதர் பேரில் பாரத்தைப் போட்டுக் குழந்தையை யனுப்பிவிட்டனர். இந்தப் பயணம் போகுங்கால் தேசிங்குராஜனுடன் அவனது அரிய நண்பன் மகாபத்கான் என்கிற மோவுத்துக்காரன் கூடவே சென்ருன்.

மோவுத்துக்காரன் வழுதாவூர் தலைவனின் புத்திரன். அவ்விருவரும் டில்லிக்கு வந்து சேர்ந்தவுடன் தேசிங்குராஜன் பாட்சாவைப் பார்த்துத் தான் குதிரையேறிச் சவாரிசெய்ய வந்திருப்பதாகச் சொல்லினன். டில்லி மகிபனும் அச் சிறுவர்களுடைய இளமையையும் நல்ல ரூபத்தையும் கண்டு பிரமித்து, அக் குதிரையை யேறி சவாரி செய்வதாக ஒப்புக்கொண்டு அப்படிச் செய்யாதவர்களைத் தாம் சிறையிலிடுவதாகத் தீர்மானித்திருப்பதால் பாலர்களாகிய அவர்கள் அதை யேறிச் சவாரி செய்ய உத்திரவு கேட்க வேண்டாமென்று தடுத்துப் பார்த்தனன். தமது தகப்பன்மார்களை விடுவிக்க வென்றே தாம் வந்ததையும், தனது இஷ்ட தெய்வத்தின் பலத்தால் கட்டாயமாகத் தான் சவாரி செய்ய முடியுமென்றும் பதில் சொன்ன அரசிளங் குமரனைக் கண்டு, ஏற்கெனவே கேட்போர் யாவரும் சவாரி செய்ய உத்திரவு கொடுப்பதாகத் தெரிவித்திருந்த பாட்சா அவனிஷ்டப்படி உத்திரவு கொடுத்து விட்டான். "ஸ்ரீ கோவிந்தா ஸ்ரீ கிருஷ்ண, ஹரி, ஹரி, பரந்தாமா" வென்று தன் குலதெய்வமான அரங்கநாதர் பெயரை உச்சரித்த வண்ணமாய்க் குதிரை யேறினன் தேசிங்குராஜன். அதை யடக்கி டில்லியை சுற்றிச் சுற்றி வந்தனன். அக் குதிரை தன்னல் முடிந்தவளவு அவனைக் கீழே தள்ளப் பார்த்தது. ஆனல் முடியவில்லை. அப்போது அது சிவ்வென்று ஆகாயத்தில் எழும்பி தெய்வலோகம் போக யத்தனித்ததைக் கண்டு தேசிங்கு பாலன் ரங்கதேவனைப் பிரார்த்திக்க உடனே அக்கடவுள் அங்குவந்து குதிரையை அடக்கி அவனிடம் அது சில வருஷங்களிருக்க வேண்டுமென ஆக்ஞாபித்து மறைந்தனர்.

அக் குதிரையும் அக் குழந்தைக்கு அடங்கி மெதுவாக டில்லி யரசன் இருந்த விடத்திற்கு வந்து சேர்ந்தது. இவ்வதிசயத்தைக் கண்டு வியப்புற்றவர் கோடி. அச் சிறு பாலனுடைய வீரியத்திற்கு வியந்து டில்லி துரை ஏராளமான வெகுமதிகள் உதவினன். டில்லியிலேயே இருந்து தன் குமாரத்தியைக் கல்யாணம் செய்து கொண்டு "அரசு முகத்தைக் காற்றுக்கொள்ளு" மென்று சொன்னன். அப்பொழுது அவன் தகப்பன் முதலியோர் வயதான பிறகு வந்து கல்யாணஞ் செய்வித்துப் போவதாகச் சமாதானம் சொல்லி, மகிபனிடம் உத்தரவு பெற்றுக்கொண்டு ஊர் வந்துசேர்ந்தார்கள்.

சில வருஷங்கள் சென்றன. தேசிங்கு ராஜன். தாயும் தகப்பனும் பரமபதமடைந்தனர். தாரணி சிந்து இராஜாங்க விஷயங்களைக் கவனித்து வந்தான் தேசிங்குராஜனுக்குப் பதினெட்டு வயதில் திருக்கல்யாணம் நடந்தது.

கப்பமறுப்பு

தேசிங்கு ராஜனுக்கு வயது இருபத்திரண்டு. அக்காலத்தில் அவனுடைய வீரப்பிரதாபம் வெகு தூரம் எட்டியிருந்தது. அவன் சுத்தவீரனென்று பக்கத்திலுள்ளோர் நன்ருய் அறிந்திருந்தார்கள். அவனுடைய கத்தி ஐந்து துலாம் பரிசைக்கத்தி. அவனது பாலா ஏழு துலாம் பரிசை பாலா. தனது பாராசாரிக் குதிரை மீதேறி, எதிரியின் சேன சமுத்திரத்தைக் கண்டால், சிங்கம் போலே புலிபோலே புகுந்து வெட்டி விடுவான். அவனை ஜயிப்பவர் ஒருவருமில்லை யென்று தன்னேடொத்த சிற்றரசர்களிடம் பெயர்பெற்றிருந்தான். புஜபல பராக்கிரமத்தாலும், தன்னை வெல்லுவாருமுண்டோவென அரசர்கட்குரிய கர்வத்தாலும் தான் ஒரு நவாப்புக்குட்பட்ட சிற்றரசனென மதியாமல் அநேக வருஷங்களாக ஆர்க்காட்டுக்கு அனுப்பவேண்டிய பகுதியைக் கட்டாமல் நிறுத்திவிட்டனன்.

ஒருக்கால் அம்மாதிரி பணம் வரவில்லையென்று கண்ட சைதல்லா (ஸாதத் அல்லா) தன்னிடமிருந்த போர்வீரனை *தோன்றமல்லன் என்பவனைத் தகுந்த தண்டு தளங்களோடு செஞ்சிக்கனுப்பிக் கப்பம் வாங்கி வரும்படி உத்தரவிட்டனன். தோன்றமல்லனும் வெகு ஆடம்பரத்துடன் புறப்பட்டு சீக்கிரமே செஞ்சிக்கோட்டைக்குப் போகும் வழியிலுள்ள திமிரி வந்து சேர்ந்தனன். அங்குள்ள சிற்றரசனை ஷேக்முஹம்மது தோன்றமல்லனைக் கண்டு தேசிங்குராஜனுடைய பராக்கிரமத்தையும், பலத்தையும் வெகுவாகப் புகழ்ந்து அவனிடம் கப்பம் வாங்குவதென்ருல் வெகு கடினமென்றும், ஜாக்கிரதையாகப் போய் வரவேண்டுமென்றும் எச்சரித்தான். ஆயினும் தோன்றமல்லன் அதைக் கவனிக்கவேயில்லை. அங்கிருந்து ஆரணி வந்தபோது, வேங்கடராயர்

* அனுபந்தம் 2.

என்னும் ஜாகீர்தார் மறுபடியும் அவனை எச்சரிக்கைச் செய்து அவனிடமிருந்து தப்பிவருவதாயிருந்தால் ரங்கநாதனுடைய பெயரைச் சொல்லிக்கொண்டு வைஷ்ணவன்போல் நெற்றியில் நாமம போட்டுக் கொண்டுபோனுல் ஒருவேளை தப்பலாமென்று சொல்லவே, வெகு பயத்துடன் வந்து செஞ்சிக்கடுத்த சங்கராபரணி ஆற்றங்கரையிலுள்ள தேவனூர்ப்பேட்டையில் இறங்கினுன். வந்ததும் நவாப்பின் ஆக்ஞையை தவறக்கூடாதென்று தான் வந்த சமாசாரத்தை அறிவிக்க நகரா அடிக்க உத்தரவு பண்ணினுன். நகரா சப்தம் கேட்டுத் தரணிசிங்குராஜன் கோட்டை மீதேறிப் பார்க்க, நவாப்பின் சைநியம் வந்திருப்பதைக்கண்டு, பூஜை செய்துகொண்டிருக்கும் தேசிங்கு ராஜனிடம் வேகமாய் வந்து சமாசாரத்தை அறிவித்தனன். அப்பொழுது பூஜைமுடியாததால் சிற்றப்பனுக்குத் தேறுதல் சொல்லி, இரண்டு ஹர்க்காரைத் தோன்றமல்லனுக்கு அனுப்புவித்து பூஜைமுடித்துக் கொலுவுக்கு வந்தான்.

சுற்றிலும் தம்முடைய சபையோர் சூழக் கொலுவில் வீற்றிருக்கும் அவ்வரசன்முன் தோன்றமல்லன் நடுங்கிக் கொண்டுவந்து சேர்ந்தனன். வருமுன், "சுண்ணம் பெடுத்து எச்சிலுமிழ்ந்து நாமத்தைப் போட்டு," "யானையைக் குத்தி இரத்தத்தை எடுத்து நடுவிலே போட்டு," ரங்கநாதருடைய பெயரைச் சொல்லிக் கொண்டே வந்தனன். தேசிங்குராஜன் காலில் விழுந்து வெகு பயத்துடன் பகுதியும் தோப்புராப் பணமும் பாக்கியிருப்பதால் வாங்க வந்ததாகச் சொல்ல, அவ் விளஞ்சிங்கம் படபடவென்று பல்லைக் கடித்து, எதிர் நின்ற தோன்றமல்லன் நடுநடுங்கத் தலையை அசைத்து, தோளை நெறித்து, கண்களை யுருட்டி, பின்வருமாறு சொன்னுன்.

"என்ன பேச்சுப் பேசினுயடா
  தோன்றமல்லண்ணு
நீ வந்தாற்போல் நவாப்பு வந்தால்
  நிமிஷமிருக்க மாட்டேன்
பணமென்ற செய்தி காதில் விழுந்தால்
  பாய்ந்து வெட்டிடுவேன்
கருவாடு விற்கிற லப்பைப் பயலுக்கு
  கிஸ்தி கட்டுகிறதா?
கத்தி முனையிலே பணமும் தாரேன்
  நவாபுக்காணுலும்
கோட்டைக்கு வெளியில் மணல் கிடக்குது
  வாரிப்போகச் சொல்லு.
ஒட்டையாயிரம் யானையாயிரம்
  ஓட்டிவரச் சொல்லு.
பொதிகள் போட்டு நவாபுசாயபை
  எடுத்துப் போகச் சொல்லு.

இதைக் கேட்ட தோன்றமல்லன் நடுங்கினுன். தேசிங்குராஜனைப் பார்க்க, அவன் கோபத்தைக் கண்டு என்ன பிரமாதம் விளையுமோ எனத் தியங்கினுன். அரங்கநாதரை வேண்டிக்கொண்டான்.

என்னுயிர் கொண்டு ஆற்காடு போனுல்
  ரங்கநாதரே
ஆயிரம் பேருக்கு அன்னம் படைக்கிறேன்
  ரங்தநாதரே
சோகி சங்கமர் எவர் வந்தாலும்
  சொர்ண தானம் கொடுப்பேன்

என்று புலம்பினுன். அதைக் கேட்டு,

கலகலவென்று சிரித்தானையா ராஜாதேசிங்கு.

சிரித்து, தோன்றமல்லனைப் பார்த்து,

"உங்கள் நவாப்புக் கிப்போ பயப்படவில்லை
  தோன்றமல்லோஜி
உன் நெற்றி நாமத்தைக் கண்டு பயந்தேனட
  தோன்றமல்லண்ணு
ரங்கர் வார்த்தையைக் கண்டு பயந்தேன்
  தோன்றமல்லண்ணு.

என்று சொல்லிப் பதில் எழுதிக் கொடுத்தனுப்பினுன். தப்பிப் பிழைத்தோமென்று தோன்றமல்லனும் கோட்டைக்கு வெளியே வந்து தன் சமேதாரிடம் "நாம் சீக்கிரமாக மூன்று நாட் பயணம் செஞ்சிக்கு வந்தோம். இன்றைய ராத்திரியே ஆர்க்காட்டுக்குப் போகவேணும்" என்று சொல்ல, அப்படியே

"காற்றுப்போலே பறக்கிருரையா சமேதாருமாரும்."

ஆற்காடு வீதியில் அவர்கள் அடித்த நகரா சப்தம் கேட்டு, செஞ்சிக்கோட்டைப் பணம் வருகிறதென்று தன்னுடைய தனுதிகாரி பங்காரு நாயக்கனைக் கூப்பிட்டு,

"சதிர் சமுக்காளம் போடச் சொன்னுர்
  நவாபு சைதுல்லா
சராப்பு செட்டியை யழைக்கச் சொன்னுர்
  நவாபு சைதுல்லா
தூங்கா விளக்கை வைக்கச் சொன்னுன்
  நவாபு சைதுல்லா
பணமும் வாங்கத் தயார் செய்யச் சொன்னுன
  நவாபு சைதுல்லா."

சீக்கிரம் தோன்றமல்லன்,

கொள்ளுக்குத்தின உலக்கைபோல
நவாபு எதிரில் நின்றான்.

"பண மெங்கே யென்று கேட்ட நவாபுக்குத் தோன்றமல்லன்,

"இத்தனைநாளும் இவனைப்போல
நானும் பார்த்ததில்லை
இனியில்லாத பாடுபடுத்தினான்
ராஜா தேசிங்கு
செத்துப் போனவன் திரும்பி
வந்தேன் நவாப்பு சைதுல்லா."

என்று தான் கொண்டுவந்த ஓலையை எடுத்து எதிரில் வைத்தான். அவ்வோலையை ரங்கனாதபிள்ளை என்னும் பெரிய கணக்கப்பிள்ளை வாசித்துப்பார்த்துத் தலை குனிந்தனன். அப்பொழுது நவாபு என்ன எழுதியிருக்கிறதென்று கேட்டு,

"இரண்டு நாழிகையில் இடித்துப் போடுகிறேன்
செஞ்சிக் கோட்டையை நான்
எதிர்த்துவந்த தேசிங்கு ராஜனைக்
குத்திப் போட்டிடுவேன்
ஆண்சிறை பெண்சிறை தள்ளிப்போடுகிறேன்
செஞ்சிக் கோட்டைக்குள்."

என ஆர்ப்பரித்தான்.

ரங்கனாதப் பிள்ளை வாசித்த கடிதம் பின்வருமாறு:—

"ஆண்பிள்ளையானால் நவாபு சாயபை
இன்றைக்கு வரச்சொல்லும்.
பெண்பிள்ளையானால் நவாபு சாயபை
அங்கே இருக்கச் சொல்லும்.
மீசை முளைத்த ஆண்பிள்ளையானால்
சண்டைக்கு வரச் சொல்லும்.
கத்திமுனையில் பணமும் தாரேன்
நவாபுக்கானாலும்.
போனவருஷத்துக் கிந்த வருஷம்
வரகு மெத்த விளைவாம்.
வரகு வைக்கோல் மெத்த கிடக்குது
வாரிப் போகச்சொல்லும்.
கோட்டையின்மேல் கல்லுக் கிடக்குது
வாரிப் போகச்சொல்லும்.
கோட்டை வெளியில் மணல் கிடக்குது
வாரிப் போகச்சொல்லும்."

சண்டைக்குத் தயார் செய்தல்

இந்தக் கடிதத்தை வாசிக்கக் கேட்ட நவாபு சைதுல்லா, நீல விழிகளை நெறித்து மீசை படபடவெனத் துடிக்க, பட்டாவை உருவிக் கையிலே பிடித்து பங்காரு நாயக்கனைப் பார்த்து, தன் அதீனத்திலுள்ள நூற்றெழுபத்திரண்டு பாளையக்காரர்களையும் உடனே தம் சைநியங்களுடன் கொலுவுக்கு வரும்படி ஓலை எழுத ஆக்ஞாபித்தனன்.

அக்கடிதங்களைக் கொண்டு,

"காற்றுப் போலே பறக்கிறார்களையா அர்க்கார் மார்களும்."

சீக்கிரமே சேத்துப்பட்டு தாவுத்துக்காரன், திருவண்ணாமலை சுபங்கிதுரை, திம்பிரிக்கோட்டை ஷேக்முகம்மது, வாலிக் கோட்டை அப்துல்காதர், மதுரை சீமை மலையாளத்தான், ஆரணிக்கோட்டை வேங்கடாராயர், அரியலூரு பெரியதுரை, ஆச்சிநாயக்கன், பொம்மி நாயக்கன், எட்டையாபுரத்து பாளையக்காரன் முதலிய சகலரும் வந்துசேர்ந்தனர்.

இதற்குள்ளாக நவாபு அறுபதினாயிரம் ரேக்ளா பீரங்கிகளும், பாரா துப்பாக்கிகளும் அதற்குத் தகுந்த குண்டு மருந்துகளும் வெள்ளைக் கூடாரமும் பச்சைக் கூடாரமும் கணக்கில்லாத சேனைத் தளமும் தயார் பண்ண உத்திரவிட்டனன். எல்லாருடைய சைந்நியமும் வந்துசேர,

பதினாதவழி பரவி யிருக்கிறது
நவாப்பு பாளயமும்.

இப்படித் தயாரிக்கப்பட்ட சைநியத்திற்கு சீக்கிரம்,

செஞ்சிக் கோட்டைக்குப் பயணமென்று
நகரா வடித் தானும்.
கண கண கண கண கண கண
வென்று நகாரு முழங்குதுபார்.
பள பள பள பள பள பள வென்று
பட்டாக்கள் மின்னுது பார்.
தள தள தள தள தள தள வென்று
கமுறு முழங்குது பார்.
துந்துபி பேரிகை சில்லரி சல்லரி
தொந் தொந் தோமெனவே.

செஞ்சிக்கோட்டை சீக்கிரமே வந்து சேர்ந்தனர். அப்பொழுது தன் மந்திரியான பங்காரு நாயக்கனைப் பார்த்து நவாபு தண்டுகளுக்கு,

"சம்பளம் போடு ரஸ்துக்கள் போடு
பங்காரு நாய்க்கா நீ."

என உத்திரவிட்டனன். நாயக்கனும் அப்படியே செய்ய, தேவனூர் பேட்டைக்குச் சமீபத்தில் சங்கராபரணிக்கரையில் வந்து நவாபு பாளையம் தங்கிற்று. சேனையைப் பிரித்து

உடுக்கை யிழந்தவன் கைபோல வாங்கே யிடுக்கண் களைவதா நட்பு.

அங்கங்கே யமர்த்தி கூடார முதலியன போட்டு பீரங்கி முதலியன ஏற்றி, சுற்றிலும் காவல் குதிரையை வைத்து உடனே ஒரு பளுத்தா தீர்த்தான்.

தேவனூர் கொள்ளை

நவாபு சைனியம் தேவனூரைக் கொள்ளையிட ஆரம்பித்தது. திருவண்ணாமலை சுபங்கி துரை, அதை முன்னுக்கு நின்று நடத்தினன். ஜனங்களெல்லாம் பயந்து ஓடினார்கள். செஞ்சிக் கோட்டை வெளியிலே கோவென்ற சப்தம் உண்டாயிற்று.

நவாபு பாளைய மிறங்கின சமாசாரம் சிற்றப்ப ராஜன் தேசிங்குக்குத் தெரியப்படுத்தினன். அக்காலம் தேசிங்கு கண்ணைமூடி பூஜை செய்திருந்தான். அவனைப் பார்த்து

"உன் பூசை முகத்தில் இடிவிழுந்தது
மகனே தேசிங்கு
கோட்டையைச் சுற்றி வளைத்திருக்கிறது
நவாபு பாளையமும்.
பாதி பூஜையைத் தள்ளிப்போடடா
மகனே தேசிங்கு"

என ஆத்திரப்பட்டுச் சொல்லினன்.

தேசிங்குராஜன் சிற்றப்பனைப் பார்த்து,

"என்ன பேச்சுப் பேசினீரையா
சிற்றப்பராஜாவே
அறுபது வயது சென்றவருக்கு
அறிவு கொஞ்சமில்லை.
அரைக்கால் நாழிகை பொறுத்துக் குதிரையைத்
தயார் பண்ணச் சொல்லும்.
பத்தல் பத்தலாய் கிழித்துப் போடுகிறேன்
நவாபு பாளயத்தை.
சல்லிச் சல்லியாய்ச் சிதைத்துப் போடுகிறேன்
சேனைகளெல்லா (வ)ற்றையும்.
இந்தப் படியாய் செய்யாமற் போனால் என்பேர்
தேசிங்கல்ல
டாறு டாறாய் கிழித்துப் போடுகிறேன்
நவாப்பையானாலும்"

என வீராவாதம் செய்தனன். இதற்குள் தேவனூர் குடிகளும் சுபங்கி துரை வீடு வாசலை இடித்து மாடகன்றுகளை மடக்கி அகப்பட்ட சிறையைப் பிடித்துப்போனனென முறையிட்டுக் கொண்டு வந்துசேர்ந்தனர்.

"பெட்டி போச்சுது பேழை போச்சுது
ராஜாதேசிங்கு.
பெண்சாதி போச்சுது பிள்ளை போச்சுது
ராஜாதேசிங்கு.
ரொக்கம் போச்சுது ரோசனம் போச்சுது
ராஜாதேசிங்கு.
நாங்கள் என்னமாய்ப் பிழைக்கப் போகிறோம்
ராஜாதேசிங்கு"

என கண்களில் நிறையக் கண்ணீர் விட்டனர் குடியானவர்களும்.

அவர்களைப் பார்த்து தேசிங்குராஜன் பதற வேண்டாமெனச் சொல்லி, ஒரு கொள்ளைக்கு ஒன்பது கொள்ளை வாங்கித் தருவதாகவும், சிறைக்குச் சிறை பிடித்துத் தாரேனென்றும் தைரியம் சொல்லியனுப்பினன்.

(இன்னும் வரும்.)

சுத்த வீரன்

HAPPY WARRIOR

[இஃது ஆங்கில மகாகவி உவில்லியம் உவர்ட்ஸ்வர்த் (William Wordsworth) என்பவர் எழுதிய "ஹாப்பி வாரியர்" (Happy Warrior) என்னுங் கவியின் மொழிபெயர்ப்பு.

I நல்லெண்ணங்கள்

சுத்த வீரன் என்பான் யாவன்? அத்தகைய வீரனாதற்குத் தகுதியுடையான் யாவன்? யாவனோ வெனில்,

எவன் மேன்மையான உத்தம குணத்தோடு தன் இளமையில் உள்ளங் கிளர்ந்து ஒத்து வளர்ந்து நிரம்பிய எண்ணங்களைக் காளைப்பருவத்தில் பக்குவப்படுத்தி முற்றுவிக்கின்றானோ,

எவனுடைய உத்தமமான எண்ணங்கள் அவ

THE HAPPY WARRIOR

Who is the happy warrior? Who is he
That every man in arms should wish
to be?
—It is the generous Spirit, who, even
brought
Among the tasks of real life, hath wrought
Upon the plan that pleased his boyish
thought;
Whose high endeavours are an inward light
That make the path before him always
bright:
Who, with a natural instinct to discern
What knowledge can perform, is diligent
to learn;
Abides by this resolve, and stops not there,

னுடைய வாழ்நாட்களுள் வரும் பல கஷ்டங்களுள்ளும், மனதை மயங்க வைப்பனவற்றுள்ளும், ஊடுருவிச் செல்ல ஒப்பற்ற வலிமையைத் தந்து மங்காத விளக்கே போலும், வழி காட்டித் திகழ்கின்றனவோ.

II. அறிவும் நல்லொழுக்கமும்

எவன் தனக்கியல்பிலேயே எப்பொருட் கண்ணும் மெய்ப்பொருள் காணும் நுண்ணறிவைப் படைத்திருந்தும் பின்னும் பின்னும் பேரறிவுண்டாகும் வண்ணம் பல்லான்ற விஷயங்களிலும் பழகிப் பயிலுகின்றானோ;

எவன், அவ்வறிவு வளர்த்தலோடும் நின்றுவிடாமல் அஃதோடு கூட தன் நல்லொழுக்கம் மேம்படுதலையே முதன்மையாகக் கருத்தோடு கருதுகின்றானோ;

பொறுத்தற்கரிய கஷ்டங்களில் இடிபடவும், பயங்கரமான படுகளத்தில் பட்டுழலவும், எக்காலத்திலும் இரத்தக் களரியில் புரளவும் விதியேற்பட்டிருந்தாலும், இவற்றால் மனஞ்சலியாமலும், அதைக் கல்போல கடினமாக விடாமலுங் காத்துத் தன் நல்லொழுக்கததைப் பலப்படுத்தி ஆன்ம லாபத்தை அடைவதற்கு, இவைகளே இன்றியமையாத சாதனங்கள் என்று எவன் கொள்ளுகின்றானோ;

III. இரக்கம்

இவ் விடையூறுகளுக் கிடையில் மனித சுபாவத்திற்கோர் அரும் பூஷணமாக விளங்கும் இரக்க மெனும் பண்பு எவனுக்கு உதிக்கின்றதோ;

பாமர ஜனங்கள் மனதைக் கல்லாக்கிக் கீழ்ப்படுத்துவனவாகிய இவைகள் எவனுக்கு இரக்க குணத்தை ஊட்டுகின்றனவோ;

கனிவிரக்கங் காட்டுவதற்குச் சந்தர்ப்பங்கள் பலவாக இருத்தல் அனுபவமாதலால் கடமை காரணமாகக் கொடுமையா யிராமல், இத்தகைய சந்தர்ப்பங்களில் உடனே சாந்தகுண ரூபியாய் மாறி எவன் விளங்குகின்றானோ; அவனே சுத்த வீரனாவான்.

IV. துன்பத்தில் நன்மைகள்

பின்னும், அவனுடைய நல்லொழுக்கங்களுக்கும் அறிவுக்கும் இடையூறாக இடுக்கண்கள் பல நேரிடுமேயாயினும், அவன் அவைகளைக் கொண்டு தன் மனோவலிமையையும் யோக்யதையையுங் கணக்கறிந்து தெரிந்துகொள்ள வேண்டியவனா

But makes his moral being his prime care;
Who, doom'd to go in company with Pain,
And Fear, and Bloodshed, miserable train!
Turns his necessity to glorious gain;
In face of these doth exercise a power
Which is our human nature's highest dower;
Controls them and subdues, transmutes, bereaves
Of their bad influence, and their good receives; By objects which might force the soul to abate,
Her feeling, rendered more compassionate;
Is placable—because occasions rise
So often that demand such sacrifice;
More skilful in self-knowledge, even more pure,
As tempted more; more able to endure,
As more exposed to suffering and distress;
Thence, also, more alive to tenderness.
—'Tis he' whose law is reason; who depends
Upon that law as on the best of friends;
Whence, in a state where men are tempted still
To evil for a guard against worse ill,
And what in quality or act is best
Doth seldom on a right foundation rest,
He labours good on good to fig and owes
To virtue every triumph that he knows;
—Who, if he rise to station of command,
Rises by open means; and there will stand
On honourable terms, or else retire,
And in himself possess his own desire;
Who comprehends his trust, and to the same
Keeps faithful with a singleness of aim;
And therefore does not stoop, nor lie in wait
For wealth, or honours or for worldly state;
Whom they must follow; on whose head must fall,
Like showers of manna, if they come at all;
Whose powers shed round him in the common strife,
Or mild concerns of ordinary life,
A constant influence, a peculiar grace;

வான். இத்தகைய இடுக்கண்களை அடிக்கடி அனுபவித்து அவற்றினின்றும் மீண்டு வருவதினால் மற்றவர்களைக் காட்டிலும் அவன் பரிசுத்தவானாக இருப்பான். அவ்விடுக்கண்களால் அவன் ஏனையோரைக் காட்டிலும் எதையும் பொறுமையாக வகிக்குஞ் சக்தியையும் அடைவான். அவற்றால் அவனுக்கு மற்றையோரைக் காட்டிலும் கனிவிரக்கம் மிகுதியாய்ப் பொங்கிவழியும்.

V. மனச்சாட்சி

அவனுக்கு நீதிச்சட்டம் அவனது அந்தக்கரணம் அல்லது மனச்சாட்சியே யாகும். எது சரியென்று அவன் மனதிற் படுகின்றதோ அதுவே அவனுக்கு நீதிமுறை யாகும். ஒருவன் தன்னுடைய உத்தமத்தோழனை எப்படிச் சார்ந்திருப்பானோ அப்படியே அவன் அச்சட்டத்தை அனுசரித்து உயிர்வாழ்வான்.

அத்தியாவசியமாயும் செய்யத் தக்கனவாயும் தோன்றுமவை சிற்சில சமயங்களில் * புறக்கரணங்களுக்கு ஒப்பவிருந்தாலும், அந்தக்கரணம் அல்லது மனச்சாட்சிக் கனுசரணையாகவேனும் உத்தம காரணத்தாலேனும் அமைவது அருமையா யிருத்தலால், — வேறு பல கெடுதிகள் நிகழாமல் தடுக்க மற்றுமோர் கெடுதியையே சாதனமாகக் கொள்ள வேண்டுமென புறக்கரணத் தூண்டுதலால் மற்றவர்களுக்சத் தோன்றக்கூடிய சந்தர்ப்பங்களில், — உத்தமப் போர் வீரன், தீமைசெய்து நன்மையை நாடுவதை விட்டு நன்மையைக் கொண்டே அதனையடைய முயன்று அதனால் எய்தும் வெற்றிக்கு நன்மையே காரணமென்று நயந்து நிலைப்பான்.

VI. பெருந்தன்மை

மேலான பதவிக்கு வந்தானென்றால், இலஞ்சங் கொடுத்தேனும் மற்றும் இழிதொழிலைச் செய்தேனும் வராமல், பலருந் தெரிந்து மதித்த தனது களங்கமற்ற யோக்யதையாலும் நற்குணப் பெருக்காலும் வெளிப்படையாக அப்பதவியை அடைந்து அந்நிலையில் நேர்மையொடும் புகழொடும் நெடிதிருப்பான்.

வேறு ஈன வழிகளாலேயே அப்பதவியை யடைய வேண்டுமானால், அதனை விட்டொழித்து விட்டு அவமானத்தாலும் இழிதகைமையாலும்

* புறக்கரணங்கள் = பஞ்சேந்திரியங்களும் மேல் மனதும் (Superficial mind)

But who, if he be call'd upon to face
Some awful moment to which Heaven has joined
Great issues, good or bad for human kind,
Is happy as a Lover; and attired
With sudden brightness, like a Man inspired;
And, through the heat of carflict, keeps the law
In calmness made, and sees what he foresaw;
Or if an unexpected call succeed,
Come when it will, is equal to the need;
—He who, though thus endued as with a sense
And faculty for storm and son turbulence,
Is yet a Soul whose master bias leans
To homefelt pleasures and to gentle scenes;
Sweet images! which, whereso'er he be,
Are at his heart: and such fidelity.
It is his darling passion to approve;
More brave for this, that he hath much to love:—
'Tis finally, the man, who, lifted high,
Conspicuous object in a Nations eye,'
Or left unthought of in obscurity—
Who with a toward or untoward lot,
Prosperous or adverse, to his wish or not—
Plays in the many games of life, that one,
Where what he most doth value must be won;
Whom neither shape of danger can dismay,
Nor thought of tender happiness betray;
Who, not content that former worth stand fast,
Looks forward, persevering to the last,
From well to better, daily self-surpass'd;
Who, whether praise of him must walk the earth
For ever, and to noble deeds give birth,
Or he must fall to sleep without his fame,
And leave a dead, unprofitable name—
Finds comfort in himself and in his cause,
And, while the mortal mist is gathering, draws
His breath in confidence of Heaven's applause;
This is the happy Warrior; this is he
That every Man in arms should wish to be.

—WILLIAM WORDSWORTH

சிறுமைப்படாமல் தனது நல்லெண்ணங்களால் இருப்பதே போதுமெனத் திருப்தியடைவான்.

VII. கடமை

அவன் தன் கடமையை நன்கறிந்து அதனையே இலக்காகக் கடைபிடிப்பான்.

ஆகையால் அவன் செல்வத்தையேனும் புகழையேனும் பெரிய அந்தஸ்தை யேனும் பெற இழிந்த காரியங்களில் இறங்கமாட்டான். அவைகளுக்காகத் தன் கடமையைச் செலுத்தாது அல்லும் பகலும் என்னவாய் முடியுமோ என்று ஏங்கி எதிர்பார்த்துக் காத்திருக்கவு மாட்டான்.

அவைகள் அவனிடத்தில் வலிய வந்து அமையும். அவைகள் வருவன வென்றால் எல்லாம் வல்ல எம்பெருமானின் நல்லருள் பாரியாய் அவன்மேல் பொழியும்.

உயிர் வாழ்க்கை யிடமாகத் தோன்றும் சாமானிய விவகாரங்களில் உத்தம வீரனொருவன் தனக்கென்றே அமைந்த ஒரு சுகுண சக்தி காரணமாக எல்லோருக்கும் நன்மை செய்பவனாகவே இருப்பான்.

கடவுளால் நிர்ணயிக்கப் பட்டன போலுமுள்ள அபார விவகாரங்களில் நன்மைக்கோ தீமைக்கோ தலையிடவேண்டி வந்த காலத்தில் ஒரு காதலன்போலும் களிபேறுவகை யடைவான்.

அப்பொழுது பெருமான் திருவருளைப் பெருகப் பெற்றவன்போலும் கவலை யொழிந்து முக மலர்ந்து களிகொண்டு கம்பீரத்தோடும் கனிந்து பேசுவான்.

பெருத்த சண்டைக் கிடையிலும், ஆத்திரப் படாமல் பொறுமையோடு சாவதானமாய் இருந்து தனது அந்தக்கரணம் அல்லது மனச்சாட்சியின் அமைதியை விட்டுச் சிறிதும் விலகான்.

அவன் கண்முன்னால் நடப்பன யாவும் முன்னமே நினைத்தும் எதிர் பார்த்தும் இருந்தன வாகவே அமையும்.

எதிர்பார்க்காத வண்ணம் திடீரென்று போர் முகத்து நிற்க எப்பொழுது நேரிட்டாலும் பூரணாலங்கிருதனாய் தயார் என்றிருப்பான்.

VIII. இல்லற வின்பம்

உத்தம வீரனொருவன் போருக்கும் முரட்டுக் காரியங்கட்குமே மிகவுந் தகுந்தவனென்று ஏற்பட்டாலும், அவனது முக்கிய விருப்பம் தன் குடும்பத்தில் ஒற்றுமையும் சமாதானமும் திகழ வேண்டுமென்பதிலேயே சார்ந்திருக்கும்.

எங்கே இருப்பினும் இல்லற வின்பமே அவன் மனதில் நிரந்தரம் குடிகொண்டிருக்கும். இல்லற வின்பத்தில் பற்றுவைப்பதற்கு அருகன் என்று காட்டுவதற்கே அவன் பெரிதும் விரும்புவான்

IX. மனத்திட்பம்

ஜனங்களுக்கிடையில் தான் நடு நாயகமாக உயர்த்தப்பட்டாலும் அல்லது கவனியாது மூலையில் ஒதுக்கப்பட்டாலும், தன் உயிர் வாழ்க்கையில் அதிருஷ்டசாலியா யிருந்தாலும் அதிருஷ்ட ஹீனனா யிருந்தாலும், மேலோங்கிச் சென்றாலும் கீழே தாழ்ந்து குறுகினாலும், தன் விருப்பப்படி யிருந்தாலும் இல்லாவிட்டாலும் தன் உயிர்வாழ்க்கைத் துறையை, உலகப் புகழையும் பொருளையும் அடையும் வண்ணமே அமைக்க முயற்சி செய்யாமல், சுத்த மனசாட்சிக்கு அநுகுணமாக அமைத்துக்கொள்ளுவான்.

அவனைத் துன்பங் கலங்கச் செய்யாது. சந்தோஷத்தால் மனசாட்சியினின்றும் பிறழவு மாட்டான்.

ஒன்றைச் செய்துவிட்டு அதோடு நின்றுவிடாமல் எப்போதும் முன்னேறி நின்று இறுதிவரையிற் சலியாமல் மேலும் மேலும் பெருமைக்குரியனவற்றை ஒன்றைவிட ஒன்று மெச்சத்தகுந்த வண்ணஞ் செய்துகொண்டே இருப்பான்.

உலகமெங்கும் தன் புகழ் என்றும் பரவி கௌரவமான காரியங்களைச் செய்ய விருந்தாலும் அல்லது கீழே தாழ்ந்து ஒரு புகழுமில்லாமல் தன் பெயரே பயனற்றதாய் முடிந்தாலும் தன் மட்டிலே திருப்தி கொள்வான். அவன் தன் காரண காரியங்களின் தூய்மையில் பெருமை கொள்வான்.

இறுதிக்காலத்தில் தன் காரணமாக மனிதன் பெருமை கொண்டாலும் கொள்ளாவிட்டாலும் கடவுளது புகழும் அன்பும் உண்டென்னும் நம்பிக்கையால் சந்தோஷமாக இவ்வுலகை விடுவான்.

இத்தகைய நலங்கள் வாய்ந்தவனே சுத்தவீரனாவான். அவனே அவ்வீரனாதற்குந் தகுதியுடையான்.

ஆய்ந்தாய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை தான்சாந் துயரந் தரும்.

ஸ்ரீ கிருஷ்ணகர்ணம்ருதம்

SRI KRISHNA KARNAMRUTAM

"த்ரிபுவனகமனம் தமாலவர்ணம்
ரவிகாகெளரவாம்பரம் ததானே |
வபு ரளகதுலாவ்ருதானனப்ஜே
விஜயஸகே ரதிரஸ்து மே நவத்யா" ||

134. ஸ்மிதஸ்னுத ஸுதாதரா மதசிகண்டி
பர்ஹாங்கிதா:
விசாலநயனம்புஜா வ்ரஜவிலா
ஸினீவாஸிதா: |
மனோஞ்ஞமுகபங்கஜா மதுரவேணு
நாதத்ரவா:
ஜயந்தி மமசேதஸ: சிரமுபாவிதா
வாஸனா: ||

"மந்தஹாஸத்தால் பெருகும் அமிருத ரஸங் கூடின அதரங்கள், உல்லாஸமான மயில் தோகைகளால் அலங்கரிக்கப்பெற்ற கூந்தல்கள், தாமரைப் புஷ்பம்போல் நீண்ட அழகிய நேத்திரங்கள், கோபிகைகளால் விருத்தி செய்யப்பட்ட சிருங்கார சேஷ்டைகள், செந்தாமரைபோன்ற திருமுக மண்டலத்தின் சோபை, காதிற்கினிமையான வேணுகானங்கள், இவற்றை என் மனத்தில் அடிக்கடி தியானிப்பதாலுண்டாகும் அனுபவங்கள் வெகு ஆனந்தகரமா யிருக்கின்றன."

135. ஜீயாதஸௌ சிகி சிகண்ட க்ருதாவதம்ஸா
ஸாம்வித்திகீ ஸாஸகாந்தி ஸுதாஸம்ருத்தி: |
யத்பிந்துலேச கணிகா பரிமாணபாக்ய:
ஸௌபாக்யஸீமபதமஞ்சதி பஞ்சபாண: ||.

அழகிற் சிறந்தவன் என்று உலகிற் கொண்டாடப்பட்டு வரும் மன்மதனது அழகும், கார்வண்ணனது ஸௌந்தர்யத்துக்குச் சற்றும் ஈடாகாதென்பதை வெளியிடுகிறார் லீலாசுகர். "மயில் தோகையால் அலங்கரிக்கப் பெற்றுள்ள பகவானது ஸௌந்தர்யாதிசயமானது எல்லாவித சோபைகளின் ரஸங்கள் நிரம்பியதாயும், பேரானந்தத்தை யளிக்கக்கூடியதாயும் விளங்குகிறது. இச்சோபையின் திவலை அளவுள்ள காந்தியைப் பெற்றுள்ள மன்மதன் உலகில் ஸௌந்தரியத்தில் உத்தம நிலைமை அடைந்தவன் என்று கூறப்படுகிறான்."

136. ஸ்கந்தாவாரஸத : ப்ராஜா : கதிபயே
கோபாங்கனா : ஸ்வாங்கனா :
ஸ்கந்தாலம்பினி வத்ஸதாம்னி தனதா :
கோபாஸ் ஸஹாயாதய : |
ச்ருங்கார கிரிகைரிகம் சிவசிவச்ரீமந்தி
பர்ஹாணி வா
ச்ருங்க க்ராஹிகயா ததாபி ததிதம்
ப்ராஹுஸ் த்ரிலோகேச்வரம் ||.

இதனால் நிந்தாஸ்துதி ரூபமாய் பகவானது மகிமை வெளியிடப்படுகிறது. முக்கிய பட்டணத்திலிருக்கும் பிரஜைகள் சிலரே. இடைப்பெண்களே பத்தினிகள்; கழுத்தில் தொங்குபவை கன்றுத் தாம்புகள்; சிநேகிதர்களான ஆயர்களை தனமளித்து உதவுகிறவர்கள்; மலையிலுள்ள தாதுவர்க்கங்களும், குகப்பெருமானது மயிலின் தோகைகளும், தேக அலங்காரத்துக்குரிய அங்கராகங்களும் ஆபரணங்களுமாம்; இவ்வாறிருந்தும் கண்ணனை ஏதோ ப்ரேமாதிசயத்தால் உயரத் தூக்கிவைத்து, மூன்று லோகங்களுக்கும் அதிபதி என வர்ணித்துக் கூறுகிறார்கள்!"

137. ச்ரீமத்பர்ஹி சிகண்ட மண்டன ஜுஷே
ச்யாமாபி ராமத்விஷே
லாவண்யைக ரஸாவஸிக்த வபுஷே
லக்ஷ்மீஸர : ப்ராவ்ருஷே |.
லீலாக்ருஷ்ட ரஸஞ்ஞ தர்ம மனஸே
லீலாம்ருத ஸ்ரோதஸே
கே வா நஸ் ப்ருஹயந்தி ஹந்த மஹஸே
கோபீஜன ப்ரேயஸே ||.

மீண்டும் கார்வண்ணனது ஸௌந்தர்யாதிசயத்தை அனுசந்தித்து, யார்தான் அதில் மனம் ஈடுபட்டுக் களிக்காமலிருக்க முடியுமென்று கூறுகிறார் லீலாசுகர்:—

"அழகியமயில்தோகையை அலங்காரமாயுள்ளதும், மனோஞ்ஞமான கருநிறமான காந்தியுள்ளதும், எங்கும் உத்தம லாவண்யம் நிரம்பிய அங்கங்களோடு கூடியதும், சோபையாகிற ஏரிக்கு மழைகாலம்போல் விளங்குவதும், தனது லீலைகளால் ரஸமறிந்தோரின் மனதைக் கவரக்கூடியதும், சிருங்கார அமிர்தத்துக்கு ஓர் ஓடைபோலுள்ளதும், கோப ஸ்திரீகளுக்கு அத்திபந்தம் பிரியமுள்ளதுமான தேஜோராசியிடத்தில் யார்தான் மனப்பூர்வமாய் ஆசைப்படாதிருப்பார்கள்?"

138. ஆபாடலாதர மதீர விலோல நேத்ரம்
ஆமோத நிர்ப்பரிதமத்புத காந்திபூரம் |.
ஆவிஸ் மிதாம்ருத மனுஸ்மிருத லோபநீயம்
ஆமுத்ரிதானன மஹோமதுரம் முராரே : ||.

"முராசுரனை ஸம்ஹரித்த கண்ணனது திருமுகமண்டல ஸௌந்தரியம் என்னே! கொஞ்

குணனுங் குடிமையுங் குற்றமுங் குன்ரு வினனு மறிந்தியாக்க நட்பு.

சம் சிவந்த அதரமும், அழகாய்ச் சலிக்கும் நேத்திரங்களும் கூடியது; பரிமளம் நிரம்பியுள்ளது; வர்ணிக்கவொண்ணு காந்தி பூர்ணமாயுள்ளது; புன்சிரிப்பாகிற அம்ருதம் கூடியது; நினைக்க நினைக்க மனதைக் கவரக்கூடியது."

139. ஜாக்ருஹி ஜாக்ருஹி சேத :
சிராய சரிதார்த்ததா பவத : |
அனுபூய தாமிதமிதம்
புரஸ்திதம் பூர்ணநிர்வாணம் ||

"மனமே! ஜாக்கிரதையாய் இரு. வெகுகாலமாய் எதிர்பார்த்துள்ள கடைத்தேறும் சமயம் நேர்ந்திருக்கிறது. இதோ உன்முன் தோன்றியுள்ள பூர்ணனந்த காரண வஸ்துவை சலனமற்று அனுபவிப்பாயாக!" லீலாசுகருக்கு, இடைவிடாது அனுஸந்தானத்தால் மனதில் பகவானது ஸாக்ஷாத்காரம் ஏற்பட்டு, அவர் பரமானந்தம் கொண்டார் என்பது கருத்து.

140. சரணயோருணம் கருணுத்ரயோ :
கசபரே பஹுளம் விபுலம் த்ருசோ : |
வபுஷி மஞ்சுள மஞ்சன மேசகே
வயஸி பாலமஹோ மதுரம் மஹ : ||.

"கருணை நிறைந்துள்ள சரணங்களில் சிவந்தும், கூந்தல் அடர்ந்தும், நேத்திரங்களில் விசாலமானதும், கண்ணிலிடும் மைபோல் கறுமையுள்ள தேகத்தால் அழகியதும், வயதில் இளமை யுடையதும் இவ்வித பகவானது தேஜஸ் எவ்வளவு மதுரமானது!"

141. மாலாபர்ஹ மனேஞ்ஞ குந்தளபரம்
வன்ய ப்ரஸூனேக்ஷிதாம்
சைலேயத்ரவ க்லுப்த சித்ரதிலகாம்
சச்வன் மனேஹாரிணீம் |
லீலாவேணு ரவாம்ருதை காவிகாம்
லாவண்ய லக்ஷ்மீமயீம்
பாலாம் பாலதமால நீலவபுஷம்
வந்தே பராம் தேவதாம் ||.

"மயிலிறகுக் கூட்டங்களால் அலங்கரிக்கப்பெற்ற கூந்தல்களோடு கூடியதும், வனங்களிலுண்டாய புஷ்பங்களால் நிரப்பப்பட்டதும், கைரிகாதி தாதுக்களால் இடப்பட்ட அழகிய திலகமுள்ளதும், பார்க்கப்பார்க்க மனதைக் கவர்ந்து களிப்பிக்கக்கூடியதும், இனிய வேணுகான ரஸம் நிரம்பியுள்ளதும், உத்தமலாவண்யமே உருவெடுத்தது போலுள்ளதும், தமால விருக்ஷத்தின் இளந்தளிர்போல் அழகிய கறுநிறமுள்ளதுமான விசேஷ தேவதா ஸ்வரூபியான பாலனுக்கு நமஸ்காரம்."

142. ஷரும்ருதுபதே கூடம் ஷல்பே
கனம் ஜகனஸ்தலே
நளினமுதரே தீர்க்கம் பாஹ்வோ :
விசாலமுரஸ்தலே |
மதுரமதரே முக்தம் வக்த்ரே
விலாஸி விலோசனே
பஹுகசபரே வன்யம்வேஷே
மனேஞ்ஞ மஹோமஹ : ||

"பாதங்களில் பெருத்து மிருதுவாயுள்ளதும், கணைக்காலில் மறைந்துள்ளதும், இடுப்பில் கனமானதும், உயரத்தில் மிருதுவானதும், புஜங்களில் நீண்டதும், மார்பில் விசாலமானதும், அதரத்தில் அழகியதும், முகத்தில் மனேஞ்ஞமானதும், நேத்திரங்களில் லீலா விசேஷங்களுடையதும், கூந்தல்களில் அடர்ந்ததும், வேஷத்தில் வனஸம்பந்தமா யுள்ளதுமான பகவானது தேஜஸானது வெகு ரம்மியமானது!"

143. ஜிஹானம் ஜிஹானம் ஸுஜானேன மௌக்தயம்
துஹானம் துஹானம் ஸுதாம் வேணுநாதை: |
லிஹானம் லிஹானம் ஸுதீர்க்கைரபாங்கை:
மஹாநந்த ஸர்வஸ்வ மேதந் நமஸ்தாத் ||.

"லீலா விசேஷங்களால் பரம சோபையோடு விளங்குவதும், இனிய வேணுகானங்களால் அமிருதத்தை உண்டுபண்ணுவதும், கடாக்ஷ வீக்ஷண்யங்களால் பேராநந்த ஸாரத்தை யளிக்கக்கூடியதுமான இந்த வஸ்துவை நமஸ்கரிப்போமாக!"

144. லஸத்பர்ஹாபீடம் லளிதலளித
ஸ்மேரவதனம்
ப்ரமத்க்ரீடாபாங்கம் ப்ரணத ஜனதா
நிர்வ்ருதிபதம் |
நவாம்போத ச்யாமம் நிஜமதுரிமா
மோதபரிதம்
பரம் தேவம் வந்தே பரிமளிதகை
சோரகரஸம் ||.

"அசைந்தாடி விளங்கும் மயில்தோகை ரூபமான அலங்காரமுள்ளவனும், புன்சிரிப்பால் வெகு ரம்மியமான முகமண்டலமுடையவனும், பல்வாறு சலிக்கும் கடாக்ஷ வீக்ஷணங்களுள்ளவனும், சரணம் புகுந்தோருக்கு ஸுகமளிக்கும் பாதங்களோடு கூடினவனும், நீருண்ட மேகம் போல் அழகிய கறுநிறமுள்ளவனும், நிகரற்ற

குடிப்பிறந்து தன்கட் பழிநாணு வானைக் கொடுத்துங் கொளல்வேண்டு நட்பு.

ஸௌந்தரியம், பரிமளம் இவற்றால் நிரம்பியவ னும், குழந்தைப்பருவ ரஸங்கள் ஒன்றாகூடி உருவெடுத்தது போல் விளங்குபவனுமான வர்ணிக்கவொண்ணு தேவசிரேஷ்டனை வணங்குகிறேன்." கார்வண்ணனது அன்யாதிருச பால்ய சௌந்தரியத்தையும் லீலா விசேஷங்களையும் சாதாரணமாய்ச் சொல்லி மனத்திருப்தி யடையாது, லீலாசுகர் பலவிதமாய் வர்ணித்து ஆனந்தப்படுகிறார் என்பது கவனிக்கவேண்டும். இல்லாவிடில், முன் சொன்னதையே மீண்டும் கூறுவதால், ஸ்வாரஸ்யக் குறைவு ஏற்படும்.

145. ஸ்வாரஸ்ய ஸாமக்ர்யமிவானனேன
மாதுர்ய சாதுர்ய மிவஸ்மிதேன |
காருண்ய தாருண்ய மிவேக்ஷிதேன
சாபல்ய ஸாபல்யமிதம் த்ருசோர்மே ||

"கண்ணனது முகாரவிந்தமானது உலகில் மனோஜ்ஞமானவற்றிற்கெல்லாம் இருப்பிடம் போன்றது; அவரது புன்சிரிப்போ ஒப்பற்ற இனிமை யளிக்கக்கூடியது; அவரது கடாக்ஷ வீக்ஷணங்கள் அளவற்ற கருணை நிரம்பினவைகளாய்ப் பிரகாசிக்கின்றன. இவற்றை நோக்கும் எனது கண்கள், பார்வையின் உத்தம நோக்கத்தை யடைந்து ஸபலமானவைக ளாகின்றன. நேத்திரம் படைத்ததற்கு, பகவானது திருமேனி சோபையைக் கண்ணுறக் கண்டு களிப்பதே பலனாகும்; அவ்விதம் அநுபவமில்லாத கண்கள் வியர்த்தமென்பது கருத்து.

146. யத்ரவா தத்ரவா தேவ
யதி விச்வஸிமஸ்த்வயி |
நிர்வாணமபி துர்வார
மர்வாசீனனி கிம் புன: ||

"ஹே பரமபுருஷனே! எங்கிருந்தாலும் சரி. உம்மிடம் திடமான பக்திமட்டில் எங்களுக்கிருப்பில், சாச்வதமான மோக்ஷானந்தமானது ஒருவராலும் தடுக்கமுடியாது; மற்றைய உலகசுகங்களுக்குக் கேட்பானேன்?" பகவத் பக்தியானது மோக்ஷ ஸாம்ராஜ்யமளிக்கு மென்பது கருத்து.

தான்ஸேன் மஹாராஜ்:—உத்தர தேசத்து ஸங்கீதத்தின் கூடஸ்தர் பாட்டிலும் வாத்தியத்திலும் கவனத்திலும் நிகரற்றவர். ஹரிதாஸ் ஸ்வாமியின் சிஷ்யர். ஆக்பர் சக்ரவர்த்தியின் சம்ஸ்தான வித்வான். உயிர்தோழன். ஸங்கீத வித்யையின் அவதாரமென்றே சொல்லலாம்.

நமது சிறு கதை
OUR SHORT STORY
அகம்படைத்த அரசன்

[ஸ்ரீமான் K.P.சந்தோஷ் அவர்கள், பீ.ஏ.,எல்.டி.]

நெடு நாட்களுக்குமுன் தூர தேசமொன்றில் அளவில்லாத அதிகாரத்துடன் ஆண்டுவந்த அரசனொருவ னிருந்தான். அவன் தற்காலத்திலுள்ள முடிமன்னர்களை விடப் பன்மடங்கு மேலான செல்வமுடையவனாய் அநேக தேசங்களைத் தனதாட்சிக் குட்படுத்தி மிகுந்த மேன்மையுடன் தன்னுடைய மனைவியோடு அரசுசெலுத்தி வந்தான். நாட்டிலுள்ள பிரபுக்களும் உயர்ந்த உத்தியோகஸ்தர்களும் அவன் வார்த்தைக்கு அஞ்சி நடுங்குவார்கள். வேந்தன் முன்னிலையில் எப்பேர்ப்பட்டவர்களும் உத்தரவின்றி ஒரு வார்த்தையும் பேசக்கூடாது; மறு வார்த்தையுரைக்கக்கூடிய தைரியமுள்ளவர்கள் அந்நாட்டில் கிடையவே கிடையாது.

வசந்த காலத்தில் ஒருநாள் அதிகாலையில் இவ்வரசன் தான் பெற்ற பெயரையும் தான் செய்த செயல்களையும்பற்றி இறுமாப்புடன் எண்ணிக்கொண்டு படுத்திருந்தான். அவனுடைய குற்றங் குறைகளை எவரும் அவனுக்கு எக்காலத்திலும் எடுத்துக் காட்டினதில்லை யாகையால், அவனுக்கு மிதமிஞ்சிய மதம் பிடித்திருந்தது. சகலமும் அவனுடைய இஷ்டப்படியே நடந்து வந்ததன் பயனால் அவன் கடவுளையும் அற்பமாய் எண்ணத் துணிந்தான்.

"கோவிலுங் குளமும், அர்ச்சகனும் ஆசாரியும் எனக்கு வேண்டியதே இல்லை. உயிருள்ளமட்டும் நானே தான் கடவுள். என்னை யன்றி வேறு தேவர்களில்லை. ஒருவேளை நான் சாகாமல் எக்காலமும் உயிரோடிருந்தாலும் இருப்பேன். நான் ஏன் சாகவேண்டும்? எனது தந்தை அவருடைய காலத்தில் ஒரு பெரிய அரசனென்று கருதப்பட்டார். ஆனால் அவர் ஆண்டு வந்த நாட்டை என்னுடைய இராஜ்யத்தோடு ஒப்பிட்டால், பூனையை யானையோடு சீர்தூக்கினது போலிருக்கும். என் தகப்பனாருடைய பாட்டனார் சிற்றரசனாய் ஒரு சிறிய பட்டணத்தை யாண்டுவந்தார்; அந்த இடத்தில் இப்பொழுது என்னுடைய வேட்டை நாய்கள் வளரும் ஸ்தலம் இருக்கிறது. இவற்றையெல்லாம் பார்க்

கும்பொழுது, அவர்களெல்லாரையும்விடக் கீர்த்தியிலுஞ் செல்வத்திலுஞ் சிறப்பிலும் நான் உயர்ந்தவனா யிருப்பதுபோல், ஆயுள் நாளிலும் ஏன் உயர்ந்திருக்கக் கூடாது? மற்ற மனிதர்களைப் போல் நானும் ஏன் மரணமடைய வேண்டும்? நான் எடுத்த காரியம் ஒன்றும் கைகூடாமற் போனதில்லை. நான் ஏன் இன்னும் உந்நத பதவியை யடையக்கூடாது? எண்ணமும் ஏக்கமுமின்றி இறந்தழியாது வாழ்ந்தவர்களைக் குறித்துக் கதைகளில் நான் கேட்டிருக்கிறேன். அவ்வரிய பதவியை நானும் ஒருவேளை பெற்று வாழலாமே" என்றிவ்வாறு நினைத்துக்கொண்டு அவன் நித்திரையி லாழ்ந்தான். மறுபடியும் எழுந்து பார்த்தபொழுது மத்தியானவேளையாயிருந்தது. திடுக்கென்று பொற்கட்டிலி லிருந்தெழுந்து தான்முன் சிந்தனை செய்துகொண்டிருந்தவற்றை மறந்து "இன்று நாம் காட்டிற்குச் சென்று வேட்டையாடுவோம். நேற்று நமக்குக் கிடைத்த வேட்டையைவிட இன்று சிறந்தவேட்டை அகப்படினும் அகப்படும்" என்றுசொல்லிக்கொண்டான். இதற்குப்பின் தகுந்த உடையணிந்து, அநேக மனிதர்களும் நீண்டு திரண்டு வளர்ந்த நாய்களுந் தன்னைச் சூழ்ந்துவர, அரசன் உல்லாசமாய்க் குதிரைமேலேறிக் காட்டுக்குப் போனான். அவன் ஏறிச்சென்ற குதிரை ஒரு இராஜ்யத்தின் விலை பெறும். அதன் அழகையும் நடை, ஓட்டம் முதலியவற்றின் தன்மையையும்பற்றி நாம் விஸ்தரித்துக் கூறவேண்டியதில்லை. சிறிது நேரம் பொறுத்து அரசன் ஒரு மானைக் கண்டு, அதைத் துரத்திக்கொண்டு அதிவேகமாய்ச் சென்று, கூடவந்தவர்களை விட்டு வெகு தூரம் பிரிந்து, ஆற்றங்கரை யொன்றை யடைந்தான். வெயிலில் வந்த களைப்பால் குதிரையை விட்டிறங்கிப் பளிங்கு போலுள்ள ஆற்றின் ஜலத்தில் கெண்டை, வெளிச்சி முதலிய மீன்கள் துள்ளுவதைப் பார்த்துக்கொண் டிருந்தான். பிறகு, உடலிலுள்ள வெப்பந் தணியும் வண்ணம் ஆற்றிலிறங்கி ஸ்நானஞ் செய்யவெண்ணி அருகிலிருந்த மரமொன்றில் குதிரையைக் கட்டிவிட்டுத் தன் ஆடையாபரணங்களைக் களைந்து ஒருபுறம் வைத்தபின் நீரிற் குதித்து விளையாடிக் கொண்டிருந்தான். இப்படி வெகு நாழிகை கழிந்தபின் அரண்மனைக்குத் திரும்பவேண்டுமென்ற நினைவுவர, நீரை விட்டு வெளியேறித் தன் உடைகளை வைத்த விடத்திற்கு வந்தான். ஆடைகள் அங்கே இல்லை. குதிரையைக் கட்டினவிடத்திற்கு நேராய்த்திரும்பினான். குதிரையு மங்கே இல்லை. முதலில் ஒரு விதமான ஆச்சரியமடைந்தான். அப்புறம் அடக்கமுடியாத கோபமடைந்தவனாய்க் குதிரையையும் ஆடைகளையுந் திருடிக்கொண்டு போனவனுக்குப் பயங்கரமான தண்டனை விதிப்பதாக உரக்கக் கூவினான். தன்னுடன் வந்தவர்கள் யாராயினு மருகிலிருப்பார்களென்று நினைத்துக் கூப்பிட்டுப் பார்த்தான். எங்கிருந்தும் பதில் வரவில்லை. ஆற்றிலுள்ள மீன்கள் அரசன் கோபத்தை அணுவளவும் மதியாமல் மெதுவாகத் தண்ணீரில் நீந்திக்கொண் டிருந்தன. ஆரம்பத்தில் அவனுடைய கூச்சலைக் கேட்டுச் சிறிது திடுக்கிட்ட பெரிய பறவைகளும் சிறிய குருவிகளும் இப்பொழுது யாதொரு பயமுமின்றி அங்குமிங்கும் பறந்து கொண்டிருந்தன. அரசன் இன்னுங் கத்திக் கூவிக்கொண்டேயிருந்தான்.

ஆள் நடமாட்டம் சற்றுமில்லாத அந்தவிடத்தில் கூக்குரலிட்டுக் களைத்துப்போன மன்னன், என்ன செய்வதென் றறியாமல் திகைத்து, இறுதியில் ஆற்றங்கரை யோரமாக நடந்துபோகத் தொடங்கினான். அவ்விடத்திலிருந்து கொஞ்ச தூரத்திற்கப்பால் தன்னுடைய காடுகளை மேற்பார்க்கும் அதிகாரி வசிக்கும் வீடு இருக்கவேண்டுமென்பதை யறிந்து, துணியிழந்து துக்கத்திலாழ்ந்த வேந்தன் அவ்வீட்டிற்கு நேரே நடந்தான். அந்தக் காட்டதிகாரி அதிக நல்லவனென்பதும் ராஜபக்தியுள்ளவ னென்பதும் மகிபதிக்குத் தெரியுமாதலால் அவன் தன்னை உடனே வரவேற்று உபசரிப்பானென்று விரைவாய்ச் சென்றான். தேகத்தில் துணியொன்று மில்லாததால் கதிரவன் அவனை வாட்ட "என்னுடைய வேலைக்காரனாகிய இவ்வதிகாரியின் வீட்டில் நல்ல உடைதரித்துப் பசிதாகந் தணிந்து, குளிர்ச்சியுள்ள விடத்தில் நான் என்னுடைய ஆயாசந்தீர அமர்ந்திருக்கும்போது, இக்கஷ்டங்களை எல்லாம் மறந்து விடுவேன்" என்று சொல்லிக்கொண்டான்.

அகம்படைத்த நராதிபன் இவ்வாறு போய்க்கொண்டிருக்கையில், அவனுடன் வேட்டையாட வந்தவர்கள் பல விடங்களிலுஞ் சுற்றித்திரிந்து அவனைத் தேடிப்பார்த்தார்கள். எங்கும் அவனைக் காணாமல் மயங்குகையில், அரசனுடைய ஆடையை அணிந்து அவனுடைய குதிரையின் மேலேறி வந்த ஒரு மனிதன் அவர்களைச் சந்தித்தான். அவர்களெல்லோரும் கிஞ்சித்தேனும்

கேட்டினு முண்டோ ருறுதி கிளைஞரை நீட்டி யளப்பதோர் கோல்,

சந்தேக மின்றித் தங்களுக் கெதிர்ப்பட்டவன் பின்னே சென்றார்கள். அவனே வேந்தன் என்று மதித்து அவனுடன் அரண்மனை போய்ச் சேர்ந்தார்கள். இந்தப் போலி அரசன், மாளிகையில் இராணியால் பெரிய உபசாரணைகளுடன் வரவேற்கப் பெற்று, கம்பீரமாய் ஆசனத்திலமர்ந்து, ஆடம்பரமாகப் போஜனஞ் செய்யத் தொடங்கினான். அரண்மனையிலிருந்த விசுவாசமுள்ள நாய்களுங் கூட அவனைச் சுற்றி விளையாடிக் கொண்டிருந்தன.

இப்பொழுது நாம் ஆற்றங்கரை வழியாய்ப் போய்க்கொண்டிருந்த வேந்தனைப் பின்தொடர்வோம். அவன் காட்டதிகாரியின் வீட்டினருகே வந்து, நாய்களையும் மனிதரையுங் கூப்பிடுவதற்கு வேட்டையில் உபயோகிக்கும் குழல் ஒன்றை எடுத்து ஊதினான். அங்கிருந்த வாசற்காப்போன் குழலை ஊதினவன் எவனென்று தெரிந்துகொள்வதற்காகக் கதவிற்குப் பின்னால் நின்று வெளியே எட்டிப் பார்த்தான். அம்மணமாய் ஒருவன் நிற்பதைக்கண்டு வியப்புற்றவனாய் “இங்கே உனக்கு என்ன வேலை? வீட்டிற்குப் போய் வேஷ்டி யுடுத்துக்கொள்” என்று கூறினான். அவன் பேசி முடிந்ததும், “அடே, முட்டாள் பயலே, கதவைத் திற. நான் உன்னுடைய அரசன் என்பது உனக்குத் தெரியவில்லையோ? உன்னுடைய அதிகாரியிடம் போய், எனக்கு உடையும் உணவும் வேண்டுமென்பதாகச் சொல். என்னைக் கண்டவுடனே நீ என்னை அறிந்து கொள்ளாததற்காகத் தண்டனை கிடைக்குமென்று நீ பயப்பட வேண்டியதில்லை” என்று பெருமையுடன் பேசினான் அகம்படைத்தவன்.

வாசற்காப்போன் புன்னகையுடன் “இதெல்லாம் கனவோ, பைத்தியமோ?” என்று கேட்டு மறைந்தான்.

வேந்தனுக்குக் கடுங்கோபம் பிறந்தது. பல்லை நறநறவென்று கடித்துக்கொண்டு ஒரு பெரிய கல்லைத் தூக்கி வாசலின்மேல் திடுமென்று மோதினான். இதற்குள் வாசற்காப்போன் சந்தடியைக் கேட்டுக் கையில் தடியுடன் வந்து கதவைத் திறந்து அரசனை வாயில் வந்தபடி யெல்லாம் திட்டிப் பயமுறுத்திப் பரபரவென்று உள்ளே இழுத்துக்கொண்டு போனான். வேந்தன் நிலைமையை என்னவென்று சொல்வது! காட்டு நெருப்பைப்போல மனத்தில் சினம் மூண்டெரிய, ஒன்றும் பேசாமல் நடந்துபோய்க் காட்டதிகாரியின் அழகிய புதிய வெண்மையான மாளிகையில் வந்துசேர்ந்தான். இந்த நேர்த்தியான மனை ஏறக்குறைய ஒரு வருஷத்திற்கு முன் காட்டதிகாரிக்கு அரசனால் கட்டிக் கொடுக்கப்பட்டது. அடிக்கடி மன்னன் இவ்வதிகாரியின் வீட்டிற்கு வருவதுண்டு. ஏனெனின் அவன் ஏழையாயிருந்து வேந்தனால் முன்னுக்குக் கொண்டு வரப்பட்டவன். அவன் இப்பொழுது திவ்யமான உடையணிந்து மதுபானம் பருகிக் கொண்டு, சாயங்கால சூரியன் தன்னுடைய நந்தவனத்திலுள்ள உயர்ந்த மரக்கிளைகளின் வழியாய்ப் பிரகாசிப்பதைக் கவனித்துக் கொண்டிருந்தான். வெளியே சிரிக்கிற சத்தங்கேட்டது. ஒருவன் ஓடிவந்து நகைத்துக்கொண்டே, “ஐயா, அம்மணக்கட்டையா யிருக்கும் ஒரு தடியன், தான் நம்முடைய அரசனென்றும், தாங்கள் அவனை அறிவீர்களென்றும் சொல்லுகிறான். அவன் எந்த விதத்திலும் நம்முடைய அரசனைப் போலில்லை. தாடியை மாத்திரம் நமது வேந்தனைப் போல் வளர்த்துக்கொண்டிருக்கிறான். பைத்தியக்காரனென்று அவனை நாம் விட்டுவிடுவது ஒரு வேளை மோசத்துக் கிடமாகும். அவனை இங்கே கொண்டுவரலாமா?” என்று கேட்டான்.

“ஆம், சீக்கிரம் அவனை இங்கே கொண்டுவா; நான் இளைப்பாறும் வேளையில் இப்படிப்பட்ட மடையர்கள் வந்து என்னைத் தொந்தரவு செய்கிறது எனக்குக் கொஞ்சமேனும் பிடிக்கவில்லை” என்றான் அதிகாரி.

தன் தொந்தரவுகளெல்லாம் இப்பொழுது முடிந்துவிடும் என்று எதிர்பார்த்திருந்த வேந்தன், வாசற்காப்போனுடன் அதிகாரிமுன் வந்து நின்றுகொண்டு “வஸ்திரமொன்று மின்றி நான் எப்படி இங்கே வந்தேனென்று நீ ஆச்சரியப்படுகிறாய். நான் சொல்லுகிறேன், கவனமாய்க் கேள். ஆனால் நீ அதோ கிடக்கிற மேலுடையை எனக்குக்கொடு; ஏனென்றால் இங்கே இருக்கிற உன்னுடைய வேலைக்காரர்கள் உனக்கு உண்மையாய் ஊழியஞ் செய்கிறவர்களா யிருந்தாலும் பட்டாடையுங் கிரீடமுமில்லாமல் ஒரு அரசனை மதிக்க முடியாதவர்களென்பதை யறிந்தேன். இது கயவருடைய புத்தி; கீழ்மக்களுடைய குணம். நீயும் நானும்........ஆ ஹா! இதுவென்ன விபரீதம்? என்னைக் கண்டும் நீ எழாமல் உட்கார்ந்திருக்கிறாய். நீ என்னைப் பார்க்கிறது ஒருவாறா யிருக்கிறது. எனக்குப் பதிலாய் வேறு [illegible]

வது அரசு செலுத்துகிறார்களா? சொல். எத்தனை நாளாய் எனக்கு விரோதமாக இரகசியமாய் சூழ்ச்சிகள் செய்துவந்தாய்? அடே, துரோகி, என் தலையை அசைத்தவுடன் ஏராளமான சேனைகள் நான் இட்டதைச் செய்ய ஓடிவந்து நிற்குமே" என்று பலவாறாகப் பிதற்றித் துடித்தான்.

காட்டதிகாரி அவனை நோக்கி "நான் உனக்கு என்ன சொல்வது? நீ அரசனென்று சொல்லிக் கொள்ளுகிறாய். அற்பப் பிராணியே, உனக்கு ஒன்றுந் தெரியவில்லை. ஏழைப் பூச்சியே, நீ சொல்வதை நீ உணரவில்லை. நீ சாவதற்கு முன் உன் பைத்தியந் தீர்ந்து நீ சுகமடையும்படி கடவுளைப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்" என்ற பின்னர், வேலைக்காரரை விளித்து, "இந்த உன்மத்தனுக்குச் சிறிது உணவும் உடையுமளித்து இரவிற்குத் தங்க இடமுங் கொடுங்கள்" என்று பேசி முடிப்பதற்குமுன் வேந்தன் கைகளை ஆகாயத்திற்கு நேராய்த் தூக்கிக் கண்களை உயர்த்தி "ராஜத்துரோகியே, உன் சாப்பாடும் வஸ்திரமும், உன் வீடும் நீயும் சகலமும் நாசமாய்ப் போவதாக. உன் வீடு இடிந்து விழுவதாக; சிவந்த அக்கினிக் கொழுந்துகள் சித்திரவேலை தீர்ந்த உன் ஜன்னல்கள் வழியாய்ப் பரவி எரிவதை உன் கண்ணால் காண்பாய். ஏனெனில், உன்போன்ற துன்மார்க்கன் வசிக்கும் இந்த வீட்டை நான் சுட்டெரிக்கப் போகிறேன்" என்று பெருங் கூச்சலிட்டான்.

இதன் பிறகு அவன் தன்னைப் பிடித்திருந்தவர்களை உதறிவிட்டு வீட்டைத் தாண்டிக் கதவைக் கடந்து தலைவிரிகோலமாய் எங்குபோவதென்று தெரியாமல் ஓடினான். கடைசியில் ஒரு பாதையருகே புல்லுள்ள இடத்தில் களைத்து விழுந்தான். காட்டதிகாரியோ அமைதியாய்த் தன் அமளியிலமர்ந்து தன்னுடைய ஆஸ்தியை எங்ஙனம் விர்த்தி செய்யலாமென்பதைப் பற்றியும் அரசனுக்குந் தனக்குமுள்ள ஐக்கியத்தைப் பற்றியுஞ் சிந்தித்துக்கொண்டிருந்தான். "மறுமுறை நான் வேந்தனைப் பார்க்கும்பொழுது, இன்று என்னிடம்வந்து இந்த உன்மத்தன் உளறியதையெல்லாஞ் சொல்லவேண்டும்" என்று எண்ணிக்கொண்டான். இதற்கிடையில் பெருமை இழந்த தலைவன் பெரும் பாதை ஓரமாய் உட்கார்ந்து கொண்டு, தான் கண்டது கனவோ நனவோ என்றறியமாட்டாமல் ஏங்கி விழித்து அயர்ந்திருந்தான். இப்பொழுது மேற்றிசையில் கதிரவன் அஸ்தமனமாகி எங்கும் காரிருள் வந்துமூடினது. பாதையில் சிறிது தூரத்திற்கப்பால் ஒரு பிரபுவின்முன் தீவட்டிகள் பிடித்துக் கொண்டு வருகிறவர்களை அவன் கண்டான். குதிரைச் சேகவர்கள் சிலரும் அவர்களுடன் வந்தார்கள். அங்கு வந்துகொண்டிருந்த பிரபு, தன்னுடைய மந்திரிமார்களிலொருவனென்பதையறிந்த மன்னன் உடனே எழுந்து நின்று, உரத்த சத்தத்துடன் "மந்திரியே, நீ நல்ல தந்திரசாலி; என்னுடைய பகைவருடன் சிநேகஞ் செய்து கொள்வதே உனக்கு வழக்கம். காலத்திற்கேற்ற கோலங் கொள்ளுகிறவனே, சீ, போ" என்றான்.

ஒரு போர்ச் சேவகன், இதைக் கேட்டவுடன் ஓடிவந்து வாளின் உறையால் அவனை அடித்து மந்திரியிடந் தள்ளிக்கொண்டு போனான். பந்தம் பிடிக்கிறவர்கள் நாற்புறமுஞ் சூழ்ந்து நிற்க, மந்திரி ஏறியிருந்த பல்லக்கு, பாதையின் மத்தியில் நின்றது. அந்த வெளிச்சத்தில் இரத்தினக் கற்களும் பொன்னும் எங்கும் பிரகாசிக்க மகா மகிமையுடன் மந்திரி பல்லக்கில் வீற்றிருப்பதை அரசன் பார்த்தான். அப்படி வீற்றிருந்தவன், கீழே பரிதாபமான நிலைமையில் நின்றிருந்த தலைவனைக் கூப்பிட்டு "என்னைப்பற்றி பேசத் தகாத பொல்லாத வார்த்தைகளை நீ பேசியதாகக் கேள்விப்படுகிறேன். உனக்கு நான் எப்பொழுதாவது ஏதாவது அநியாயஞ் செய்திருக்கிறேனா? அப்படி ஏதாவதிருந்தால், நான் வழக்குகளைக் கேட்கும் பொழுது என்னிடம் வந்து உன்னுடைய குறைகளைச் சொல்லிக்கொள். நான் விசாரிக்கிறேன்" என்றான்.

அரசன் மறுமொழியாக, "இப்பொழுது இருட்டாயிருக்கிறது. காற்றடிப்பதால் தீவட்டிகள் சரியாய் எரியவில்லை என் முகம் உனக்கு நன்றாய்த் தெரிகிறதா? தீவட்டி பிடிக்கிறவர்களைக் கிட்டே வரச்சொல்லி, உனக்கு இந்த உத்தியோகத்தையும் செல்வத்தையுங் கொடுத்தது யாரென்று நிதானமாய் யோசித்துப்பார். ஐயோ, நான் உன்னுடைய அரசனென்று உனக்குத் தெரியவில்லையா?" என்றான்.

மந்திரியோ அரசனைக் கண்டுகொள்ளவில்லை. "நண்பனே, கேட்டவரெவரும் நகைக்கும்படியான நம்பத்தகாத கதையை நீ சொல்லுகிறாய். என்னையன்றி வேறுயாரிடத்திலாவது நீ இப்படிப் பேசினால் உனக்குச் சரியான தண்டனை கிடைக்

கும். புத்தி மயங்கினவனென்று உன்னைச் சும்மா விடுகிறேன். அரசன் இதைக் கேள்விப்பட்டால் உனக்கு எள்ளளவும் இரக்கங் காண்பிக்கமாட்டான். அறிவில்லாதவனே, கண்டவிடத்திலெல்லாம் போய் இப்படிப் பிதற்றாதே. இதோ இந்தக் காசை வாங்கிக்கொள். பொழுது விடிந்தவுடன் எங்கேயாவது போய்ப் போஜனமும் வஸ்திரமுந் தேடிக்கொள். நீ நகரத்திற்குட் சென்றாயானால் உன்னைப் பிடித்துச் சிறைச்சாலையி லடைப்பார்கள். இப்பொழுது நேரமதிகமாயிற்று; நான் போகவேண்டும்'' என்று இவ்வாறு பாதையில் நிற்கிற வேந்தனைப் பயமுறுத்திக் கூறிவிட்டு மந்திரி, தன் வழியே சென்றான்.

ஒன்றும் பேச நாவெழாமல், மந்திரி கொடுத்த காசைக் கையில் வைத்துக்கொண்டு வாடி நின்றான் மன்னவன்; கையிலிருந்த காசில் தன்னுடைய சொந்த ரூபம் பதிப்பிக்கப்பட்டிருந்தது. தேற்றுவார் ஒருவரின்றித் தன்னந் தனியனாய் நின்ற வேந்தன் மனமுடைந்து கலங்கி "ஓ தெய்வமே, நான் அரசனாயிருந்து ஆட்சி செய்தது வாஸ்தவமோ பொய்யோ? என்னுடைய அதிகாரம் என்னைவிட்டு நீங்கி அநேக யுகங்களானது போல் தெரிகிறதே'' என்று எண்ணாததும் எண்ணி ஏங்கினான். மந்திரி போன வழியே சிறிது நேரத்திற்குப்பின் அவனுந் தனியாய்ப் போனான். நடந்து அயர்ந்து ஒரு புல்லுள்ள மேடையில் தங்கி நல்ல நித்திரையிலாழ்ந்தான்.

* * * * *

காலையில் எழுந்தவுடன் அவனுக்கு ஒன்றுந் தெரியவில்லை. தான் இன்ன நிலைமையிலிருக்கிற தென்பதும் விளங்கவில்லை. அவனுடைய மனத்தில் எல்லாங் குழப்பமாயிருந்தது. சிறிது சிறிதாய் முந்திய நாள் நடந்த சம்பவங்களெல்லாம் ஞாபகத்திற்கு வந்தன. கீழ்த்திசையில் ஒப்பற்ற மாட்சிமையுடன் சூரியன் உதயமானான். இனிய குளிர்ந்த காற்று வீசினது. இவற்றால் மனந்திடப்பட "என்னுடைய துன்பங்கள் கடிதில் ஒரு முடிவிற்கு வந்து, நான் சுகமடைவேன்'' என்ற நம்பிக்கை அவனுக்குண்டாயிற்று. தான் இரவு நித்திரை செய்த ஸ்தலத்திலிருந்து தன்னுடைய இராஜதானியின் நகர வாசல் சமீபத்திலிருப்பதை யறிந்தான். முன்னும் பின்னும் நடந்து கொண்டிருந்த நாட்டுப் புறத்து ஜனங்கள் கண்ணிற்குத் தப்பி ஒளித்துப் போய் நகர வாசலருகே வந்து நின்றான். இவனுடைய அலங்கோலமான ஸ்திதியைப்பார்த்துச் சிலர் ஊரையும் பெயரையும் கேட்டார்கள். மற்றுஞ் சிலர் கேலிபண்ணி நகைத்தார்கள். ஆனால் ஒரு ஏழைக் குடியானவன் அரசனைத் தன் வண்டியிலேற்றிக்கொண்டு, பருகுவதற்கு ஒரு செம்பு பாலும் கொடுத்தான். அக்குடியானவன் தன் வண்டியிலேறியிருக்கும் விபரீத தோற்ற முடையவனைப்பார்த்து "உனக்கு நேர்ந்த துன்பமென்ன?'' என்று கேட்க,

"நண்பனே, நேற்றிரவு சில திருடர்கள் என்னை நையப்புடைத்து என் துணி முதலியவற்றைப் பிடுங்கிக் கொண்டார்கள். நான் இந் நகரத்திலுள்ள ஒரு வியாபாரி. என்னைக் கொண்டுபோய் அரண்மனை யருகில் விட்டு விடுவாயானால் உனக்கு வேண்டிய திரவியந் தருவேன். எனக்குத் தெரிந்தவர்கள் பலர் அரண்மனையிலிருக்கிறார்கள். உன் பெயரையும் ஊரையும் எனக்குத் தெரிவித்தாயானால் ஏற்ற காலத்தில் உனக்குத் தகுந்த சன்மானஞ் செய்வேன்'' என்று அரசன் பதிலளித்தான்.

நாட்டுப்புறத்தான் சொல்லுகிறான்: "ஐயா, நான் ஏழையாயிருந்தாலும் பகவானுடைய செயலால் எனக்குச் சாப்பாட்டிற்குக் குறைவில்லை. நான் ஒரு மாந்தோட்டம் வைத்து அதில் விளையும் பழங்களை விற்றுப் பிழைத்து வருகிறேன். எனக்கு இப்பொழுது கிட்டத் தட்ட ஐம்பது வயதாகிறது. சிறு வயது முதல் இது வரையிலும் அநேக சஞ்சலங்களை அனுபவித்திருக்கிறேன்; வாழ்வையும் பார்த்திருக்கிறேன். என்னுடைய பாட்டனார் கட்டிய வீடு ஒன்று எனக்கிருக்கிறது. அது இப்பொழுது அழிந்து இடிந்து விழும் நிலைமையிலிருக்கிறது. அதைப் புதிதாகக் கட்டுவதற்கு வேண்டிய திரவிய சகாயம் தாங்கள் செய்தால், எந்நாளும் தங்களுக்குக் கடமைப்பட்டவனாயிருப்பேன்.'' இதைக் கேட்ட அரசன், "சிநேகிதா, நீ கேட்பது வெகு சொற்பம்; இன்னும் அதிகமாய்க் கேள்'' என்றான்.

இப்படி இவர்கள் பேசிக் கொண்டிருக்கையில் நகரவாசல் திறக்கப்பட்டது. குடியானவன் வண்டியை உள்ளே ஓட்டிக்கொண்டு போனான். அரசன் ஒன்றும் பேசாது உள்ளிருந்தான். அரை மணி நேரத்திற்குள் அரண்மனையின் முன் போய்ச் சேர்ந்தார்கள். உடனே அரசன் அவசரமாய் வண்டியிலிருந்து குதித்துத் திடுதிடுவென்று

அரண்மனையின் முன்கட்டிற்குள் பாய்ந்தான். யாரும் அவனைத் தடுக்க முடியவில்லை. இரண்டாவது கட்டைக் கடந்து செல்ல யத்தனிக்கும் பொழுது, ஒரு வேலைக்காரன் அவனை நிறுத்தி, "உனக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறதா, அல்லது பேய் பிசாசு பிடித்திருக்கிறதா? எங்கே போகிறாய்?" என்று முறைக்கிக் கேட்டான். வேந்தன் அவனைப் பார்த்து "நான் உன் அரசனென்று உனக்குத் தெரியவில்லை போலும். உன்னை நானறிவேன். நீ உள்ளே சென்று என்னுடைய ராஜ உடைகளைக் கொண்டு வந்து எனக்கு உடுத்து. நல்ல வெகுமானங் கொடுப்பேன். இப்பொழுது நான் ஆலோசனைச் சபைக்குப் போகவேண்டிய நேரமல்லவா?" என்று நிதானமாய்ப் பேசினான்.

"பித்தம் பிடித்தவனே, வெளியே செல். நீ என்ன சொல்லுகிறாய்? அரசனா? இப்படிப் பேசியதற்காக உனக்கு மரண தண்டனை கிடைக்கும். நீ இப்பொழுதே என்னோடு அரண்மனைச் சேவகரிடம் வரவேண்டும்" என்றான் வேலைக்காரன். அகம்படைத்த அவனியாள்வோன் இங்ஙனம் போர்ச் சேவகர்முன் கொண்டுபோய் நிறுத்தப்பட்டான். அவர்கள் அவன் சொன்ன சொற்களைச் சிறிதும் காதில் போட்டுக் கொள்ளாமல் அவனை எளனம் பண்ணிக் கைகொட்டிச் சிரித்தார்கள். இதைக் கண்ட அரசன் நெஞ்சு தளர்ந்து, விசனத்திலாழ்ந்து "என் முயற்சிகள் பயன் பெறாமல், என் துயரங்களும் நீங்காமல் நான் இறந்து போவேன்" என்றெண்ணினான். முந்தின தினந் தொடங்கி எல்லாம் தாறுமாறாய்ப் போவதன் காரணம் அவனுக்கு விளங்கவில்லை. தனக்கு முன்னால் நிலத்தில் விழுந்து பாதத்தைத் தொழும் போர்ச்சேவகருங்கூட இப்பொழுது அவனை கண்ணிற்கு எதிராகவே கேலி செய்தார்கள். "ஐயோ கடவுளே, நான் இரண்டு நாளைக்கு முன்னேயிருந்த உலகம் வேறு, இப்பொழுது நானிருக்கும் உலகம் வேறேயோ? நான் தூங்குகிறேனா அல்லது விழித்திருக்கிறேனா? என்று தன்னைத்தானே கேட்டுக்கொண்டான்.

அரசனிவ்வாறு சிந்தித்துக் கொண்டிருக்கையில் இரண்டு அரண்மனை உத்தியோகஸ்தர் வந்து அவனைப் போலி வேந்தனிடத்திற்கு அழைத்துக்கொண்டு போனார்கள். அரண்மனையிலுள்ள சகலரும் அவனைத் திரும்பிப் பார்த்தார்கள். அரசனுக்கு இப்பொழுது ஒரு தைரியம் வந்தது. "இனிமேல் என்னுடைய கவலைகளெல்லாம் நீங்கும். நான் எனது சிங்காசனத்தின் மீதமர்ந்திருப்பேன். மந்திரி பிரதானிகளும் என் மனைவியும் என்னை இன்னானென்று பார்த்தவுடன் அறிந்துகொள்வார்கள். அவர்கள் அங்ஙனம் என்னை அறிந்து கொள்ளாதே போனால் இனி ஒருவரும் என்னை அரசனென்று சொல்லப் போவதில்லை. எவருடைய ஞாபகத்திலுமில்லாமல் நான் மறைந்து மாண்டு போவேன்" என்று கருதிக்கொண்டே தலையை நிமிர்ந்து பார்த்தகாலை, தங்கக்கிரீடம் தலையில் விளங்க, கண்ணைப் பறிக்கும் ஆடையாபரணங்களணிந்து, தன் சிங்காசனத்தி லொருவனமர்ந்திருப்பதைக் கண்டான். அவனுடைய பாதத்தினருகில் தன்னுடைய மனைவி மகளிர்க்கேற்ற ஒழுங்காய் உட்கார்ந்திருந்தாள். அமைச்சர், ஸ்தானபதிகள் முதலியவர் கைகட்டித் தலைவணங்கி நின்றார்கள். இக்காட்சி அகம்படைத்த அதிபதியின் மனத்தில் கடுஞ்சினத்தை மூட்டிற்று. சிங்காசனத்தில் வீற்றிருந்தவன் எவ்விதத்திலும் தன்னைப்போன்றவனாக அரசனுக்குக் காணப்படவில்லை. ஆனால் அவன் தலையைச்சுற்றி ஆச்சரியமான ஒருவித ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது. தேவர்களிலொருவனென்று அவனை மதிக்கத்தக்க சிறப்புடன் விளங்கினான். அவன் அரசனை வெகுண்டு பார்த்து, "என்னுடைய மாட்சிமையைக் களவாட எண்ணுகிற நீ யார்?" என்றான்.

"நேற்று வேந்தனாயிருந்தவன் நானல்லனோ? இன்று ஏதோ ஊழ்வினையால் என்னுடைய ஸ்தானத்தில் நீ இருக்கிறாய். நானே அரசன் என்பதை யறிந்துகொள். என்னையறிந்த யாவரும் என்னைக் கைவிட்டகன்றாலும் இந்த இடத்திலேயே உன்னுடைய உத்தரவினால் நான் கொலை செய்யப்பட்டாலும், என்னுடைய இந்த விதியைப் பற்றி வருத்தப்பட ஒருவரு மில்லாவிட்டாலும், நானே இந்நாட்டையாளும் அரசனும், இங்குள்ளவர்களின் தலைவனுமென்பதை ஐயமறத் தெரிந்துகொள்" என்று கடவுளை மதியாது கர்வங் கொண்டிருந்தவன் மொழிந்தான்.

அப்பொழுது அரியாசனத்தில் வீற்றிருப்பவன் கூறுகிறான்:—"மூழ மூடனே, இன்றும் நேற்றும் அதற்கு முன்னும் நானே இங்கு முடி தரித்து இராஜ்யபாரஞ்செய்து வருகிறேன். என்னுடைய பெயரையும் புகழையும் எவருமறிவார்

கள். நீ என்னுடைய பெயரைக் கைப்பற்ற முயன்ற பெருந்துரோகியாதலால், சிரச்சேதம் செய்யப்படப் போகிறாய். ஆனால் நீ கொலையுண்பதற்குமுன் இங்கு நிற்கும் அமைச்சர்களும், என்னுடைய உத்தமியான இராணியுஞ் சொல்வதைக்கேள்'' என்று சிறிது திரும்பி, ''என்னுடைய பிரபுக்களே, மந்திரிகளே, அரசியே, என்னுடைய முகத்தை நன்றாய் நோக்கி, நான் யாரென்று நீங்கள் யாரும் விளம்புங்கள்'' எனச் சாற்றினான்.

அங்குள்ளோர் எல்லோரும் ஏகமாய் ''எங்களை ஆளும் மன்னனே, நீர் வாழ்க. நெடுநாள் பூமியிலிருந்து அரசு செலுத்தக் கடவீர்'' என்று வணங்கி வேண்டிக் கொண்டார்கள். அரசி எழுந்து அவனுடைய பாதத்தைத் தொழுதாள். இதற்குப் பின் கிரீடமணிந்தவன் அரசனைக் ''கீழ்மகனே'' என்றழைத்து ''இங்கு நடந்த யாவையுங் கவனித்தாயா? இப்பொழுது நீ கொலை செய்யப்படுவதற்கு என்ன தடையிருக்கிறது. ஆயினும் நான் இரக்கம் மிகுந்தவனாதலால், நீ என்னை முகங்குப்புற விழுந்து வணங்கி, நீ அரசனில்லை என்பதையும் ஒத்துக் கொள்வையாயின், உன்னை விடுதலைசெய்து என்னுடைய வேலைக்காரர்களி லொருவனாய் வைத்துக் கொள்வேன்'' என,

''நீ சொல்வது சுத்தப் பொய். நான்தான் அரசன். என்னுடைய முன்னோர்கள் எல்லோரும் அரசராயிருந்தார்கள். என்னுடைய குலத்தின் பெயரையும், செல்வத்தையும், புகழையும் இழந்தபின் நான் உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன்'' என்று மனஞ் சிதைந்து நொந்த அரசன் மறுமொழி பகர்ந்தான். மற்றவன் சற்று நேரம் ஒன்றுஞ் சொல்லாமல் அரசனைப் புன்னகையுடன் இகழ்ந்து நோக்கி, ''நீ சாகவேண்டியதில்லை. ஆனால் நீ ஒரு காலத்தில் இறைவனா யிருந்ததை மறந்து ஒடுங்கி யடங்கி வாழ்ந்திரு'' என்றான்.

துயரக்கடலில் மூழ்கிய வணங்கா நெஞ்சன் தன்னுடன் ஒவ்வொரு நாளும் பழகிய அநேகருடைய முகங்களை நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்தான். அவர்களில் ஒருவனேனும் அரசனைக் கண்டுபிடிக்கவில்லை. அவனுடன் நன்றாய்ப் பழகிய வேட்டைநாயொன்று அவ்விடத்தில் படுத்திருந்தது. அதுவுங்கூட எழுந்து நின்று உறுமி அரசனைச் சந்து சந்தாய்க் கிழித்தெறியப் போவதுபோல் நின்றது. ''என்னுடைய கையிலிருந்து உண்டு என்னுடன் கொஞ்சி விளையாடிய நாயே, நீயும் என்னை மறந்தாயே'' என்று முணு முணுத்துக் கொண்டிருக்க, அரசன், சிலரால் அரண்மனைக்கு வெளியே கொண்டுபோகப்பட்டான். அவனடிக்கடி மகத்துவத்துடன் சவாரி போன வாசல்களின் வழியாய் இப்பொழுது அவனுடைய பணியாளர் அவனை நெட்டித் தள்ளிக்கொண்டு போனார்கள். முன்னாட்களில் அவன் எதிரிகளை முறியடித்து, நாடுகளைக் கைப்பற்றி, யுத்த பேரிகைகள் முழங்க, உருவிய வாளும், பொன்னணிகளும் ஜொலிக்க, சொல்லரிய மகிமையுடன் பவனி போன தெருக்களின் வழியாய், ஐயோ பாவம்! அவனை இப்பொழுது காவலாளர்கள் ஒரு கைதியைப்போல் பிடித்துச் சென்றார்கள்.

''உலகமுழுவதும் ஒருங்கே எனக்கு விரோதமாய் எழுந்ததே; ஏழையாகிய நான் இப்படி வருந்தத் தெய்வமும் சம்மதித்ததே'' என்றரசன் ஏங்கி யழுதான்.

நகரத்திற்கு வெளியே அரசனைக் கொண்டு போய் ''எங்களுடைய அரசனுடைய கட்டளையைக் கேள். ஒன்றும் பேசாமல் இந்தவிடத்தை விட்டுப்போ. நகரத்திற்குள் திரும்பவும் கால் வைக்காதே. வந்தால் உனக்கு என்ன சம்பவிக்குமென்பதை நாங்கள் சொல்லவேண்டியதில்லை. ஏதோ புண்ணியவசத்தால் நீ உயிர்தப்பிப் பிழைத்திருக்கிறாய்'' என்று சொல்லித் தங்கள் வேலைக்குத் திரும்பினார்கள் காவலாளர்கள். அவர்கள் போனபின், மனம்போனபடியெல்லாம் அலைந்து திரிந்து ஒரு அழகிய சிற்றோடைக்கப்பால் காட்டின் ஓரத்தில் கட்டப்பட்டிருக்கும் சிறிய குடில் ஒன்றைக் கண்டான். அப்பொழுது அவனுக்கு ஒரு ஞாபகம் வந்தது. தான் இளவயதாயிருந்த காலத்தில் அக்குடிலில் வசித்து வந்த ஒரு துறவியிடம் யோசனை கேட்பதற்காக அடிக்கடி போய் வந்ததும், அத்துறவியின் உண்மையான நல்ல போதனைகளை தான் கவனியாமல் அசட்டை செய்ததும் நினைவிற்கு வந்தது. இவற்றையெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு மெள்ள நடந்து, ஓடையைக் கடந்து, உலகத்தின் மாயையில் உழல்பவர்கள் மதிகெட்டு மயங்கி நின்றாலும், பற்றற்ற அத்துறவியாவது தன்னை இன்னானென்று தெரிந்து ஏற்றுக் கொள்ள மாட்டாரா என்ற சந்தேகத்துடன் குடிலின் வாசலில் வந்து நின்று தன் வரவைத் தெரிவித்தான். தூய்மை வாய்ந்த அத் துறவி

பழமை யெனப்படுவ தியாதெனின் யாதுங் கிழமையைக் கீழ்ந்திடா நட்பு.

பங் 4.

வெளியே வந்து, ''அன்பனே, என்ன சங்கதி?'' என்று கேட்க, ''முற்றத் துறந்தவரே, பெரியவரே, தங்களுக்கு இந் நாட்டை யாளும் வேந்தன் தெரியுமோ? வருந்தி மெலிந்து எளியவனாயிருக்குமென்னைத் தாங்களறிவீர்களோ? ஐயோ, இங்குள்ள சகலத்திற்கும் உமக்கும் அதிபதி நானல்லவோ?'' என்றானரசன்.

இதைச் செவியிலேற்ற அப்பெரியவர் ''இக்கதையை நீ இனி உளறாதே. இத்தகைய பெரும் பேச்சுப் பேசுவதால் உனக்கு எவ்வித அனுகூலமும் வருமென்று நம்பாதே'' என்று அமைதியாய் விடையளித்து உள்ளே சென்றார்.

அரசனுக்கு வியாகூலம் மேலிட்டுப் பூமியில் விழுந்து புரண்டழுது, ''அந்தோ, கடவுளே, இதுவென்ன மாயம்? எல்லா மனிதராலும் கேவலமாய் நடத்தப்படும்படி இவ்விதியை என் தலையிலெழுதினாய். ஒரு வினாடி யளவேனும் நான் முன்னிருந்த மேன்மையை எனக்குத் தந்தருள மாட்டாயோ? நான் என் தாயின் வயிற்றிலிருந்து உதித்தபொழுது ஒன்றுமில்லாதவனாய்ப் பிறரைப் போலவே பிறந்து, நாளுக்குநாள் வளர வளர மேன்மேலும் அகங்காரம் படைத்துக் கெட்டுப்போனாலும், என்னை ஒரு பெரிய அரசனாகவைக்க உனக்குத் திருவுள மிருந்ததே. என்னை ஏன் இப்பொழுது வாதிக்கிறாய்? பார்ப்பவரெல்லாம் என்னைப் பரிகாசஞ் செய்கிறார்கள். என்னுடைய பழைய எண்ணங்களையும் நோக்கங்களையும் மறந்து, வீணான என்னுடைய பெருமைகளை விட்டு, அகந்தையை யொழித்து நான் முன்போல் வாழ வரந் தரமாட்டாயோ? அப்படி உன் சித்தமில்லாவிட்டால், நான் கலங்கி நிற்கு மிந்தவேளையில் நான் இன்னும் இவ்வுலகத்திலிருக்க வேண்டிய நாட்களைச் சந்தோஷமாய்க் கழிக்க அருள் செய்வாய். இறைவனே, இன்னுமென்ன சொல்வேன்? நான் நினைத்தபடி எல்லாம் செய்தேன். என் சிந்தையை யடக்கி உன்மீது செலுத்தாது நானே உலகின் நடுநாயகம் என்று செருக்கியிருந்தேன். ஆயினும் ஏராளமான செல்வத்தையும் விலைமதிப்பில்லாத சுகத்தையும் நீ எனக்குத் தந்து காத்தாய். இன்னும் நீ என்மீது கருணையுடையவனாயிருக்கிறாய் என்பதை அறிவேன். நான் செய்த தீவினைகள் போதும். என்பிழை பொறுத்திரங்கி எனை ஆட்கொண்டருளவேண்டும் தயாநிதியே'' என்று உள முருகிக் கண்ணீர்விட்டான்.

இப்படியவன் மனமுடைந்து மன்றாடி இளகிக் கசிந்து நின்ற நிலைமையில், துறவி வெளியே வந்து கருணைகூர்ந்து ''அப்பா, என் பிள்ளையே, அரசனே, உன் மாண்பு குன்ற இந்த அவதியிலெங்ஙனம் மாழ்ந்தாய்'' என்று கேட்டார். வறண்ட நிலத்தில் மழை பொழிந்ததுபோல் அரசன் உளங்குளிர்ந்தது; முகம் மலர்ந்தது. ''நான் செய்த ஏதோ பெருங் குற்றத்திற்காக எல்லாம் வல்ல இறைவன் என்னை இந்த அவமானத்திற் காளாக்கினார். என்னுடைய பணியாளரும் நண்பர்களும் என் மனையாளும் என்னை யறியாது தள்ளிவிட்டார்கள். சிறிது நேரத்திற்கு முன்னிங்கு வந்த என்னைத் துறவறம்பூண்ட தாங்களு மறிந்துகொள்ள முடியவில்லையே. ஆனாலிப்பொழுது தாங்கள் என்னை இன்னானென்று காண்பதனால் கடவுள் என்மீதிரக்கம் பாராட்டுகிறாரென்பதை யுணர்ந்தேன். என் பசி தணியச் சிறிது ஆகாரமும், உடுக்க யாதாயினுமொரு வஸ்திரமுங்கொடுங்கள். நான் மறுபடியு மரண்மனைக்குப்போய் அங்கிருக்குங் குருடர்கள் என்னை யாரென்றுணர்கிறார்களா வென்று பார்ப்பேன்'' என மொழிந்தான்.

இதைக் கேட்ட துறவி அருளுடன் ''ஐயோ, மகிபனே, நீ படமுடியாத பாடு பட்டிருக்க வேண்டும். எனது சிறு குடிலுக்குள் வா. இந்த முரட்டு உடையையும், என்னிடத்திலிருக்கிற அற்ப ஆகாரத்தையும் பெற்றுக்கொள். பின் உன்னுடைய சங்கதி யாவையு மெனக்கெடுத்துரை, எங்கும் நிறையும் பரம்பொருள் உன்னைக் காத்து ரக்ஷிப்பதாக'' என்றார்.

பசியாறி உடைதரித்த பின், அரசன் தன்னுடைய அளவற்ற இறுமாப்பையும் வீண் பெருமையையும்பற்றித் துறவியிடம் ஆதியோடந்தமாய்க் கூறினான். அவர் அவனைத் தேற்றி ஆறுதல் சொல்லி, அநேக புத்திமதிகளைப் புகட்டி அரண்மனைக்கேக அனுப்பினார்.

பொழுதுபோகும் வேளையாயிற்று. அரசன் யாரையுஞ் சந்திக்காமல் தன் மாளிகைக்கு நேரே போனான். வாயிலை யணுகவும், அங்கிருந்த காவலாளிகளி லொருவன் ''இதோ நமது வேந்தன் வருகிறார். இன்று சாயங்காலம் மாறுவேடம் பூண்டு ஊர்வலம் வருவாரென்று முன்னமே உத்தரவு பிறந்திருக்கிறது'' என்றான். மாளிகையுட் பிரவேசித்து மேலே செல்லுங்கால் அங்கிருந்தோரனைவரும் வாய்மூடித் தலைவணங்கி நின்றார்கள்.

நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற் குப்பாதல் சான்றோர் கடன்.

உள்ளிருந்தொருவன் வந்து அடிவணங்கி "அவனியை யாளுமண்ணலே, தங்கள் ஆணையின் படியே அரசபெருமாட்டி, தங்களுடைய வரவை எதிர்நோக்கிச் சிறு மண்டபத்தில் காத்திருக்கிறார்கள்" என்றுரைய, "இப்பொழுதெல்லாம் சரியாய் நடந்தேறுகிறது" என்று தனக்குள் பேசிக்கொண்டு உள்ளே போனான். ஆனால், அன்று காலையில் அரசனாக நடித்தவனைப்பற்றி நினைத்தபொழுது வேந்தன் நடுங்கினான். என்றாலும் ஆண்டவன் சித்தமிருந்தால் அவனுந் தன்னை அங்கீகரிப்பா னென்ற தைரியமவனுக்கிருந்தது. சிறுமண்டபத்தில் வந்து நின்றபொழுது அரசி நித்திரையிலிருந்தாள். அவளருகில் அரசனுடைய சொரூபமொன்று கிரீட மணிந்து நின்று கொண்டிருந்தது. மன்னன் கோபத்துடன் பேச முயல்கையில் அவன்முன் நின்ற உருவம் திடீரென மாறிற்று. மனிதருடைய சாயல் நீங்கித் தேவர்களுடைய அமைப்புடனும் அழகுடனு மொருவன் அரசன் முன்னே தோன்றினான். "செம்மலே, நீ கலங்காதே, நீ யறியாமலேயே நானிங்கு அடிக்கடி வந்து போய்க்கொண்டிருப்பதுண்டு. ஒப்புயர் வற்ற முழுமுதற் கடவுள் உன் பெருமையை யழிக்க வல்லவரா யிருக்கிறாரென்பதை நீ இப்போதறிந்திருக்கிறாய். நேற்று நீ அவனியை யாளுமரசனா யிருந்தாலும் இன்றுனைப் பேரூரற்ற பிச்சைக்காரனாக மாற்ற அவருக்கு வன்மையுண்டு. வாக்கு மனங்களுக் கெட்டாத இறைவனுடைய செயலை நீ, இறப்பதற்கு முன் கண்டு கொண்டாய். நெடுநாளிருந்தும் பூமியிலெண்ணிறந்த பேர் கடவுளையறியாமலே மாண்டு போகிறார்கள். நீ தப்பினாய். இனி நான் போகவேண்டும். உலகிலுள்ளவரையும் என்னை மறுபடியுங் காண மாட்டாய். நான் போய் வருகிறேன். புத்தியுடனிரு. உன்னுடைய ஸ்தானத்தை ஒரு நாள் வகித்தேன். இங்கிருந்து போய் உன்னுடைய மந்திரிகளைச் சந்தித்து அவர்களுடன் ஜனசமூக விஷயமாய் ஆலோசனைகள் செய்து, விருந்துண்டு முன்போலவே வாழ்ந்திருப்பாய். இனி விபரீதமொன்றும் நடவாது" என்று சொல்லியவன் மறைந்தான்.

இவையெல்லாம் அரசனுக்குச் சொப்பனம் போலிருந்தது. தன்னுடைய அநுபவத்தை எண்ணி ஆச்சரியப்பட்டுக்கொண் டிருக்கையில் அரசி, தூக்கத்திலிருந்து விழித்து "பூபதியே, தங்களுக்காகத் தேசத்தலைவர்களெல்லாம் காத்துக் கொண்டிருக்கிறார்கள். மாறுவேடம் பூண்டிருப்பதைவிட்டு வழக்கம்போ லவர்களிடம் போங்கள்" என்றாள். அரசன் நல்லுடை தரித்துப் பணிகள் பூண்டு சிங்காசன மேறினான். அன்று காலையில் அவ்விடத்தில் வந்த பைத்தியம் பிடித்தவனைப்பற்றி எவரும் ஒன்றும் பேசவில்லை.

அரசன் அன்புமிரக்கமு முள்ளவனாய் நாட்டைப் பரிபாலனஞ் செய்துவரும் நாளில், அடிக்கடி தன் வாழ்க்கையில் நேர்ந்த இந்தப் பெரிய சம்பவத்தைக் குறித்து நினைப்பான். அவன் வயது முதிர்ந்தவனாகி, வாழ்க்கையின் முடிவு சமீபத்திருக்குங் காலத்தில் பின்வருமாறு ஒரு நாள் அவன் சிந்தித்தான்.

"நான் பணிவாகவுந் தணிவாகவும் வாழும்படி எனக்கறிவு வருவிக்கப்பட்டது. இப்பொழுது சரியாய் முப்பது ஆண்டுகளுக்கு முன் அப்பொழுது பைத்தியம் பிடித்தவன் போல் பிதற்றிய வென்னை ராஜசமூகத்தைவிட்டு அப்புறப்படுத்தும்படி கட்டளை யிட்டவன் நானே யன்றி வேறெவருமில்லை யென்றெல்லோரு மெண்ணிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய உண்மையான விருத்தாந்தம் ஓடையினோரத்தில் வசித்து வந்த துறவி யொருவருக்குத்தான் தெரியும். அவர் இறந்து அநேக வருஷமாகிறது. என்னுடைய விருத்தாந்தத்தை மற்றவர்களுக் குரையாது விட்டுவிடின் கனவைப்போலது மறைந்து போகும். எனக்குப்பின் வருகிறவர்கள் ஜாக்கிரதையாய்ப் பிழைக்கும் வண்ணம் எனக்கு நேர்ந்தவற்றை யெல்லாம் மற்றவர்களைக்கொண்டு எழுதிவைப்பேன்."

அங்ஙனமே இக்கதை எழுதப்பட்டது. ஆயினுமவனுக்குப்பின் வந்த வரசன் இதனால் ஒரு பயனுமடையவில்லை. அகம்படைத்தவனை விட அவனுக்குப் பன்மடங்கதிகக் கர்வம் பிடித்திருந்தது. ஆனால் கடவுள் அவனையுந் தண்டித்து நல்ல வழிக்குக்கொண்டு வந்தாரோ இல்லையோ நமக்குத் தெரியாது.

திருப்புகழ் விருத்தி உரை

முதல் தொகுதி :: 6-படைவீடுகள்

12-சஞ்சிகைகளாக வெளிவருகிறது

உயர்ந்த காகித பதிப்புக்கு வருஷசந்தா ரூ. 6-0-0

சாதாரண கிளேஸ் பதிப்பு வருஷசந்தா ,, 4-12-0

பழகிய நட்பெவன் செய்யுங் கெழுதகைமை செய்தாங் கமையாக் கடை.

இரஞ்சிதம்

[ஸ்ரீமான் ஆ. இராமசாமி முதலியார் அவர்கள்.]

(64-ம் பக்கத்தொடர்ச்சி)

மற்றவர்களும் அதை ஆமோதிக்க கோபால பிள்ளையும் மிகக் கஷ்டத்துடன் அதற்கு இசைந்தான். பிறகு எல்லோரும் புறப்பட்டு வெளியிற் செல்ல, வழியில் நல்லமுத்தைக் கண்டு வந்தனமளித்து அவனையும் அழைத்துக்கொண்டு எல்லோருமாக ஆற்றங்கரைக்குச் சென்றார்கள். அங்கு வேடிக்கையாகச் சற்று நேரம் பேசிக்கொண்டிருந்து அஸ்தமிக்குஞ் சமயம் வீட்டிற்குத் திரும்பிவந்தார். கோபால பிள்ளை அவர்கள் எல்லோரையும் இரத்தினத்தின் வீட்டிலேயே அன்றிரவு சாப்பிடும்படி செய்தான். சுமார் ஒன்பது மணிக்கு அறுவரும் புறப்பட்டு நாடகக் கொட்டகையிடஞ் சென்று முதல்வகுப்பு டிக்கட்டுகள் ஆறு வாங்கிக்கொண்டு கொட்டகைக்குள் போய் முதலில் இரத்தினமும், அவனுக்கு இடது புறத்தில் கோபால பிள்ளையும் அதற்கடுத்தாற்போல் மாணிக்கம் பிள்ளையும் அவ்வாறு வரிசையாக ஆறு பெயர்களும் உட்கார்ந்தார்கள். இரத்தினத்தின் வலது பக்கத்தில் ஒரு நாற்காலி காலியாக விருந்தது. நாடகம் ஆரம்பிக்கப்போகுஞ் சமயம். உருவின் மிக்க உடம்பினைப் பெற்ற ஒரு மங்கை நீலவர்ணப் பட்டாடை தரித்தும், விலைபெற்ற ஆபரணங்க ளணிந்தும், தற்கால நாகரிகத்திற்கேற்ப முகத்தைப் பொடி(Facing Powder) கொண்டு அழகு செய்துக் கொண்டும், காற்சிலம்பு 'ஜல், ஜல்' என்று ஒலிக்கவும் அன்னம்போல் நடந்து கொட்டகைக்குள் வந்தாள். கொட்டகையி விருந்தவர்களுடைய பார்வையெல்லாம் அவள்பாற் சென்றன. அவ்வாறு வந்த அச்சுந்தரி இரத்தினத்தின் சமீபத்திற் காலியாகவிருந்த நாற்காலியில் உட்கார்ந்தாள். சில நிமிடங்கள் கழிந்தபின் அப்பெண் இரத்தினத்தைப் பார்த்து, "ஐயா ! தம்மிடம் நோட்டீஸ் இருந்தால் தயவு செய்து கொடுக்கிறீர்களா? பார்த்துவிட்டுத் திருப்பிக் கொடுத்து விடுகிறேன்" என்று சொல்ல இரத்தினம் தன் நண்பனிடமிருந்த நோட்டீசை வாங்கி அவளுக்குக் கொடுத்தான்.

அப்பெண்ணும் மிக்க மரியாதையுடன் நோட்டீசைப் பெற்றுக்கொண்டு, அதைப் படிப்பதும் ஜனங்கள் வரும்வழியைப் பார்ப்பதுமாக இருந்து "நாடக மாரம்பிக்குஞ் சமயமாகி விட்டது. இன்னுங் காணோமே. மிகுதியிருந்தால் நாளைக்குப் பேசிக்கொள்ளக்கூடாதா" என்று இரத்தினத்தின் காதிற் கேட்கும்படியாகத் தனக்குத்தானே சொல்லிக்கொண்டாள். சற்று நேரஞ் சென்றபின் திடுக்கிட்டவள்போல் அபிநயித்து "ஐயோ! இனி என்ன செய்வேன். நினைவில்லாமல் இரண்டு டிக்கட்டுகளையும் நானே கொண்டுவந்து விட்டேனே. தனியாக நான் எவ்வாறு வெளியிற் செல்வது. ஐயா! தயவுசெய்து தாங்கள் என்னை வெளியிற் கொண்டுபோய் விடுகிறீர்களா?" என்று இரத்தினத்தைக் கேட்க, அவன் "நாடகம் ஆரம்பித்தாய் விட்டதே. எதற்காக வெளியிற் செல்ல வேண்டுமென்கிறீர்கள்" என வினவினான். "நானும் என் தாயாரும் வந்தோம். டிக்கட்டு வாங்கிக்கொண்டு உள்ளே வருஞ்சமயம் சொந்தக்காரர் ஒருவர் வர, என் அன்னை 'நீ உள்ளே போ. நான் வருகிறேன்' என்று சொல்லி அவருடன் பேசிக்கொண்டு நின்றார்கள். நானும் மறந்தாற்போல் டிக்கட்டை அவர்களிடங் கொடுக்காமல் வந்துவிட்டேன். அவர்கள் வெளியே நின்றுகொண்டிருக்கிறார்கள் போலிருக்கிறது. இன்னது செய்வதென்று தெரியவில்லை. தனியாக வெளியிற்செல்ல வெட்கமாயிருக்கிறது. ஐயா ! தாங்களாவது தயவுசெய்து வெளியிற்சென்று என் தாயாரை அழைத்து வருகிறீர்களா? நாடகம் ஆரம்பிக்கப்பட்டதால் தாம் ஒரு சமயம் வெளியிற்செல்லப் பிரியப்படமாட்டீர். நான் வற்புறுத்துவதும் சரியாகத் தோன்றாது. ஆதலின் நானே சென்று வருகிறேன்" என்று சொல்லிப் புறப்பட ஆரம்பித்தாள். மென்மைக்குணத்தில் ஈடுபட்ட இரத்தினம் இவ் வேண்டுகோளை மறுக்கத் தோன்றாதவனாய், "அம்மா ! நான் சென்று உம்முடைய தாயாரை அழைத்துக்கொண்டு வருகிறேன். தாங்கள் இங்கேயே இருக்கலாம்" என்று சொல்லி எழுந்து சென்றான்.

அவ்வாறு சென்ற இரத்தினம் கொஞ்சநேரத்திற்குப்பின் திரும்பி வந்து நாற்காலியில் உட்கார்ந்து "வெளியிற் பெண்களொருவரையுங் காணோம். தெருவரைக்குஞ் சென்று பார்த்தேன் ஒருவருமில்லை" என்று சொன்னான். அதற்கு அப்பெண், "ஐயோ இனி நான் என்ன செய்வேன். எவ்விதம் வீட்டிற்குப்போவேன். எனக்கு அறிமுகமானவர்களும் இங்கு ஒருவருங் காணப்படவில்லையே" என்று சொல்லி அழ ஆரம்

விழைதகையான் வேண்டி யிருப்பர் கெழுதகையாற் கேளாது நட்டார் செயின்.

பித்தாள். இதைப்பார்த்துச் சகியாதவனாய், "அம்மா! தாங்கள் எதற்காக வீணே வருந்துகிறீர்கள். டிக்கட்டு இல்லாததினால் உள்ளே விட மறுத்திருப்பார்கள். தாம் தனியாக இருக்கும் விஷயம் தெரியுமாதலால் நாடகம் முடியும் சமயம் வந்து கூட்டிக்கொண்டு போகலாம் என நினைத்து ஒரு சமயம் வீட்டிற்குச் சென்றிருப்பார்கள். ஆதலின் தாம் விசனப்படவேண்டியதில்லை என்று நினைக்கிறேன். ஒருக்கால் உம்முடைய தாய் வராவிட்டாலுங்கூட நான் தங்களை அழைத்துக்கொண்டுபோய் உங்கள் வீடு சேர்த்து விடுகிறேன்" எனச் சமாதானஞ் செய்தான்.

பெண்:—ஐயா தமக்கு வீண் சிரமங் கொடுக்கிறதைப்பற்றி மன்னிக்க வேண்டுகிறேன். தங்களைப் பார்த்தால் மிகவும் உத்தமராகத் தோன்றுகிறீர். தங்களுக்கு எந்த ஊரோ? என்று கேட்டாள்.

இரத்:—நான் இவ்வூரான்தான்.

பெண்:—அவ்விதமானால் மிக்க நலமாயிற்று. என்னை மன்னிக்கும்படி மறுமுறையுங் கேட்டுக் கொள்ளுகிறேன். கிருபைகூர்ந்து என்னை எங்கள் வீடுகொண்டு சேர்க்கவேண்டும் என விநயமாகக் கூறினாள்.

இரத்:—அம்மா! தாம் அதைப்பற்றி பயப்பட வேண்டியதில்லை, என்று சொல்லிவிட்டு நாடகத்தைக் கவனித்தான்.

நாடகம் துவக்கி சுமார் மூன்றுமணி நேரம் இருக்கும். எல்லோரும் அதிகவனமாக நாடகத்தைப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அச்சமயம் ஒரு மூலையில் "கொட்டகையில் நெருப்பு! கொட்டகையில் நெருப்பு" என்று சிலர் கூக்குரல் போடவே ஜனங்களெல்லோரும் எழுந்துவிட்டார்கள். அங்குள்ளோர் அனைவரும் தத்தம் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதிற் கருத்துக் கொண்டார்களேயன்றி தம்முடன் வந்த பந்துமித்திரர்களையாவது பெண்சாதி பிள்ளைகளையாவது கவனிக்கவில்லை. ஆண் பெண் என்ற வித்தியாசமின்றி ஒருவர்மீதொருவர் வீழ்ந்து ஓடலுற்றார்கள். ஐந்து நிமிஷத்திற்குள் கொட்டகையிலிருந்த அவ்வளவு ஜனங்களும் வெளிக்கிளம்பிவிட்டனர். ஆனால் இரத்தினமும் அவனருகிலிருந்த பெண்ணும் மாத்திரம் இன்னும் வெளியிற் செல்லவில்லை. அதன் காரணம் இன்னதென்று கவனிப்போம்.

கொட்டகையில் நெருப்பு என்ற விஷயத்தைக் கேட்கவும் அதனால் உண்டான ஜனக் குழப்பத்தைப் பார்க்கவும் அப்பெண் மிகவும் பயந்தவளாய், "அம்மா!" என்று கதறித் தன் சமீபத்தில் உட்கார்ந்திருந்த இரத்தினத்தின்மீது சாய்ந்து அவனை நகரவொட்டாமற் கட்டிப்பிடித்துக்கொண்டாள். இயற்கையாகவே பிராணிகளிடத்தில் இரக்கங் கொண்டொழுகும் இரத்தினம், சுயநலத்தை மேற்கொண்டு தன் உயிரைக் காப்பாற்றுவதிற் கருத்துக்கொள்ளாமலும் தன் மீது சாய்ந்து தன்னைத் தஞ்சமென்று தழுவிக் கொண்ட பெண்ணைத் தள்ளிவிடாமலும், யாதொரு விகற்ப எண்ணமுமின்றி அப்பெண்ணைத் தன் சகோதரிபோற் பாவித்துத் தன் மார்புடனணைத்துக் கொண்டு அவளுக்குத் தேறுதல் வார்த்தைகள் கூறினான். பிறகு அப்பெண் மூர்ச்சையடைந்திருக்கிறாள் என்னும் சங்கதியை அறிந்தவனாய்ச் சகாயத்திற்காகத் தன்னுடன் வந்திருந்த நண்பர்களைப் பார்த்தான். அவர்களில் ஒருவரேனும் அங்கு இலர். இன்னது செய்வதென்று தோன்றாதவனாய் அப்பெண்ணைத் தன் மார்புடன் சேர்த்துக்கொண்டு நிற்கும் சமயம் நெருப்பு அவர்களிருக்குமிடம் தாவி வருவதைக் கண்டு இனி அங்கிருத்தல் அபாயமென்பதையுணர்ந்து அம்மங்கையைத் தன் தோளின்மீது சாய்த்து எடுத்துக்கொண்டு கொட்டகையை விட்டு நீங்கி வெளியில்வந்து அங்கு நின்றுகொண்டிருந்த குதிரை வண்டிகளொன்றில் அவளைப் படுக்கவைத்தான். வண்டிக்காரனிடம் சற்றுநேரம் நிற்கும்படி சொல்லிவிட்டுத் தன்னுடன் வந்தவர்களிலெவரேனும் தென்படுவாரோ என்று சுற்றுமுற்றும் பார்த்தான். ஜனத்திரள் பெருத்திருந்ததனாலும் நிலவுவெளிச்சம் குன்றியிருந்ததினாலும் எவர்களேனும் இருக்கிறார்களா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. அப்பெண்ணினுடைய வீடு எந்தத் தெருவில் இருக்கிறதென்பதை அவன் முன்னமேயே கேட்டு அறிந்துக்கொள்ளவில்லை. இப்பொழுது கேட்கலாமென்றாலோ அவள் மூர்ச்சையாயிருக்கிறாள். ஆகவே வேறொரு விதமொன்றுஞ் செய்யத்தோன்றாதவனாய் வண்டிக்காரனிடம் வடக்குமாசி வீதிக்கு வண்டியை ஓட்டும்படி சொல்லிவிட்டுத் தானும் வண்டியிலேறி உட்கார்ந்து கொண்டான்.

வண்டியும் வீடுவந்து சேர்ந்தது. வனிதையும் மூர்ச்சை தெளிந்தாளில்லை. ஒரு சமயம் தனக்கு

முன்னதாகவே தன்னுடைய நண்பர்கள் வீடு வந்து சேர்ந்துவிட்டார்களோ என்ற சந்தேகத்தில் இரத்தினம் வண்டியை விட்டிறங்கிப் பார்க்க அங்கு ஒருவருமில்லாததைக் கண்டு அதுவும் ஒரு விஷயத்திற்கு நலமே என்று நினைத்து வண்டிக்காரனுக்குச் சத்தத்தைக் கொடுத்து விட்டுப் பெண்ணைத் தூக்கிக்கொண்டு தன் வீட்டில் நுழைந்து மேன்மாடிக்குச் சென்று அங்கிருந்த மஞ்சத்தின் மீது அவளைப் படுக்கவைத்தான். வேலைக்காரனிடம் தண்ணீர் கொண்டுவரும்படி சொல்ல அவனும் அவ்வாறே கொண்டுவர அதை வாங்கிக்கொண்டு அவனை அனுப்பிவிட்டுச் சிறு துணியொன்றைச் சலத்தில் நனைத்து அதனால் அப்பெண்ணின் முகத்தைத் துடைத்ததுமல்லாமல் அவளுடைய வாயிலும் கொஞ்சம் தண்ணீரை வார்த்தான். சற்று நேரத்திற்குப் பின், அம்மங்கையும் மூர்ச்சை தெளிந்தவள்போல் உடம்பையசைத்துக் கண்களைத் திறந்து மிறள மிறளப் பார்த்து, 'அம்மா! அம்மா!' என்று கூவினாள். பிறகு எழுந்துட்கார்ந்து பக்கத்தில் இரத்தினம் நிற்பதைக்கண்டு மஞ்சத்தினின்று மிறங்கி நின்று 'ஐயா! தாம் யார்? இங்கு எதற்காக வந்தீர்கள்? என் அன்னை எங்கே?' என்று கேட்டுச் சுற்றுமுற்றும் பார்த்துத் திகைத்துப் பயந்தவள் போல், 'இது என்ன புது இடமாயிருக்கிறதே. இங்கு எப்படி வந்தேன்?' என்று கூறிச் சற்று மௌனமாயிருந்து "ஓஹோ! இன்று நாடக சாலைக்கல்லவோ போயிருந்தேன்.—ஆம் அங்கு நெருப்புப் பற்றிக்கொண்டது. பின்—ஒன்றுந் தெரியவில்லையே" என்று சொல்லிச் சற்று நேரம் மௌனமாயிருந்து, பிறகு இரத்தினத்தைப் பார்த்து "ஐயா! இப்பொழுதே எனக்கு நினைவு வந்தது. என் உயிரைக் காப்பாற்றிய புண்ணிய சீலர் தாம் என்பதை உணராமல் தங்களை யார் என்று கேட்டதைப் பற்றி என்னை மன்னிப்பதுடன் நான் இங்கு வந்த விதத்தையும் கூறும்படிக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று சொன்னாள்.

இரத்தினம் நடந்த விஷயங்களனைத்தையும் உரைத்து, "அம்மா! உம்முடைய அன்னை உம்மைக் காணாததால் மிகவும் வருத்தமுறுவார்கள். ஒருகால் தம்மைத் தேடிக்கொண்டு நாடக சாலைக்குச் சென்றிருத்தலுங் கூடும். ஆதலின் தாங்கள் அங்குச் செல்வதாயிருந்தாலுஞ் சரியே. அல்லது உம்முடைய இல்லத்திற்கேகுவதெனினும் சம்மதமே. எங்குப் போவதாயிருந்தாலும் தமக்குத் துணையாக நான் வருகிறேன். உம்முடைய இஷ்டத்தைச் சொல்லவும்" என்று கேட்டான்.

பெண்:—ஐயா! தாம் சொல்வது உண்மையேயாகும். நெருப்பின் விஷயத்தைக் கேள்விப்பட்டு என்னையும் காணாவிடில், என் தாய் சாலவும் கவற்சியுறுவார்கள். எனினும் இப்பொழுது என்னால் ஒன்றுஞ் செய்யமுடியாமலன்றோ இருக்கிறது. எனக்கு மறுபடியும் மயக்கம் வரும்போலிருக்கிறது. சலமிருந்தால் கொஞ்சங் கொடுங்கள்" என்று சொல்லிக் கொஞ்சம் தண்ணீர் பருகிவிட்டுத் தன் முழங்கைகளை மஞ்சத்தின்மீதூன்றிச் சாய்ந்துகொண்டாள்.

இரத்:—அம்மா! வேண்டுமென்றால் மஞ்சத்தின்மீது சற்று நேரம் படுத்திருங்கள். பிறகு போகலாம்.

பெண்:—ஐயா! தாம் கோபித்துக்கொள்ளாமலிருப்பின் தம்மை ஒன்று கேட்க விரும்புகிறேன்.

இரத்:—எனக்குக் கோபம் வரும்படி என்ன சொல்லப் போகின்றீர்கள். குற்றமில்லை. தடையின்றிச் சொல்லலாம்.

பெண்:—விடியும்வரை நான் இங்கு தங்கியிருப்பதில் தமக்கேதேனும் ஆக்ஷேபனையுண்டோ?.

இரத் :— (யோசித்து) அதனால் எனக்கு யாதொரு கெடுதலுமில்லையென்று வைத்துக்கொள்ளினும் தங்களைக் கவனிக்க வேண்டியவனாகவிருக்கிறேன். தாங்கள் காலையில் இங்கிருந்து வெளிச்செல்வதைப் பார்ப்போர், கெட்ட அபிப்பிராயத்தைக் கொள்வார்களேயன்றி உண்மையான விஷயத்தைச் சொன்னாலும் நம்பமாட்டார்களே.

பெண்:—இதனால் எத்தகைய அபவாதச் சொற்கள் வரினும் அவைகளை யனுபவிக்கத் தயாராக விருக்கிறேன். அதைப்பற்றித் தாம் கவனிக்க வேண்டியதில்லை. தங்களுக்கு யாதொரு தடையுமின்றெனில் நான் இன்று தங்கிச் செல்லுவதே நலம் என்பது என் நம்பிக்கை.

இரத்:—அம்மா! நன்றாக யோசித்துப் பாருங்கள். கவிழ்ந்த பால் கலயம் ஏறாது. இன்னும் ஒரு மணிநேரம் பொறுத்தேனும் தங்களுடைய

விட்டிற்குச் செல்வதே சிறந்ததாகும். பின் தங் களிஷ்டம். என்னால் மறுத்துக் கூற முடிய வில்லை.

பெண்:—ஐயா! இங்கு தங்கிச் செல்வ தென்று தீர்மானித்து விட்டேன். தாங்களே 'போ' என்று சென்னாலுங்கூட இனிப் போகமாட் டேன். இது தங்களுடைய சயனக்கிருகம்போலி ருக்கிறதே. நான் இங்கு படுத்துக்கொண்டால், தாம் எங்குச் சயனித்துக்கொள்ளுவீர்கள்?

இரத்:—அம்மா! நான் அடுத்த அறையிற் படுத்துக்கொள்கிறேன். தாம் இங்குச் சயனித் துக்கொள்ளும்.

பெண்:—இல்லாவிடில் இம்மஞ்சத்தின் மீது தாங்கள் சயனித்துக் கொள்ளுங்கள். நான் கீழே படுத்துக்கொள்கிறேன்.

இரத்:— அம்மா! அது சரியன்று. தாங்கள் இங்கு சயனித்துக் கொள்ளுங்கள். விடியற் காலம் மறுபடியும் தங்களை வந்து பார்க்கிறேன் என்று சொல்லிப் போக யத்தனித்தான்.

பெண்:—என்ன புத்தியீனமுள்ள பெண்ணா யிருக்கிறேன். தாங்கள் இங்கு படுத்துக் கொண் டால் தங்கள் மனைவி தனிமையா யிருப்பார்க ளென்பதையும், அவர்களுக்கு அது அருவருப் பைத் தருமென்பதையும் கவனியாமற் பேசுகி றேன், என்று தன்னைத்தானே கடிந்து கொண் டாள்.

இரத்:—அம்மா! எனக்கு இன்னும் விவாக மாகவில்லை.

பெண்:—(ஆச்சரியப்பட்டவள் போல் இரண் டடி பின்னால் நகர்ந்து) என்ன அது! தங்க ளுக்கு இன்னும் கலியாணமாகவில்லையா! என்ன வேலை செய்யவிருந்தேன். இனி ஒரு க்ஷணமே னும் இங்கிருக்கமாட்டேன். ஐயா! நான் இவ் விதஞ் சொல்லுகிறேனென்று தாம் கோபித்துக் கொள்ளக்கூடாது. என்னைத் தயவுசெய்து எங் கள் வீட்டிற்குக் கொண்டுபோய் விடவும். என் உயிரைக் காப்பாற்றினீர். இந்த உபகாரத்தையுஞ் செய்துவிடுங்கள். தங்களை என் உயிருள்ளவரைக் கும் மறக்கமாட்டேன். எங்கள் வீடு ஆடிவீதியி லிருக்கிறது" என்று சொல்லி மிகவும் வியாகூலங் கொண்டவள்போற் காணப்பட்டாள்.

இரத்:—அம்மா! தாம் அதைப்பற்றி வருந்த வேண்டியதில்லை. தங்களைத் தங்கள் வீடு கொண்டு சேர்க்கத் தயாராயிருக்கிறேன். இந்நேரத்தில் வண்டி பொன்றுங் கிடைக்காதாதலின் நடந்து செல்லவேண்டி யிருக்குமே.

பெண்:—அதனாற் குற்றமில்லை. புறப்படுங் கள் போகலாம்.

உடனே இருவரும் வெளிக்கிளம்பி ஆடிவீதி யை நோக்கிச் செல்லலாயினர். வழியில் "ஐயா! இன்றிரவு நீர் எனக்குச் செய்துள்ள உதவி என் றும் மறக்கற்பாலதன்று. இப்பேருதவிக்குக் கைம்மாறாக நான் செய்யக்கூடிய தொன்று மில்லை. தங்களுக்கு மேன்மேலும் நன்மையுண் டாகுமாறு, அல்லும் பகலும் எல்லாம்வல்ல இறைவனைப் போற்றித் துதிப்பதே யல்லாது பேதையாகிய என்னால் செய்யவல்ல தேதுமின்று. ஆதலின் தயவுசெய்து தம்முடைய பெயரை எனக்குத் தெரிவிக்க வேண்டுகிறேன் என்று கேட்க, இரத்தினமும் தன் பெயரைச் சொன் னான். என் பெயரைத் தாம் அறிந்துகொள்ள விருப்பமுறவில்லை யெனினும் அதைத் தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். என்னை அம்புஜம் என்றழைப்பார்கள்" என்று சொன்னாள்.

இதற்குள் இருவரும் ஆடிவீதிக்கு வந்துவிட் டார்கள். நிலவு வெளிச்சம் பட்டப்பகல் போலி ருக்கின்றது. அப்பொழுது அம்புஜம், "ஐயா! அதோ அங்கு தெரிகிற கோபிவர்ண மடித்திருக் கும் மெத்தைவீடுதான் எங்களுடையது" என்று சொன்னாள்.

இதை வாசிக்கும் நண்பர்களே! வெளுத்த தெல்லாம் பால் கறுத்ததெல்லாம் தண்ணீர் என்று நம்பக்கூடியவனும், தன்னைப் போலவே பிறரும் என்று எண்ணுகிறவனுமான நமது இரத்தினம் இதுகாறும் அம்புஜத்தை ஒரு பெரிய குடும்பத் தில் பிறந்த பெண்ணென்று கருதினனே யன்றி வேறுவிதமான எண்ணம் அவன் மனதிற்றோன்ற வேயில்லை. தவிர, தன்னுடைய நண்பர்கள் இப் பெண்ணுடன் தான் இருப்பதைக் கண்டால் பரி காசஞ் செய்வார்களே என்ற எண்ணத்தைக் கொண்டானே யல்லாமல் பிறர் பார்த்தால் கெட்ட அபிப்பிராயப் படுவார்களே யென்று நினைக்க வில்லை. இப்பொழுது அப்பெண் தன்னுடைய பெயரைச் சொல்லவே பின்வருமாறு எண்ணலா னான். "இவளுடைய பெயர் அம்புஜமென்றால் ஆடிவீதியில் இவள் பெயர்கொண்ட தாசி ஒருத்தி யிருக்கிறாளே அவள்தானோ இவள். இவளுடைய நடவடிக்கைகளைப் பார்த்தால் கணிகையாகத் தோன்றவில்லையே. ஒருக்கால் இவைகள் எல்லாம்

அழிவந்த செய்யினு மன்பறா ரன்பின் வழிவந்த கேண்மை யவர்.

நம்மை ஏமாற்றுவதற்காகவோ? அவ்விதமிருக்கக் காரணமில்லையே. இவள் உண்மையில் விலைமாதாகவே இருப்பின் என் பெயர் கெட்டுவிடுமன்றோ. ஏன்? இவளுடன் நான் பேசிக்கொண்டிருந்ததைக் கொட்டகையில் அநேகர் கவனித்திருக்கக் கூடுமே. என்ன காரியஞ் செய்துவிட்டேன். இருப்பினும் இன்னுமொரு சந்தேகம். நிஜமாகவே இவள் தாசி அம்புஜமாயிருப்பின், நம்முடன் வந்தவர்களில் ஒருவருக்காயினும் தெரிந்திருக்காதா? இவ்வளவு சந்தேகமேன்? இவளையே கேட்டு விடுவோமே. அவ்விதம் தெரிந்துகொள்வதால் உண்டாகும் பலன் ஒன்றையுங் காணேம். உம். உரலில் தலையைச் சிக்கவைத்துக்கொண்டு உலக்கைக்குப் பயந்தால் தீருமா? வரும் விதி வழியிலுந் தங்காது. எது வந்தாலும் அனுபவித்தேதான் தீரவேண்டும்; என்று பலவாறு எண்ணிக் கொண்டு வரும் பொழுது, அம்புஜம் "ஐயா! இதுதான் எங்கள் இல்லம்" என்று சொல்லி நின்றாள்.

இரத்:—அம்மா இனி எனக்கு உத்திரவு கொடுக்கவேண்டும், நான் சென்று வருகிறேன் என்றான்.

அம்பு:—ஐயா! நல்ல வேலை செய்தீர்கள். என்னை அவ்வளவு நன்றி கெட்டவளென்று நினைத்துவிடக் கூடாது. என் உயிரைக் காப்பாற்றிய தங்களை என் அன்னைக்குக் காண்பிக்க வேண்டாமோ. தயவு கூர்ந்து ஐந்து நிமிஷமேனும் எங்கள் வீட்டில் தாம் இருந்து செல்ல வேண்டுகிறேன். இதற்குத் தாங்கள் மறுக்கக் கூடாது எனக் கூறிவிட்டு, "ஆயா! ஆயா! என்று கூவிக்கொண்டே கதவைத் தட்டினாள்.

கொஞ்ச நேரத்திற்குள் கதவும் திறக்கப்பட்டது. சுமார் ஐம்பது வயதுடைய ஒரு கிழவி விளக்கொன்றைக் கையிற் பிடித்துக்கொண்டு "இந்நேரம் என்ன அம்மா? நாடகம் இப்பொழுது தானா முடிந்தது?" என்று கேட்டுக்கொண்டே, இருவரும் உள்ளே வந்தவுடன் கதவை மூடித் தாளிட்டாள்.

அம்பு:—ஆயா! அம்மா எங்கே? என்று கேட்டாள்.

ஆயா:—இது வரைக்கும் உனக்காகக் காத்துக் கொண்டிருந்து இப்பொழுதுதான் மேல் மாடிக்குச் சென்றார்கள். ஒரு சமயம் தூங்கி விட்டார்களோ என்னமோ எனக்குத் தெரியாது என்று சொன்னாள்.

அம்பு:—ஐயா! வாருங்கள் மெத்தைமீது செல்வோம் என்று சொல்லி முன் நடக்க இரத்தினமும் பின்தொடர்ந்தான்.

மேன்மாடிக்குச் சென்றதும் அம்புஜம் அங்கிருந்த இரண்டறைகளில் ஒன்றைத் திறந்தாள். அதின் மத்தியில் தொங்கிக் கொண்டிருந்த பவர்லயிட் வெளிச்சங் கொடுக்கவும், வேலைப்பாடுள்ளதும் வெல்வெட் மெத்தை விரிக்கப் பெற்றதும், சிங்காரமான கொசு வலைகள் நாற்புறமும் தொங்கவிடப்பட்டதும், இருபுறமும் பெரிய நிலைக்கண்ணாடிகளைக் கொண்டதுமான மஞ்சமொன்று ஒரு புறத்தில் பொலிவுற்று விளங்கவும், அதன் முன்புறத்தில் சோபாவும் சாதாரண நற்காலியும் வட்டமான சிறு மேஜையும் போடப்பட்டிருக்கவும், கண்டோர்கண்களைப் பறிக்கவல்ல படங்கள் சுவர்களை அலங்காரஞ் செய்யவும், இன்னோரன்ன அழகு வாய்ந்த அறையைப் பார்க்கவே இரத்தினத்திற்குச் சற்று நேரம் உள்ளே சென்று உட்காரலாம் என்ற விருப்பமுண்டாயிற்று. அதன் வழிப்பட்டு அம்புஜத்தின் பின்னால் உள்ளே சென்றான்.

அம்பு:—(சொசுவலையை நீக்கி) இம்மஞ்சத்தில் தயவுசெய்து உட்காருங்கள்; என்று சொல்லிவிட்டு, அங்கிருந்த சிறு பீரோவைத் திறந்து அதிலிருந்த வெள்ளித் தட்டையெடுத்து, வாசனைப்பாக்குத் தூளையும், கொழுந்து வெற்றிலையையும் வர்ணச் சுண்ணாம்பையும் அதில் வைத்துக் கொண்டுவந்து மேஜையின்மீது வைத்து அருகிலிருந்த நாற்காலியிலுட்கார்ந்து கொண்டு சிங்காரமாக வெற்றிலையை மடித்துப் பாக்குடன் இரத்தினத்திற்குக் கொடுத்தாள்.

இரத்:—(அதைப் பெற்றுக்கொள்ளாமல்) அம்புஜம்! உன்னை நான் இதுகாறும் ஒருபெரிய குடும்பத்திற் பிறந்த குலஸ்திரீயென்று எண்ணி இவ்வளவு தூரம் ஏமாந்து விட்டேன். இங்கு வந்தபின் உன் செய்கையைப் பார்க்கவேதான் உன்னுடைய உண்மையான நிலைமை தெரிந்தது. இனி ஒரு க்ஷணமேனும் இங்கு தங்கமாட்டேன். நான் சென்றுவருகிறேன் என்று எழுந்தான்.

ராமாமாத்யா:—தென்னாட்டார் (1550) ஸ்வரமேளகளாநிதியில் தக்ஷிண ஸங்கீதத்தைப்பற்றி விஸ்தாரமாக எழுதுகிறார். தென்னிந்திய ராகங்கள் இதில் முதல் முதல் வர்ணிக்கப்படுகின்றன. அவை யாவும் ஷட்ஜாரமத்தைச்சேர்ந்தவையாகும்.

சிறுத்தொண்டர்

(67-ம் பக்கத் தொடர்ச்சி.)

சிறு:—இதோவந்தேன். இன்னும் யாரேனும் அடியவர் வருவாரோ என இங்கு எதிர்பார்த்துக்கொண்டிருந்தேன். அதோ யாரோ சிலர் வருகிறாப் போல் இருக்கிறது.

[சிவனடியார் இருவர் வருதல்.]

1-வது சிவ:— ஆநந்தகளிப்பு

"நந்தவனத்தி லோராண்டி—அவன்
நாலாறு மாதமாய்க் குயவனை--வேண்டி
கொண்டுவந்தானொரு—தோண்டி—அதைக்
கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத்தாண்டி."

(இருவரும்) ஹர ஹர மகாதேவ!

சிறு:—சுவாமிகள் வரவேண்டும். தங்கள் வரவுக்குக் காத்துக்கொண் டிருக்கிறேன். இன்றைக்கு இங்கே அமுதுண்ணத் திருவுளங்கொண்டது என் பூஜாபலனே ஆகும்.

[உபசாரணைசெய்து கூட்டிப்போதல். சிவனடியார்கள் பலர் அமர்ந்திருக்கின்றனர்.]

சுவாமிகள் போஜனத்திற்கு உட்காரவேண்டும்.

[சிவனடியார் இருவரும் உட்காருதல்.]

அனைவருக்கும் அமுது படைத்தல்.

1-வது சிவ:—சாப்பிடலாமோ?

சிறு:—தங்கள் சித்தம்

[எல்லோரும் உண்ணுதல்.]

(பரிசாரகனைப் பார்த்து) இதோ சுவாமிகள் இலையில் கறியே இல்லை.

[கறிவைத்தல்.]

2-வது சிவ:—(பரிசாரகனைப் பார்த்து) சுவாமி! அந்தக் கறி கொஞ்சம் வையும்.

பரி:—எந்தக் கறி?

2-வது சிவ:—கொஞ்சம் முந்தி கொண்டுவந்து வைத்தீரே.

பரி:—ஓகோ! அதுவோ! சுவாமி! அதற்கு அவியல் என்று பேர். பாலக்காட்டுச் சம்பிரதாயமாய் இன்று சமையல்.

[அவியல் வைத்தல்.]

3-வது சிவ:—சுவாமி! தான் ரெண்டுபோடும்.

பரி:—சுவாமி! தான் வகையில் பல தினுசுண்டு. கத்தரிக்காத்தான் முருங்கக்காத்தான் காணுடுகாத்தான் பொத்தான் அத்தான் இன்னும் அநேகம் உண்டு; தங்களுக்கெது பிரியம்?

3-வது சிவ:—வகைக்கிரண்டாக வையுமே.

பரி:—(தனக்குள்) பாவம்! இவர் தர்மர் காலத்து மனுஷன் போலிருக்குது. வஞ்சக மில்லாமல் வளர்ந்திருக்கிறார். (வெளிப்படையாய்) சுவாமி! அத்தானும் பொத்தானும் ஆஜரில்லை. காணுடு காத்தானும் அப்படித்தான். கத்தாரிக்கத்தான் கரைஞ்சுபோச்சு. முருங்கக்காத்தான் மொதக்குது. வேண்டிய அளவு போடுகிறேன். (வைத்தல்)

பரி:—அடே! சேஷா! சுவாமிக்கு அப்பளம் கொஞ்சம் பிரியம். ஒரு அடுக்கை அப்படியே தள்ளு.

சிறு:—சுவாமிகள் வேண்டியதைப்போல அவர்களைக் கேட்டுப் பரிமாறுங்கள்.

பரி:—தேவரீர் திருவுளப்படி அப்படியே செய்கிறோம்.

4-வது சிவ:—சுவாமி, வறுவல் கொஞ்சம் வையுங்கள்.

பரி:—ஹா ஹா! (வறுவல் வைத்தல்) சுவாமி! பின்னால் வடை பாயசம் லட்டெல்லா முண்டு. கொஞ்சம் எச்சரிக்கை செய்தேன். அவ்வளவு தான்.

4-வது சிவ:—பரிசாரகரே! எனக்கு ரசஞ்சாதமே வேண்டாம்.

5-வது சிவ:—மைசூர் ரசம்போலிருக்கு. கொஞ்சமாய் வாரும். வயிறு கொதிப்பாயிருக்கு.

3-வது சிவ:—கொஞ்சம் முந்தியே சொல்லியிருக்கக்கூடாதா?

பரி:—சுவாமி! இருக்கிற இடத்தில் நெருக்கி அடைத்தால் போகுது. என்ன முழுகிப்போச்சுது!

2-வது சிவ:—லட்டும் பாலக்காட்டுப் பணிதானோ?

பரி:—இல்லை, கோயமுத்தூர் மோஸ்தர். இந்தாரும் இன்னும் நாலைந்து போட்டுவையும். (வைத்தல்.)

2-வது சிவ:—இல்லை. இத்தனை வேண்டாம்.

பரி:—பாதகமில்லை. போட்டுவையுங்கள். பசிக்குதவும். மேலும் நாளைக்கு வெண்பொங்கல்தான்.

5-வது சிவ:—இன்றைக்கு வடையே ஒருதினுசு. நல்ல பாகமாய் இருக்குது.

பரி:—சுவாமி! நன்றாகப் பொரித்த வடையாய் இன்னும் பத்து வடை போடுகிறேன். சும்மா சாப்பிடுங்கள்.

[எல்லோரும் சாப்பிட்டாதல்]

2-வது சிவ:—சுவாமி! எழுந்திருக்கலாமோ?

சிறு:—தங்கள் சித்தம்.

[எழுந்திருந்து கைகால் அலம்பிக்கொண்டு சிறுத்தொண்டரை ஆசீர்வதித்தேகுதல்]

கெடாஅ வழிவந்த கேண்மையார் கேண்மை விடாஅர் விழையு முலகு.

சிறு:—இந்த புண்ணிய கைங்கர்யம் பகவானது திருவருளால் தடையின்றி நடைபெற்று வரவேண்டும். என் விருப்பமெல்லாம் அதுவே.

திரு:—சுவாமி! நமது காலத்திற் கப்புறமும் நமதுபுத்திரனும் இதை நழுவவிடாமல் நடத்திவருவதென்ருல் நாம் புண்ணியம் செய்தவர்களே யாவோம்.

சிறு:—கண்மணி! நம் புத்திரனை ஏதோ சாமான்யமாக எண்ணவேண்டாம். நமது சிரத்தையிலும் ஆயிரமடங்கு அன்போடுங்கூடி நடத்துவான் என்பதில் சந்தேகமே யில்லை. கொஞ்ச நேரம் பகவானைப் பஜிப்போம்.

[இருவரும் பாடுதல்]

[இராகம் பியாகு - ரூபகதாளம்.]

(1) *"வீடலால வாயிலாய் விழுமியோர்கள் நின்கழல்
பாடலால வாயிலாய் பரவநின்ற பண்பனே
காடலால வாயிலாய் கபாலிநின் கடிமதில் [யே.
கூடலால வாயிலாய் குலாயதென்ன கொள்கை

(2) குற்றநீ குணங்கள்நீ கூடலால வாயிலாய்
சுற்றநீ பிரானுநீ தொடர்ந்திலங்குஞ் சோதிநீ
கற்றநூற் கருத்துநீ அருத்த மின்ப மென்றிவை
முற்றுநீ புகழ்ந்து முன்னுரைப்பதென் முகம்ம
[னே."

* திருஞானசம்பந்தர் திருவாலவாய் தேவாரம்.

அங்கம். II

காட்சி. 1

இடம்:—கைலாயம்.

பார்வதிதேவியார்:—சுவாமி! என்ன ஏதோ சிந்தனையோடுகூடி இருக்கின்றீரே, அடியாளுக்கும் அது இன்னதென்று தெரியவொண்ணுதோ?

சிவ:—கண்மணி! உனக்கு மறைத்துவைக்கும் மர்மமும் உண்டோ? ஆனுல் பெண்களுக்குச் சொல்லத் தகுந்தனவற்றைத் தெரிந்து சொல்லவேண்டுமென நானே விதித்திருக்கின்றேன் என்ருலும், உன்னிடத்தில் நான் அவ்விதியைக் கையாடுவதில்லை என்பதை நீ இன்றளவுமுள்ள அனுபவத்தால் அறிந்திருப்பாய். நீ கேவலம் சாமான்ய மாதர்களைப் போன்றவளல்லள். பேதைமை யென்பதைப் பிறவியிலின்றே நீங்கியவள். பாவமென்பதைப் பழகியும் அறியாதவள். களங்கமற்றவள். உலகரக்ஷகனுகிய என்னையே துணையாகக்கொண்டவள். அதுவுமல்லாமல் என்னுடலத்திலேயே பாதியைக் கொள்ளைகொண்டு வசிப்பவள். நீ அறியாமல் இரகஸியமா யிருக்கவேண்டிய தொன்றுமில்லை. சரி, அதிருக்கட்டும், ஒரு விஷயம் உன்னைக் கேட்கவேண்டுமென்று எனக்கு விருப்பம். நாம் விதித்த முப்பத்திரண்டு தர்மங்களுள் இந்த கலியுகத்தில் பாவத்திற்கேதுவாக சிறிதுமில்லாத தர்மம் எதுவென்று நீ நினைக்கிருய்?

பார்:—[யோசித்தல்] சுவாமி! தாங்கள் குறிப்பாய் வேண்டியது அன்னதானமென்றே நான் நினைக்கிறேன். ஒருவகையிலும் அது தீமைக்கிடந்தாராததென்னலாம்.

வெண்பா

மானங் குலங் கல்வி வண்மை யறிவுடைமை
தானந் தவமுயற்சி தாளாண்மை—தேனின்
கசிவந்த சொல்லியர்மேற் காமுறுதல் பத்தும்
பசிவந்திடப் பறந்து போம்.
அல்லவா?

சிவ:—ஹா ஹா! வாஸ்தவந்தான்.

பார்:—நன்மையைத் தரத்தக்க எல்லாவற்றையும் பறந்துபோகும்படிச் செய்யும் இந்த பசியை, அன்னதானம் பறக்கச் செய்கின்றது. ஆத்மதிருப்தி உண்டாக்குகின்றது. வயிருற அன்னம் புசித்தபின், பின்னும் வேண்டும் எனும் ஆசையைக் கட்டோடே நீக்குகின்றது. இதனுல், அதிருப்தி அநர்த்தமாகின்றது. மற்றைய தர்மங்கள் அப்படியல்ல. அகிலமெல்லாவற்றையுந் தூக்கித் தந்தாலும் கொஞ்சமும் திருப்தி யடையாமல் கடல்மீதிலும் தங்கள் ஆணை செல்லவேண்டுமென்று நினைப்பார்கள். அளகேசன்நிகராக அரும்பொன்னை அள்ளிஅள்ளித் தந்தாலும் பின்னும் பெரும்பொருள் குவிக்கவேண்டுமென்று ரசவாத வித்தைக்கலைந்து நெஞ்சு புண்ணுவார்கள். நெடுநாள் உயிருடன் இருக்க வரம்பெற்றவருங்கூட பின்னும் இருக்கவேண்டுமென காயகற்பங்களைத் தேடி யலைவார்கள். ஆகையால் ஆசையையேதரும் மற்ற தருமங்களைவிட அன்னதானமே கிஞ்சித்தும் பாவத்திற் கனுகூல மில்லாததாகும்.

சிவ:—பிரிய சுந்தரி! அப்படியானுல் அன்னதானத்தில் லவலேசமும் ஆபத்தில்லை என்கிருயா?

பார்:—இதில் என்ன ஆபத்திருக்கப்போகிறது? என் சிற்றறிவுக்கு ஒன்றும் புலப்படவில்லை.

சிவ:—அப்படி ஒருகுற்றமில்லாதிருப்பின் அது சகல நன்மைகளையுந் தந்து இந்த மோக்ஷ சாம்ராஜ்யத்தை எளிதில் அடையச்சாதகமாயிருக்கவேண்டுமன்ரே? அப்படி அன்னதானத்திலேயே இங்கு வருபவர்கள் அதிகமாக இல்லையே?

பார்:—நாதா! ஆனுல் அதிலும் ஏதேனும் விசேஷம் இருக்கலாம். தாங்களே சொல்லியருளல் வேண்டும்.

விழையார் விழையப் படுப பழையார்கட் பண்பிற் றலைப்பிரியா தார்.

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

3. ஸ்ரீ வராஹாவதாரம்

SRI VARAHAVATHARAM

முன் ஸஞ்சிகைகளில், மத்ஸ்ய, கூர்ம அவதாரங்களின் மகிமை கூறப்பட்டுள்ளது. எவ்வித நற்குணங்கள் பொருந்தியிருந்தாலும், பாகவதோத்தமர்களான பிரம்ம ரிஷிகள் முதலானோரிடத்தில் வணக்கமற்று நடப்போருக்கு எவ்வித பெருமையும் நசித்து, அவர்கள் அதோகதியடைந்து துக்கமுறுவார்களென்பதை நன்கு விளக்கக்கூடிய வராஹ அவதாரக் கதையைக் குறிப்பிடுவோம்.

பிரம்மதேவனது மானஸ புத்திரர்களான ஸனகாதி யோகீசுவரர்கள் நால்வரும், ஒரு சமயம் ஆகாசமார்க்கமாய் எல்லா லோகங்களிலும் ஸஞ்சரித்துக்கொண்டு, ஸ்ரீமந் நாராயணனைத் தரிசிக்கும் பொருட்டு, வைகுந்தம் என்னும் திவ்விய லோகத்தை யடைந்தனர். வெகு விருத்தர்களானாலும், ஐந்து வயது பாலர்கள் போன்ற ரூபத்தோடு கூடினவர்களாயும், திகம்பரர்களாயுமுள்ள அவர்கள், வாசாமகோசரமான எவ்வித ஐசுவரியங்கள் நிறைந்தும், ரத்தின வைடூர்யாதிகளால் இழைக்கப்பட்டுமுள்ள ஏழு பிராகாரங்கள்கூடிய பரமபதத்தில் பிரவேசிக்கத் தொடங்கினர். ஒவ்வொரு பிராகாரத்திலுமுள்ள துவார பாலகர்களை லக்ஷியஞ் செய்யாமல் பிரவேசித்து, யாதொரு தங்குத் தடையுமின்றி, ஆறு பிராகாரங்களைத் தாண்டிச் சென்றனர். ஏழாவது வாயிலில், பகவானுக்கு அந்தரங்க பக்தர்களும், வெகு பராக்கிரமம், தேஜஸ் இவை பொருந்தியுமுள்ள ஜயன், விஜயன் என்ற இருவரும் காவல் செய்துகொண்டிருந்தனர். ஸனகாதிகளின் நிலைமையும், ஒருவரையும் கேட்காமல் அவர்கள் உள்ளே பிரவேசிக்கும் தைரியத்தையும் கண்டு சினந்து, ஜயவிஜயர்கள் அவர்களைப் பிரம்பினால் தடுத்தார்கள்.

ஹரியை ஸேவிக்கவேண்டுமென்று தீவிரமான ஆஸ்தை கொண்டுள்ள ஸனகாதிகள், தங்கள் ஆசைக்கு இவ்வாறு தடை ஏற்பட்டதுபற்றிக் கோபமடைந்து, அவர்களை நோக்கி, "எல்லாப் பிராணிகளிடத்திலும் ஸமபுத்தி யுள்ளவர் பகவான் அவ்வாறே பாகவதர்களும் ஜீவகாருண்யம் நிறைந்து, எல்லோரிடமும் ஸம திருஷ்டி யுள்ளவர்கள். இவ்வாறிருக்க, உங்களுக்கு மட்டில், 'பகவானைத் தரிசிக்கச் சிலர் பிரவேசிக்கலாம், மற்றும் சிலர் கூடாது' என்கிற விஷம புத்தி உண்டானது எங்ஙனம்? எல்லா ஜகத்துக்கும் ஆதாரனையும், ஸர்வ லோகங்களைக் குக்ஷியிலடக்கி இரட்சித்துவரும் பரமபுருஷனுக்கு யாரால் தீங்கு ஏற்படக்கூடும்? அவருக்கு என்ன பயம் உண்டாகும்? நித்திய ஸூரிகள் போன்ற உங்களுக்கு இவ்வித பேத புத்தி உண்டானது தகாது. ஆகையால், நீங்கள் இந்த வைகுண்டத்திலிருந்து நீங்கி, காமம், குரோதம், லோபம் இவற்றால் நிரம்பிய கீழ் லோகங்களை யடையக் கடவீர்கள்" என்று சபித்தனர்.

வெகு கோரமானதும், ஒருவராலும் நிவர்த்தி செய்ய முடியாததுமான இவ்வித பிரம்ம சாபத்தைக் கேட்ட மாத்திரத்தில், ஜய விஜயர்கள் நடு

நடுங்கி, அந்த ரிஷீசுவரர்களின் பாதங்களில் ஸாஷ்டாங்கமாய் வணங்கிப் பிரார்த்திக்கலானார்கள்.—"மஹா யோகிகளே, நாங்கள் செய்த அபராதம் மிகப் பெரிதே. அதற்குத் தக்கவாறு எங்களுக்குத் தண்டனை ஏற்படுவது நியாயமே. அதைத்தடுக்க ஒருவராலும் முடியாது. ஆனால், நாங்கள் எவ்வித இழிவான ஜன்மங்கள் எடுத்து வருந்தினாலும், வைகுந்த நாதனை பகவானது ஸ்மரணத்தை போக்கக்கூடிய மோஹமானது எங்களுக்கு ஏற்படாமலிருக்கும்படி நீங்கள் கருணை கூர்ந்து அனுக்கிரகிக்க வேண்டும்" என்று அவர்கள் கேட்டுக் கொண்டிருக்கையில், பக்தபராதீனரான பரந்தாமன், ஸ்ரீ லக்ஷ்மீ சமேதராய் ஸனகாதிகளுக்குக் காட்சி யளித்து அவர்களது கோபத்தைத் தணிக்கக் கருதினவராய், திவ்விய பீதாம்பரம் தரித்து, ஸர்வாலங்கார பூஷிதராய் அங்கு எழுந்தருளினர். எல்லா ஸௌந்தரியங்களுக்கும் நிதியான பரமபுருஷனைக் கண்டதும், ஸனகாதிகள் ஸாஷ்டாங்கமாய் வந்தனம் செய்து, பேரானந்தத்தில் மூழ்கினவர்களாய், அவரைப் பலவாறு துதித்துப் புகழ்ந்தனர்.

அதுகேட்டு மகிழ்வடைந்த பகவான், 'எனது பாரிஷதர்களான இவ்விருவரும் உங்களுக்குச் செய்துள்ள அபராதத்திற்கு, நீங்கள் விதித்துள்ள தண்டனை தகுதியானதே. நான் அதை ஆமோதிக்கிறேன். பிராமணர்கள் எனக்குப் பெருந் தெய்வம். ஆனால், நான் உங்களைக் கேட்டுக்கொள்வது ஒன்றுண்டு. உலகில் ஏவுகாரன் செய்யும் குற்றம் எஜமானனைச்சார்ந்ததாக ஆகுவதுபோல், எனது துவாரபாலகர்கள் உங்கள் விஷயத்தில்செய்துள்ள அதிக்கிரமும்நான் செய்ததாயிற்று. நீங்கள், சண்டாளர்முதலானஎல்லோரையும்பரிசுத்தமாக்க வல்லவர். உங்கள் போன்றவர்களாலேயே எனது கீர்த்தியும், தேஜஸும் உலகில் வியாபித்து வருகின்றன. உங்கள் விஷயத்தில் குற்றம் செய்யும் எனது கைகளையும் அறுத்துவிடத் தயாராயிருக்கிறேன். உம்போன்ற பெரியோர்களின் பாததூளியை மிகப் பாவனமாய் நினைத்து, அதைச் சிரசில் வகித்துத் தன்யனாக விரும்புகிறேன். நான் விப்ரபராதீனன். எவன் அந்தணர்களை வாஸுதேவன் என்று நினைத்துப் பூஜிக்கிறானோ, அவனுக்கு நான் அடிமை. இவ்விதம் எனது மனோபாவம் நன்கறியாத இந்த ஜய விஜயர்கள் உங்கள் விஷயத்தில் தவறி நடந்ததுபற்றி, அவர்கள் தண்டிக்கப் படவேண்டியதுதான். ஆனால், அவர்கள் அதை யனுபவித்து விட்டுச் சீக்கிரம் என்னையடையும்படி நீங்கள் அனுக்கிரகிக்க வேண்டும்" என்று கேட்டுக்கொண்டார்.

இதைச் செவியுற்ற ஸனகாதி யோகிகள் பகவானுடைய ஸௌலப்யம், வணக்கம், விப்ரவிசுவாசம் முதலிய கல்யாண குணங்களில் மனம் ஈடுபட்டு, அவரை வெகுவாறு சிலாகித்தனர். மேலும், அவர் தமது அபார கருணையைக் கொண்டு பக்தர்களான ஜய விஜயர்களைச் சீக்கிரம் அச்சாபத்திலிருந்து மீட்டு, தம் பாதகமலங்களைச் சேரும்படி செய்யவேண்டு மென்று கருதுகிறார் என்பதை உணர்ந்து, ஸனகாதிகள் அவரை வணங்கி, 'பெருமானே! தர்மரக்ஷணார்த்தம் எங்களிடம் தேவரீர் காட்டியுள்ள வணக்கமும், கௌரவமும் மிக வியக்கத்தக்கனவே! இந்த ஜய விஜயர்களுக்குத் தேவரீர் எந்தத் தண்டனை விதித்தாலும் நாங்கள் அதை ஒப்புக்கொள்ளுகிறோம்; அல்லது, இவர்கள் நிரபராதிகளாயிருந்து, நாங்கள் அவர்களைச் சபித்தது அதர்மம் என்றால் எங்களுக்குத் தகுந்த சிக்ஷை செய்யக்கடவீர்' என்று பிரார்த்தித்தனர்.

இதுகேட்ட பகவான், "யோகி சிரேஷ்டர்களே! நீங்களிட்ட சாபம் நான் கொடுத்தது போலவே. இவ்விருவரும் துஷ்ட ஸ்வபாவமுடைய அஸுர ஜன்மத்தை யடைந்து, சீக்கிரம் மீண்டும் என்னை யடைவார்கள்' என்று திருவாக்கருளினர். இதனால் ஸனகாதிகள் ஸந்தோஷ பரிதர்களாய், நேத்திரானந்தகரனான திருமாலைக் கண்ணாறக்கண்டு அனுபவித்து, அவரைப் பிரதக்ஷிணம் செய்து வணங்கி, விடைபெற்றுச் சென்றார்கள். பிறகு பகவான் துவார பாலகர்களை நோக்கி, 'நீங்கள் கீழ் லோகத்தை யடையுங்கள்; பயப்பட வேண்டாம். உங்களுக்கு மங்கள முண்டாகட்டும். நான் பிராமண சாபத்தை நீக்க வல்லவனாயினும், அவ்வாறு செய்வதில் எனக்கு விருப்பமில்லை. மேலும், ஏற்கெனவே ஒருசமயம் நான் யோக நித்திரை செய்யுங்கால், நீங்கள் ஸ்ரீ மகாலக்ஷ்மியை உள்ளே வராமல் தடுத்தது பற்றி, அவள் கோபங்கொண்டு உங்களைச் சபித்திருக்கிறாள். அதைஅனுசரித்தே ஸனகாதிகளின் சாபம் இப்போது ஏற்பட்டிருக்கிறது. ஆகையால், நீங்கள் அஸுர ஜன்மத்தை யடைந்து, என்மீது கொடிய துவேஷம் பாராட்டி மாண்டு, இச் சா

பத்திலிருந்தும் நீங்கினவர்களாய்ச் சொற்ப காலத்திலேயே என் சமீபம் வருவீர்களாக!'' என்று கூறி, பரஞ்சோதி மயமான தமது ஸ்தானத்தை யடைந்தார். ஜய விஜயர்களும் தங்கள் திவ்விய தேஜஸ் எல்லாம் மங்கினவர்களாய், அகங்காரம் ஒழிந்து, வைகுண்டத்திலிருந்து கீழே விழுந்தனர். இதைக் கண்ணுற்ற தேவாதிகள் 'ஹா ஹா!' என்று கூவித் துக்கித்தனர்.

பூலோகத்தில் காசியபர் என்ற மகா முனிவர் இருந்தார். தக்ஷப் பிரஜாபதியின் புத்திரியான திதி தேவியானவள் அவரது பத்தினி. ஒரு சமயம் அவள், சாயங்கால வேளையில் அக்கினி ஹோத்திரம் செய்து கொண்டிருக்கும் தனது பர்த்தாவை வணங்கி, தன்னுடன் சுகித்து, தனக்கு ஓர் உத்தம புத்திரனுண்டாகும்படி அனுக்கிரஹிக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள். அதுகேட்ட காசியபர், சிவபெருமானது பூத கணங்கள் ஸஞ்சரிக்கக்கூடிய சந்தி வேளையில் அவ்வாறு செய்வது சரியல்லவென்றும், ஒரு முகூர்த்தம் கடந்து அவ்வாறு தாம் அனுக்கிரகிப்பதாயும் சொன்னார். திதியோ அதற்கு இணங்காமல், அக்ஷணமே தனது மனோரதத்தைப் பூர்த்தி செய்யவேண்டுமென்று அவரை நிர்ப்பந்தித்தாள். காசியபரும் அவளைத் திருப்திசெய்து விட்டு, அவளை நோக்கி, 'தோஷயுக்தமான சந்தியா காலத்தில், எனது இஷ்டத்துக்கு மாறாக நிர்ப்பந்தித்து நீ அடைந்துள்ள இந்த கர்ப்பத்தால் மிகத் துஷ்டர்களான இரண்டு பிள்ளைகள் பிறப்பார்கள். இவர்கள் வெகு பராக்கிரம சாலிகளாய், மூன்று லோகங்களையும், லோக பாலர்களையும் இம்சித்து, அஸுர ஸ்வபாவமுள்ளவர்களாய் அதர்மத்தைக் கைக்கொண்டு நடப்பார்கள்; இறுதியில் ஸர்வலோக சரண்யனான திருமாலால் சங்கரிக்கப்படுவார்கள். ஆனால், இவர்களிலொருவனுக்குப் பாகவதோத்தமனான புதல்வன் உண்டாவான். ஸ்ரீ ஹரியினிடம் சலனமற்ற பக்தியோடு கூடிய அம்மகான் நிகரற்ற கியாதியும், அளவற்ற பேரானந்தத்தையு மடைவான். அவனால் அஸுர குலத்துக்கே வெகு மேன்மையுண்டாகும்'' என்று கூறினார்.

அவ்வாறே திதிதேவி கர்ப்பந்தரிக்க, ஜயவிஜயர்கள் அதில் அனுப்பிரவேசித்தனர். இக்கர்ப்பத்தின் தேஜஸாலும், பிரியமும் எங்கும் பரவி, உலகங்களெல்லாம் இருளடையும்படி செய்தது. பகல் ராத்திரி என்ற பேதமில்லாமற் போயிற்று. கர்மங்கள் நசித்தன. தேவர்கள் இதன் காரணம் அறியாது திகைத்து, பிரம்மதேவனிடம் சென்று முறையிட்டனர். அவர் தியானத்தால் எல்லாமறிந்து, ஜயவிஜயர்களுக்கு ஏற்பட்ட சாபத்தையும், அவர்கள் வெகு பல பராக்கிரமம் வாய்ந்த அஸுரர்களாய்ப் பிறந்து உலகங்களை உபத்திரவிக்கப் போவதையும், இறுதியில் ஸ்ரீமந் நாராயணனால் அவர்கள் சங்கரிக்கப்படுவார்கள் என்பதையும் எடுத்துக்கூறி, அவர்களைத் தேற்றரவு செய்து அனுப்பினார்.

திதியின் கர்ப்பமானது நூறுவருஷ காலத்தில் பூர்ணமாகி, பிறகு இரண்டு பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்கள் பிறந்த காலத்தில் பூமியிலும் மற்ற உலகங்களிலும் பலவித உத்பாதங்கள் தோன்றின. பூகம்பம் உண்டாயிற்று. திக்குகளெல்லாம் ஜ்வலித்தன. இடிகள் விழுந்தன. பெருங் காற்றுகள் வீசின. சமுத்திரங்கள் கொதிப்பெடுத்தன. நாய் முதலிய பிராணிகள் அழ ஆரம்பித்தன. மேகங்களிலிருந்து இரத்த மாம்ச மாரிகள் பொழிந்தன. இவற்றை யெல்லாம் கண்ட ஜனங்கள் ஜகத்துக்கே பிரளயம் வந்துவிட்டதோ என்று பயந்து தவித்தனர். அப்புத்திரரிருவரும் மகாபலம் பொருந்தியவர்களாய், தங்கம்போல் ஜ்வலிக்கும் காந்தியுடையவர்களாய், நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்தனர். காசியபர் தமது மூத்தபிள்ளைக்கு ஹிரண்யகசிபு என்றும், இளையவனுக்கு ஹிரண்யாக்ஷன் என்றும் நாமஞ் சூட்டினார்.

ஹிரண்யகசிபுவானவன் தன்சொந்த தேஜஸாலும், கொடிய தபோ பலத்தாலும் லோகங்களையெல்லாம் தன் வசமாக்கி, தேவர்களையும், சாதுக்களையும் இம்சித்து வந்தான். ஹிரண்யாக்ஷன் கதா யுத்தத்தில் கைதேர்ந்தவனாய், எங்கும் தட்டுத் தடையில்லாமல் ஸஞ்சரித்து, லோகோபத்திரவம் செய்து, அதர்மத்தில் தமையனுக்குத் தக்க உதவி புரிந்துவந்தான். சொர்க்காதி லோகங்களிலுள்ளோர் இவனது பராக்கிரமத்தைக் கண்டு நடுங்கினர். இந்திராதி தேவர்கள் பயந்து அவன் கண்ணிற்படாமல் ஓடி ஒளியத் தலைப்பட்டனர். இதனால் ஹிரண்யாக்ஷன் அட்டகாசஞ்செய்து, மதோன்மத்தனாய், ஒருசமயம் ஜலக்கிரீடை செய்யும்பொருட்டு, அனேக ஜலஜந்துக்கள் நிரம்பிய சமுத்திரத்தில் பிரவேசித்தான். அங்கு

அநேக வருஷங்கள் ஸஞ்சரித்து, வாயுவினால் எழுப்பப்பட்ட பெரும் அலைகளைத் தன் கதையால் அடித்து அடக்கி, விபாவரி யென்னும் வருணனது பட்டண மடைந்தான். அங்கு அவன் வருணனை நோக்கி, "பூர்வம் தைத்தியர் தானவர் முதலானோரை ஜயித்து, லோகபாலர்களுக்கு அதிபதியாய் விளங்கும் கர்வமுடைய வருணனே! இப்போது எனக்கு யுத்தம் கொடுத்து, உன் பிரபாவத்தை ஸ்திரப்படுத்துவாய்" என்றான்.

இது செவியுற்ற வருணனுக்குப் பெருங்கோபமுண்டாயிற்று. என்றாலும், அதை அவன் ஒருவாறு அடக்கிக்கொண்டு, 'அஸுர சிரேஷ்டனே, இப்போது நாங்கள் யுத்தஞ் செய்வதில் உற்சாகமற்றவர்களா யிருக்கிறோம். நீயோ யுத்தத்தில் மிகசசாமர்த்திய முள்ளவன். உனக்குச் சமானமாய்ப்போராடி, உன்னைக் களிப்பிக்க வல்லவன் ஜனார்த்தன பகவானைத் தவிர வேறொருவனுமில்லை. ஆகையால் நீ அவரையடைந்து, உன் யுத்தத்தினவைத் தீர்த்துக் கொள்வாயாக! அவர் சாதுக்களை ரக்ஷிப்பதற்கும், உன்னைப்போன்ற துஷ்டர்களை யழிப்பதற்தும் அவதாரங்கள் எடுக்குந் தன்மை யுள்ளவர். நீ அவராலே அடிபட்டு விழுந்து அழியப்போகிறாய்' என்று பதிலளித்தான். இவ்வாறு வருணன் சொன்னதின் பின்பாகத்தை லட்சியம் செய்யாது, ஹிரண்யாக்ஷன் புறப்பட்டு, நாரத ரிஷியிடமிருந்து விஷ்ணுவின் தத்கால கதியை அறிந்து, பாதாளலோகஞ் சென்றான்.

இங்ஙன மிவ்வாறிருக்க, பூர்வம் பிரம்மதேவனால் தாம் சிருஷ்டித்துள்ள லோகரக்ஷணத்தின் பொருட்டு ஏவப்பெற்ற ஸ்வாயம்புவ மனுவானவர் பிரமனை வணங்கி, "ஸர்வலோக பிதாவே, உமக்கு சுசுருஷை செய்யத் தயாரா யிருக்கிறேன். நான் என்ன செய்யவேண்டுமென ஆக்ஞாபிப்பீராக!" என்று பிரார்த்தித்தார். இதனால் பிரம்மதேவன் ஆனந்தமடைந்து "உத்தம புத்திரனே, எனது பிரஜைகளைத் தர்மமாய்ப் பரிபாலிப்பதுதான் நீ எனக்குச் செய்யக்கூடிய சுசுருஷையாகும். அவ்வாறு செய்தால் யஞ்ஞமூர்த்தியான ஜனார்த்தன பகவானும் உனக்கு உதவி, அருள்புரிவார்" என்று சொன்னார். இது செவியுற்ற ஸ்வாயம்புவ மனுவும் 'பிரபுவே, அவ்வாறு செய்யச் சித்தமாயிருக்கிறேன். ஆனால் நானும், உமது பிரஜைகளும் இருக்கத்தக்க ஸ்தானத்தைக் காண்பித்தருள்வீராக! எல்லாப் பிராணிகளுக்கு மிருப்பிடமான பூமியானது பிரளயகால ஜலத்தில் மூழ்கி யிருக்கிறதே. இதை உத்தாரணம் பண்ண யத்தினம் செய்யவேண்டும்" என்று கேட்கலானார்.

பிரமனும், முன்னர் உத்தாரணம் செய்யப்பட்ட பூமியானது மீண்டும் அகாரணமாய்ப் பாதாளத்தில் மூழ்கியிருப்பதைப் பார்த்து, யாது செய்வதென்று அறியாது, தனது உற்பத்திக்குக் காரணரான ஆதிபுருஷனைக் குறித்துத் தியானத்திலாழ்ந்து பிரார்த்தித்தார். அந்தக்ஷணத்தில் அவரது நாசிகையிலிருந்து அங்குஷ்டப் பிரமாணமான ஒரு சிறு சுவேதவராகம் வெளிவந்தது. நொடிப் பொழுதில், அது ஒரு பர்வத சிகரம் போல் பருத்து, திவ்விய தேஜஸுடன் விளங்கிற்று. இந்த ஆச்சரியத்தைக் கண்ணுற்ற பிரமாதி மனுக்கள் திகைத்திருக்கையில், அந்த வராகம் இடி முழக்கம்போல் கர்ஜிக்க ஆரம்பித்தது. அது கேட்ட சத்தியலோகாதி ஸப்த உலகத்தோரும் களிப்படைந்து, அவ்வாறு லோக ஸம்ரக்ஷணத்தின் பொருட்டு அவதரித்துள்ள யஞ்ஞமூர்த்தியான பரம புருஷனைப் பலவாறு துதிக்கத் தொடங்கினார்கள். இதனால் திருப்தியடைந்த வராக ரூபியானவர் தன் வாலை உயரத் தூக்கிக் கொண்டும், பிடரி மயிர்களை உதரிக்கொண்டும் உயரக்கிளம்பினார். மீண்டும் தமது மூக்கினால் பூமியிருக்குமிடத்தை முகந்து, பயங்கரமான கோரைப் பற்களோடு கூடினவராய் ஜலத்தில் பிரவேசித்தார். அவரது பிரம்மாண்ட சரீரத்தால் பிளக்கப்பட்ட ஜலங்களோடு கூடிய சமுத்திரமானது அல்லோல கல்லோலப்பட்டுச் சப்திக்கலாயிற்று. பின்னர் பகவான், சர்வ ஜீவப் பிராணிகளுக்கும் ஆதாரமாயுள்ள பூமியானது பாதாளத்தில் இருக்கக்கண்டு, அதைத் தமது கோரைப் பற்களினால் தூக்கி எடுத்துக் கொண்டு, வெளிப் புறப்பட்டார். அச்சமயம் ஹிரண்யாக்ஷன் தன் கதையைச் சுழற்றிக் கொண்டு வந்து, ஹரியை நோக்கி, 'வாராய் மூடனே! வனசரமான மிருகமே! இந்தப் பூமியானது பிரம்மதேவனால் பாதாள லோகவாசிகளான எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றது, ஆகையால், இதை இங்கு விட்டு விட்டுப்போ. இல்லையேல், நீ க்ஷேமமாய் உன்னிருப்பிடம் போகமாட்டாய்' என்று இடிமுழக்கம் போல் அதட்டிக் கேழ்க்க, பகவான் அதை லக்ஷி

யம் செய்யாது, பூமியைத் தூக்கிக்கொண்டு ஜலத்தின்மீது வைத்து, தம் ஆதார சக்தியால் அது கீழ் மூழ்காவண்ணம் நிற்குமாறு செய்தார். அப்போது பிரம்மாதி தேவர்கள் புஷ்பமாரி பெய்து அவரைப் போற்றிப்புகழ்ந்தனர்.

ஹிரண்யாக்ஷனும் அவரை விடாது பின் தொடர்ந்தது வந்தான்.

அச்சமயம் பகவான் அவனை நோக்கி, 'நான், ஒரு வனசரமான மிருகமென்று இகழ்ந்து கூறினாய். அது வாஸ்தவமே. உன்னைப்போலொத்த நாய்களைத் தேடிக் கொண்டிருக்கிறேன். பாதாளவாசிகளுக்கு அதிபதியான நீ என்னைச் சங்கரித்து விட்டு, உங்களுக்குரியதாய்ச் சொல்லும் பூமியை எடுத்துக் கொள்" என்று சொல்லவே, ஹிரண்யாக்ஷனுக்கு அடங்காக் கோபம் பிறந்தது. உடனே அவன் மகாசர்ப்பம் போல் சீறி, பெருமூச்சுவிட்டு, தன் கதையால் பகவானை அடித்தான். அதை அவர் தடுத்துத் தள்ளினார். பிறகு இருவருக்கும் பெரும் போராட்டம் நேர்ந்தது. இருவரும் வெகு தீவிரமாய் கதாயுத்தம் செய்தனர். இதைப் பார்க்க வந்திருந்த பிரம்மாதி தேவர்கள் ஆதிவராக மூர்த்தியைத் துதித்து, அஸுர பலம் விருத்தியடையக் கூடிய ஸந்தியா காலம் வருமுன் அத்துஷ்டனைச் சங்கரிக்க வேண்டுமென்று ஞாபகப்படுத்தினர். உடனே பகவான் அவனைக் கபோலத்திலடித்தார்; ஹிரண்யாக்ஷனும் பகவானுடைய கதையானது அவர் கையிலிருந்து நழுவி விழும்படி அடித்தான். பிறகு கொஞ்ச நேரம் அவரை அடிக்காமல் நின்றான் இவ்வாறு அவன் தர்ம யுத்தஞ் செய்ததற்கு பகவான் அவனை மெச்சினார். உடனே அவர் தமது சக்கரத்தை ஸ்மரித்தார். அக்கணமே அது அவர் கையில் தோன்றியது.

இதுகண்ட ஹிரண்யாக்ஷன், வெகு சினங்கொண்டு, 'இதோ நீ மாண்டாய்' என்று சொல்லிக்கொண்டு பகவானை வெகு தீவிரமாய் அடித்தான். பகவானும் தமது இடது காலால் அதை உதைத்துத் தள்ளிவிட்டு, 'உன் ஆயுதத்தையெடுத்துக்கொள்' என்று கூறினார். உடனே அதைமீண்டும் அவன் அவர்மீது பிரயோகித்தான். அதை ஹரியானவர் பிடித்துக்கொண்டார். இதுகண்டு ஹிரண்யாக்ஷன் சினந்து ஒரு கூர்மையான சூலாயுதத்தை எடுத்து, வேகமாய்ப் பிரயோகித்தான். அதைப் பகவான் தமது சக்ராயுதத்தால் துண்டு துண்டாய்ச் சேதித்துவிட்டார். உடனே அவ்வஸுரன் தனது முஷ்டியால் பகவான்மார்பில் ஓங்கியடித்துவிட்டு, ஆகாயத்தில் மறைந்து அஸுர மாயைகள் செய்து, புழுதி, கற்கள் இவற்றை வர்ஷித்தும், பெருங் காற்றுகளைக் கிளப்பியும், மேகங்களிலிருந்து இரத்தங்கள், மல மூத்திராதிகளை வருஷித்தும், இன்னும் பலவிதமாயும் உபத்திரவித்தான். அப்போது பகவான் சுதர்சனாஸ்திரத்தைப் பிரயோகித்து அவற்றையெல்லாம் வீணாக்கினார். மீண்டும் அவன் வந்து அவரை முஷ்டியால் அடித்தான். உடனே பகவான் தமது கையால் அவன் கன்னத்தில் ஓங்கி ஒரு அறை அறைந்தார். அவனது கண்கள் பிதுங்கின; கைகால் கழுத்து முதலிய அங்கங்கள் சூர்ணமாயின. வேரறுபட்ட மரம்போல் அவன் கீழே விழுந்து உயிர் துறந்தான். பிரம்மாதி தேவர்கள் பகவானைப் பலவாறு புகழ்ந்து துதித்தனர். பகவானது திருக்கரங்களால் மரணம் நேர்ந்தது ஹிரண்யாக்ஷனது பெரும் பாக்கியமென்றும் கொண்டாடினர்.

கிருபா நிதியான திருமால் இவ்வாறு பூமியை உத்தாரணம்பண்ணி, கொடிய அரக்கனை ஹிரண்யாக்ஷனைச் சங்கரித்து, அந்தர்த்தானமானார். துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலன ரூபமாய் உலகில் தர்மத்தை ஸ்தாபித்து, ஸர்வப் பிரஜைகளையும் ரக்ஷிக்கவல்ல பரமபுருஷன் ஸதா ஜாகரூகராய் இருந்து, அவ்வப்போது வேண்டிய அவதாரங்களெடுத்துத் தம் ஸங்கற்பத்தை நிறைவேறச் செய்கிறார் என்பதும், தாம் பக்த பராதீனன் என்பதை ஆங்காங்கே ஸௌலப்யம், வணக்கம் முதலிய கல்யாண குணங்களால் பாமரர்களும் நன்கு அறியுமாறு குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார் என்பதும் இப்புண்ணிய அவதார கதையால் வெளியாகின்றன.

அளகநந்தா:—கங்கையின் உபநதிகளில் ஒன்று, ஹிமாலயப் பிரதேசத்தில் உற்பத்தியாகும் விஷ்ணு கங்கை, தௌலீகங்கை என்ற இரண்டும் சேர்ந்தானது. தென்மேற்கு முகமாயோடி, தெஹ்ரீ ராஜ்யத்தின் எல்லைப்புறத்தில் தேவப்ரயாகை என்னுமிடத்தில் பாகீரதி நதியில் விழுகிறது. அப்பால் இது கங்கையெனப் பேர்பெறுகின்றது. ருத்ர ப்ரயாகையில் மந்தாகினி என்ற நதி அளகநந்தாவில் விழுகிறது.

செய்தேமஞ் சாராச் சிறியவர் புன்கேண்மை யெய்தலி னெய்தாமை நன்று.

வர்த்தமானக் குறிப்புகள்

NEWS AND NOTES

ஒரு பெரியாரின் அநாயாஸ மரணம் :—கடலூர் ஜில்லா, செஷன்ஸ் ஜட்ஜாகவிருந்த ஸ்ரீமான் எ. எஸ்.பாலசுப்பிரமணிய ஐயர் அவர்கள், நாளது பங்குனி மீ 19உ மாலை 6-30-மணிக்கு அனுஷ்டானம்செய்து கொண்டிருக்கையில் திடீரென மரணமடைந்து விட்டதாக கேழ்வியுற்று துக்கக் கடலி லாழ்ந்தோம். இப்பெரியாரின் அருங் குணங்களைப்பற்றி எழுதி முடியாது. இவர் போன்ற குண மணிகள் நந்தமிழ் நாட்டில் மிகச் சிலரே; மிகவும் நேர்மையான நடத்தையுடையவர்; தாய்ப்பாஷைகளின் அபிவிருத்தியில் அக்கரைகொண்டவர். மகா தருமிஷ்டர்; மிக்க சாந்த குணமுடையவர் : கருமமே பெரிதென மதித்திருந்தவர் ; மயிலையில் அநேகமாய் எல்லா பொது ஸ்தாபனங்களின் நிர்வாகத்தைசீராய் நடத்தியவர்; நீதிபரிபாலன இலாகாவிற்கே ஓர் அணிகலனுயிருந்தவர்; காலஞ்சென்ற ஸ்ரீமான் ஆ வீ. கஸ்தூரி ரங்கய்யர் அவர்களின் அருஞ் சகோதரர். இவ் அரிய சகோதரர்கள் எமக்குச் செய்திருக்கும் உதவிகள் என்றும் மறக்கற்பாலதன்று. இப்பெரியாரின் மரணம் நமக்கு மாத்திரமல்ல, தமிழ் நாட்டிற்கே ஒரு பெரிய நஷ்டத்தையுண்டு பண்ணிவிட்டது. ஸ்ரீமான் ஐயரவர்கள் உத்தியோகம் வகித்த ஒவ்வோர் இடமும், அதிலும், கடலூர் பட்டணம் அவர் மரணத்தினுல் ஏற்பட்ட துக்கத்தில் ஆழ்ந்திருக்கிறதென்று படித்தபோது இவர் அருங்குணங்கள் ஆங்காங்கு போற்றப்பட்டிருப்பது நன்கு விளங்கும். இவரது குடும்பத்தாருக்கு எமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேம்.

"நாட்டுத் தொழில்களை ஆதரியுங்கள்":—ஸ்ரீமான் பாண்டியா என்ற காங்கிரஸ்காரர் இங்கிலாந்தில் நடப்பதுபோல் இந்தியாவிலும் நாட்டுத் தொழில்களை ஆதரிக்கும்படி ஒவ்வொரு தபாலிலும் முத்திரை போட வேண்டுமென்று சொன்ன யோசனையை இந்தியத் தபால் இலாகா உதவி டைரெக்டர் ஜெனரல் ஒப்புக்கொண்டு, சில முக்கியமான தபாலாபீசுகளில் அ[illegible]க்க ஏற்பாடு செய்வதா[illegible]. சீக்கிரத்தில் இந்த ஏற்பாடு இந்தியா நெடுக அனுஷ்டானத்துக்கு வருமென்று தெரிகிறது.

பிரிட்டனில் மோட்டார் வண்டிகள்:—முன் வருஷத்தை விட சென்ற வருஷம் 11000—மோட்டார்கள் அதிகமாக இருந்தனவாம். உலகிலேயே மோட்டார் பெருத்த தேசங்களுள் பிரிட்டன் மூன்ருவதாக இருக்கிறது. முதலாவது, யுனைடெட் ஸ்டேட்ஸ், இரண்டாவது கனடா தேசம்.

சணல் உற்பத்தி :—உலகத்தில் சணல் உற்பத்தி பூராவும் வங்காளத்திலேயே நடக்கிறது. ஹூக்ளி ஆற்றங்கரையோரமாக 79-ஆலைகள் இருக்கின்றன. 1915-ம் வருஷத்தில் 60-கோடியும், 1920-ல், 40-கோடியும், 1924-ல் 25கோடியும், ஐரோப்பியமுதலாளிகள் இலாபமடைந்திருக்கின்றனர். குறைந்த பக்ஷம் 100 க்கு 90 வீதம் லாபம். இவ்வாலைகளில் 3-லக்ஷம் தொழிலாளர் வேலை செய்கின்றனர். மாதம் சராசரி 1-பவுன் தான் சம்பளம். வாரந்தோறும் தொழிலாளிகள் 38-மணி நேரம் வேலைசெய்திருக்கின்றனர்.

* * *

கைத் தறி :—நமது சென்னை ராஜதானியில் இருந்துவரும் மொத்த கைத்தறிகள் 1,69,403 அவைகளின் ஜில்லாவாரிக் கணக்கு வருமாறு:—

குண்டூர்	14974	கடப்பை	6[illegible]51
வட ஆற்காடு	12743	திருச்சி	5898
திருநெல்வேலி	11394	கஞ்சம்	5582
சேலம்	10841	பல்லாரி	5102
செங்கல்பட்டு	10600	கோதாவரி	5078
நெல்லூர்	10494	இராமநாதபுரம்	4989
மலையாளம்	7886	அனந்தபூர்	4841
கோயமுத்தூர்	7714	தென் ஆற்காடு	4646
விசாகபட்டணம்	7438	கர்நூல்	4419
மதுரை	6493	சித்தூர்	386[illegible]
கிருஷ்ணு	6349	தென் கன்னடம்	1528
பங்கனபள்ளி	929	மதராஸ்	1527
நீலகிரி	....	எஜென்ஸி	
தஞ்சாவூர்	6299	டிராக்ட்	1526

* * *

உலகில் பெரிய மணி:—ருஷியா தேசத்தின் பிரதான நகரமாகிய **மாஸ்கோ** எனும் ஊரில் பெரிய மணி ஒன்று இருக்கின்றது. அது பத்தொன்பது அடி உயரமுள்ளது. அதனுடைய கீழ்விளிம்பின் சுற்றளவு 60-அடி. அதன் எடை 198-டன்.

218373

1926 அமிருதாஞ்சனம் காலண்டர்கள் 1926

அழகிய மூன்று கலர்களில் ஸ்ரீ கிருஷ்ணன், மோஹினி ஆகியவர்களின் படங்கள், பிரபல சித்திரக்காரர்களால் எழுதப்பட்டவை.

ஒன்று விலை ரு *0—2—0*; டஜன் ரூ. *1—4—0*; *100* ரூ. *9—12—0*.

தினசரி கிழிக்கக்கூடிய ஆபீஸ் காலண்டர் **1**-க்கு அ. **4**. (தபால் பாக்கிங் சார்ஜ் வேறு.)

அமிருதா ஞ்சனம்

ஸர்வ நோய்களுக்கும் ஸித்த ஔஷதம்

அமிருதாஞ்சனம் அபூர்வமான மூலிகைகளிலிருந்து செய்யப்படுகிறது. எல்லா நோய்களுக்கும், தோலைப்பற்றிய சொறி சிரங்குகளுக்கும், வெட்டுக்காயம், இருமல் முதலிய உபத்திரவங்களுக்கும் கைகண்ட மருந்து (விலை அணா பத்து). அமிருதாஞ்சனம் எல்லாவிடத்திலும் கிடைக்கும்.

இதர அமிருதாஞ்சனம் ஔஷதங்கள்

படைத்தைலம். — இது எல்ல விதமான படைகளையும் போக்கும் இரண்டு தடவை உபயோகித்தவுடன். எவ்வித படையும் போய்விடும். விலை டப்பி ஒன்றுக்கு அணா ஆறு.

தந்தசூரணம்.—பல் துலக்க இது நல்லதாள். பல் வியாதி, ஈறுவலி முதலியநோய்கள் நீங்கும். தினந்தோறும் உபயோகித்தால் பல் வெண்மையாகி முகவசீகரமுண்டாகும். விலை டப்பி ஒன்று அணா 2.

அமிருதாஞ்சனம் டிப்போ,

நெ. 7, தம்புசெட்டி தெருவு, ஜார்ஜ் டவுன்,

சென்னைப்பட்டணம்.

THE QUEEN OF HAIR OILS

KAMINIA OIL (Registered)

கூந்தல் வளர் எண்ணெய்களுள் ராணி

காமினியா ஆயில் (ரிஜிஸ்டார்ட்)

இந்தக் காமினியா எண்ணெய் அதிக விலை உயர்ந்த சாமான்களடங்கியது. இது மயிர் உதிர்வதையும் மண்டை குடைச்சலையும் நிறுத்தி, பொடுகைப் போக்கிப் புது மயிர் வளர்ச்சியை விருத்திசெய்து வர்ணம் மாறிய கூந்தலை சுபாவ வர்ணத்திற்குத் திருப்பும். இது வியாபாரிகளுக்கும், மூளை சம்பந்தமாய் உழைப்புள்ளவர்களுக்கும, மாணுக்கர்களுக்கும், மூளையைக் குளிரச்செய்து ஞாபக சக்தியை விருத்திசெய்து தலையின் அடிப்பாகத்தைச் சுத்திசெய்யும். இதுவும் தவிர, காமினியா ஆயில், அதிக வாசனையு முடையது.

நற்சாக்ஷி பத்திரம்

மூவத்துப்புழையி லிருக்கும் மிஸ்டர் பன்ஸோஸ் எழுதுகிருர் :—காமினியா தைலத்தை நான் மிகவும் சந்தோஷத்திடன் உபயோகித்தேன். அதின் அபூர்வமான குணங்களைப் பற்றி உங்களுக்கு வந்தனம் செய்யப் போதுமான காரணத்தைக் கண்டேன். இந்தத் தைலம் அதிக குளிர்ச்சியைக் கொடுப்பதும் தவிர, கொடிய தலைவலியை துரத்துகின்ற நிபுண "டாக்டர்". தயவுசெய்து ஒரு புட்டி காமினியா ஆயில் வி. பி-யில் சீக்கிரம் அனுப்பவும்.

மைசூர் பொருட் காட்சியில் தங்கமெடலும், அலஹாபாத் பொருட்காட்சியில் நல்ல நற்சாக்ஷிப் பத்திரமும் பெற்றிருக்கிறது.

ஒரு தரம் உபயோகிக்கவும்

ஒரு புட்டியின் விலை	ரூ. 1 0 0	வி. பி. தபால் செலவு ரூ.	0 5 0 பிரத்தியேகம்
4—புட்டிகள்	,, 2 10 0	,, ,,	,, 0 14 0 ,,

☞ எச்சரிக்கை :—காமினியா ஆயில் ஒவ்வொரு முக்கியமான பட்டணங்களிலும் கிராமங்களிலுமுள்ள கடைகளில் விற்கப்படுகிறது. உங்களுடைய சமீபத்தில் காமினியா ஆயில் விற்பவர் இல்லாவிடில், கீழ்க்கண்ட விலாசத்திற்கு நேராய் ஆர்டர் அனுப்பவும். ஆனல் உங்களூர் வியாபாரிகளிடம் வாங்கும்பொழுது, தங்களுக்கு அதிக லாபம் கிடைக்கும். வேறு மாதிரியான தெரியாத எண்ணெய்களை இதுதான் நல்ல எண்ணெய் என்று இந்தக் காமினியா ஆயிலுக்குப் பதிலாய்க் கொடுக்க முயற்சிசெய்வார்கள். காமினியா ஆயிலைத் தவிர நல்ல குணமுடைய வேறு எண்ணெய்கள் கிடையாததினல், அவர்கள் முயற்சிக்கு எமாருமல் எப்பொழுதும் இக் காமினியா ஆயிலே வேண்டுமென்று சொல்லிப் பெற்றுக்கொள்ளுங்கள்.

ஸோல் ஏஜண்டுகள் :— ஆங்கிலோ இண்டியன் டிரக் அண்டு கெமிகல் கம்பெனி,

155, ஜும்மா மஸீத், பம்பாய்.

Printed at the B. N. Press & Published by V. Kuppuswami Aiyar, 69, Brodies' Road, Mylapore, Madras.